
கல்கி
KALKI 22-4-79
75 காசு


முகத்தில்
பொங்கட்டும்
திருமணத்தின்
மகிழ்ச்சி
அங்கத்தில்
ஜொலிக்கட்டும்
சாரதாஸின்
திருமண பட்டுப்
புடவை.
சாரதாஸ்
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600002
போன் : 87177
N.S.B. ரோடு,
திருச்சி-620002
போன் : 27077

Kalki Shopping Page

எதிர்ப்பில் வளர்ந்தவர்

பொங்கல் அன்று, கல்கியின் அட்டையை அலங்கரித்து வெங்கட் எல்லோரையும் திகைப்பில் ஆழ்த்தினார்! இன்று தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் இந்திய காப்டன் பதவியைப் பெற்று வெங்கட் அனைவரையும் சந்தோஷத்தில் மூழ்க அடித்து விட்டார்!

● பெங்களூரில் இண்டர் அசோஸியேஷன் கிரிக்கெட் பந்தயம் நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது மேற்கிந்தியத் தீவு ஆட்டக்காரர் கான்ராட் ஹண்ட் பந்தயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். இளம் வெங்கட்டின் ஆட்டத்தில் அருமையான ஸிக்ஸர் ஸ்குயர் லெக்கில் பறந்தது. ''இந்தப் பையன் இந்தியாவுக்காக ஆடுவான்!'' என்றார் ஹண்ட்.

● தலைச்சேரியில் ரஞ்சி கோப்பைப் பந்தயம் நடந்து கொண்டிருந்தது. அதுதான் வெங்கட் முதல் தடவையாக ரஞ்சி கோப்பையில் ஆடிய வேளை. ''என்னை மாதிரி வெங்கட்டும் ஒரு ஆப்ஸ்பின்னர் தானே?'' என்று அலட்சியமாகச் சொல்லிக் கொண்டிருந்த குலாம் முகம்மது இந்த ரஞ்சி பந்தயத்தில் வெங்கட்டின் செஞ்சுரி கண்டு வியந்து போனார். ''இந்தப் பையன் இந்தியாவுக்கு நிச்சயம் ஆடிப் புகழ் சேர்ப்பான்!'' என்றார்.

● வெங்கட ராகவன் அப்பொழுது பொறி இயல் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தார்! பரீட்சை சமயம்! டெஸ்டில் ஆட வேண்டிய நிர்ப்பந்தம்! பிரின்ஸிபாலோ அதற்கு அனுமதி வழங்க மறுத்தார். பரீட்சையா? டெஸ்ட் மாட்சா? மாணவன் வெங்கட்டுக்குத் தர்ம சங்கடம். ஸ்ரீராமன் பிரின்ஸிபாலிடம் போய் ''வெங்கட் நிச்சயம் பரீட்சையில் முதல் ராங்க் வாங்குவான்! டெஸ்ட் ஆட அனுமதி தாருங்கள்! நான் அவனுக்காக 'உறுதிமொழி' தருகிறேன்!'' என்றார். பலன் வெங்கட் டெஸ்டிலும் சோபித்தார், பொறி இயல் கல்லூரியிலும் 'ராங்கு'டன் தேறினார்.

● 1971ம் வருஷம், மேற்கிந்தியத் தீவுக்கும் இங்கிலாந்துக்கும் வெங்கட்டை உதவி காப்டனாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை! அந்தச் சமயத்தில் விஜய்மர்ச்சென்ட் தேர்வுக் கமிட்டி சேர்மன். ''என்ன, வெங்கட்டை உதவி காப்டனாக ஆக்கச் சொல்கிறீர்களே! உங்க தமிழ் நாட்டுக் குழுவுக்குக் கூட வெங்கட் காப்டன் இல்லையே? அது எப்படி முடியும்?'' என்று சால்ஜாப்பு சொன்னார். உடனே தமிழக கிரிக்கெட் சங்கத்தில் விசேஷ கூட்டம் கூடி, பெல்லியப்பா தமிழகக் காப்டன் பதவியை விட்டுத்தர, வெங்கட் அந்தப் பதவியைப் பெற்றார்! பிறகு 1971ம் வருஷ அக்கரைச் சீமை வெற்றி விஜயத்துக்கு வெங்கட் உதவி காப்டனானார்!

● 'தென் பிராந்தியக் குழுவுக்கு வெங்கட் காப்டனா?' சீனியர் ஆட்டக்காரர்களான ஜெயசிம்மா, பட்டோடி நவாப், அப்பாஸ் அலிபெய்க்குக்கு மனக்கசப்பு! அவர்களது ஒத்துழையாமை இயக்கம் வேறு!

வெங்கட் தலைமையில் இயங்கிய தெற்குப் பிராந்தியக் குழு இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்ற வேளையில் இந்தக் குழப்பம்! காப்டன் வெங்கட்டுக்கு ஒரே மனக்கவலை.

''வெங்கட்! பம்பாயிலே இறுதி ஆட்டத்திலே வெற்றி பெற்றுக் கோப்பையைப் பெற்றுவிடு! அந்தச் சாதனையைச் செய்து விட்டால் ஒருத்தரும் உனக்கு இடைஞ்சலாக இருக்க முடியாது!'' என்று தைரியம் சொன்னார் ஸ்ரீராமன். இறுதி வெற்றி வெங்கட்டுக்குப் பெருமையைக் கொணர்ந்தது.

● 1974ம் வருஷம். வெங்கட் 'ஆஃப்ஸ்பின்' பௌலிங்கில் இந்தியா வெற்றிக்குப் பாடுபட்டதைக் கண்டு காப்டன் ஸோபர்ஸ் சொன்னார்: ''உங்கள் ஆஃப்ஸ்பின் வெங்கட்டைக் கொடுங்கள்! உலகத்தின் அத்தனை நாடுகளையும் ஜெயித்துக் காட்டுகிறேன்!''

''வெங்கட்டுக்குப் 'பாட்டிங்' வராது என்று நினைக்க வேண்டாம். கடந்த முறை நியூஜிலாந்து அணி சென்னைக்கு வந்திருந்த போது ஹாட்லி, கேன்ஸ் ஆகிய வேகப்பந்து வீச்சாளர்களை எதிர்த்துத் திறமையுடன் 64 ரன்களை எடுத்தார். இத்தனைக்கும் அன்று அவர் உடல் நிலை முழு சுகத்தில் இல்லை. இவருக்கு டர்பிஷயர் அனுபவமும் உண்டு.

''அண்மையில் நடந்த தியோதர்கோப்பை குறித்த எண்ணிக்கை ஓவர் பந்தயத்தில் வெங்கட்டின் அனுபவம், சிந்தனை, பந்து வீசும் திறன், காப்டன்சியின் நேர்த்தி எல்லாமே இணைந்து வெளிப்பட்டன!'' என்கிறார் வர்ணனையாளர், விமர்சகர் வி. ராமமூர்த்தி.

காப்டன் வெங்கட்டுக்கு நல்வாழ்த்துக்கள்!

— குண்டுமணி



நாவலரிடம் கேட்டபோது:

எங்கே போகிறோம்?

[கேள்விகள் எங்களுடையவை. பதில்கள் திரு நெடுஞ்செழியனுடையவை. சிந்தித்துப் பார்த்துப் பதில்களை ஏற்பதும் ஏற்காததும் வாசகர்களின் தனி உரிமை.]

கேள்வி: தி. மு. க. வுக்கும், அகில இந்திய அ. தி. மு. க. வுக்கும் அப்படியென்ன பெரிய கொள்கை வேறுபாடு உள்ளதாகக் கருதுகிறீர்கள்?

திரு நெடுஞ்செழியன்: தி. மு. க. வுக்கும், அ. இ. அ. தி. மு. க. வுக்கும் கொள்கை — கோட்பாடு — குறிக்கோள் ஆகியவற்றில் மிகப்பெரிய வேறுபாடுகள் மிகவாக இல்லை. ஆனால் அவற்றை இயக்கிச் செல்கின்ற தலைமைகளிடையே மனப் பாங்கு—நடைமுறைப் போக்கு—பிரச்சினைகளை அணுகு முறை ஆகியவற்றில் வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன. தி.மு.க. வின் தலைமை தமிழக மக்களின் நம்பிக்கையையும், நன்மதிப்பையும், அன்பையும் அரவணைப்பையும் இழந்துகொண்டு வருகின்ற தலைமையாகும்; ஆனால் அகில இந்திய அ. தி. மு. க. வின் தலைமை அவற்றை நாளுக்கு நாள் மேலும் மேலும் பெற்றுக்கொண்டு வருகின்ற தலைமையாகும்.


கேள்வி: அ. தி. மு. க. அரசு பெரும்பாலான பிரச்சினைகளை உடனடியாகச் சந்தித்துத் தீர்வு காண முனையாமல் ஒத்திப் போட்டுக் காலதாமதம் ஆன பின்பே தான் தீர்வு காண முயல்கிறது, என்ற தோர் அபிப்பிராயம் பரவலாக நிலவுகிறது. உங்கள் விளக்கம் என்ன?

நெடுஞ்செழியன்: சில எதிர்க் கட்சிகளிலுள்ள, சில பொறுப்பற்ற எதிரிகள் தாங்கள் குறிப்பிடும் அபிப்பிராயத்தை வேண்டுமென்றே பரப்பி வருகின்றனர். அகில இந்திய அ. தி. மு. க. அரசு, உடனடியாகச் செய்ய வேண்டிய செயல்களைச் செய்கிறது. தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளைத் தீர்க்கிறது. ஆர அமர ஆய்ந்து பார்த்துச் செய்ய வேண்டிய பணிகளை, 'அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்தது' என்று பெயரெடுக்காமல் நீடு சிந்தித்து நிறைவேற்றி வருகிறது. அது அந்த மீறி அவசரங் காட்டுவதில்லை. அவசரப் பட்டால், 'ஏதோ ஒன்று மட்டு' என்ற பெயர்தான் ஏற்படும்.

கேள்வி: எம். ஜி. ஆர். அவர்கள்தான் அ. தி. மு. க. என்பது எல்லோரும் அறிந்த உண்மை. இம்மாதிரி ஒரு தனி நபரைச் சார்ந்தே ஒரு கட்சி இருப்பது எவ்வாறு சரியானதாகும்!

நெடுஞ்செழியன்: உண்மை அல்லாத ஒன்றைத் தாங்கள் உண்மை என்று உரைக்கிறீர்கள். அண்ணல் காந்தியடிகள் காங்கிரஸ் கட்சியை எப்படித் தலைமை தாங்கி வழிநடத்திச் சென்றாரோ, பெரியார் அவர்கள் திராவிடக் கழகத்தையும், அறிஞர் அண்ணா அவர்கள் தி.மு. கழகத்தையும் எவ்வாறு தலைமை தாங்கி வழி நடத்திச் சென்றார்களோ, அவ்வாறே புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களும் அ. இ. அ. தி. மு. கழகத்துக்குத் தலைமை தாங்கி வழி நடத்திச் செல்கின்றார் என்பதுதான் உண்மை. புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் தமிழக ஆட்சியை அவர் மட்டுமே அமைத்து விடவில்லை. அமைத்து விடவும் முடியாது. பதினைந்து லட்சம் உறுப்பினர்களின் தொண்டும், பல இலட்சம் ஆதரவாளர்களின் ஒத்துழைப்பும், ஐம்பத்திரண்டு இலட்சம் வாக்காளர்களின் ஆதரவும் சேர்ந்துதான் அ. இ. அ. தி. மு. க. அரசை அமைத்தன.

கேள்வி: தமிழ் நாட்டிலும், ஓரளவு பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திலும் மட்டுமே பரவலாக இருக்கும் கட்சிக்கு அகில இந்திய அண்ணா தி. மு.



க. என்ற பெயரைக் கொண்டிருப்பதன் அவசியம் என்ன?

நெடுஞ்செழியன்: உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளா விட்டாலும், அப்படியொரு நிலை ஏற்பட வேண்டும் என்ற முறையில், எப்படிச் 'சங்கராச்சாரியார்,' 'ஜகத்குரு சங்கராச்சாரியார்' என்று அழைக்கப் படுகிறாரோ, இந்தியா முழுவதும் பரவா விட்டாலும் அப்படியொரு நிலை வர வேண்டும் என்ற எண்ணத்தில் எப்படி இந்தி மொழி' அகில இந்திய ஆட்சிமொழி' என்று ஒரு சிலரால் அழைக்கப்படுகிறதோ அது போலவே, அகில இந்தியா முழுவதும் இன்றைய நிலையில் பரவா விட்டாலும், எதிர்காலத்திலேனும் பரவ வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று அழைக்கப் படுகிறது.

கேள்வி: 'சூதாட்டம் ஒழிக்கப்படும்' என்று அ. தி. மு. க. பிரகடனப் படுத்துகிறது. அ. இ. அ. தி. மு. க. ஆட்சி அமைந்த பிறகுதான் தமிழகத் தில் தெருவுக்குத் தெரு Off Course Betting சீட்டுகள் விற்க Turf agencies தோன்றி யுள்ளன. இதனால் முன்பு குதிரைப் பந்த யத்துக்குப் போய் விளையாடாதவர்கள் கூட ஈர்க்கப் பட்டுள்ளனர். இதற்கு என்ன விளக்கம் அளிக்கி றீர்கள்? இவ்விஷயத்தில் அரசு ஏதேனும் செய்யப் போகிறதா?

நெடுஞ்செழியன்: தமிழகத்திலும், அண்டை மாநிலங்களிலும் பணம் கட்டி நடத்தும் குதிரைப் பந்தயப் போட்டி ஏற்கெனவே இருந்து வந்தபடியே இப்பொழுதும் நீடித்து வருகிறது. அ. இ. அ. தி. மு. கழக அரசு புதிய சூதாட்ட முறை எதையும் புகுத்த வில்லை. சூதாட்டங்களில் ஏற்படும் கேடு களைக் களைய, தமிழக அரசு, சட்டமுறைப் படி மேற்கொள்ள வேண்டிய நடவடிக் கைகளில் கவனம் செலுத்தி வருகிறது.

கேள்வி: கள்ளச் சாராய விற்பனையும், அதற்கான கோஷ்டிச் சண்டைகளும் தற்போது தமிழ் நாட் டில் மலிந்து இடப்பதைக் காண்கிறோம். மது விலக்குச் சட்டத்தை அமுலாக்குவதில் போதிய தீவிரம் இல்லாமல், மதுவிலக்குச் சட்டத்தை மீறுபவர்களுக்கான தண்டனையைக் கடுமையாக் கினால் மட்டும் போதுமா? இதற்காக அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் போகிறது?

நெடுஞ்செழியன்: கள்ளச் சாராயம் காய்ச் சுதல் – விற்றல் – அதனைக் குடித்தல் போன்ற சட்டத்துக்கு மாறுபாடான செயல்கள் காங்கிரஸ் ஆட்சிக் காலத் திலும், அதனை அடுத்தும் எப்படி நிகழ்ந்து வந்தனவோ, அப்படியேதான், இப் பொழுதும் நிகழ்ந்து வருகின்றன. அந்தச் செயல்கள் மலிந்து விட்டன என்று சொல் வதற்கில்லை. சட்டம் கடுமையாக இல்லாத தனால்தான் அந்தச் செயல்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்று அறிவுடையோரால் குற்றம் சாட்டப்பட்டு வந்தது. எனவேதான் இன்றையத் தமிழக அரசு, அந்தச் சட் டத்தை மேலும் கடுமையான தண்டனை யளிப்பதற்கு ஏற்றதாக ஆக்கிற்று. இதில் தவறோ, குறைபாடோ எதுவும் இல்லை.

கேள்வி: ராஜாஜி ஆட்சிக் காலத்தில் இருந்ததுபோல் மதுவிலக்குச் சட்டத்தை மீறுபவர்களுக்காகத் தனி யாக Prohibition Police Wing ஏற்படுத்துவது பற்றி உங்கள் கருத்து என்ன?

நெடுஞ்செழியன்: காவல் துறையில் தனிப் பிரிவு ஏற்படுத்துவது என்பது நிருவாக வசதியையும், நிதி வசதியையும் பொறுத் தது. தமிழக அரசு இது பற்றி ஆய்வு செய்யலாம்.

கேள்வி: அ. இ. அ. தி. மு. க.கழகம் பதவிக்கு வந்த பிறகுதான் தொழில்துறை அமைதி யின்மை (industrial unrest) அதிகமாகி ஏராளமான வேலை நிறுத்தங்களும் தமிழகத் தில் மலிந்துள்ளன. உங்கள் விளக்கம் என்ன?


நெடுஞ்செழியன்: புள்ளி விவரங்கள் தங்களது கருத்துக்கு நேர்மாறான நிலைமையைத் தான் தெரிவிக்கின்றன. இப்பொழுது தொழில்கள் ஆண்டுக்கு ஆண்டு பெருகிக் கொண்டு வருகின்றன. முந்தைய காலங்க ளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இப் பொழுது வேலை நிறுத்தங்களுடைய அளவு குறைவு; கதவடைப்புக்களுடைய அளவு குறைவு. செல்வாக்கிழந்த எதிர்க்கட்சிகள் சிலவற்றின் பொறாமையின் காரணமாக எழுந்துள்ள கூச்சல்களும், கூப்பாடுகளுந் தான் மிகவாகியிருக்கின்றன.

கேள்வி: மிகமிக அவசியமான பல பிரச்னைகள் தமிழகத்தில் இருக்க, தமிழ் எழுத்துச் சீர்திருத் தத்துக்கு அப்படியென்ன அவசரம் நேர்ந்துள்ள தாகக் கருதுகிறீர்கள்?

நெடுஞ்செழியன்: பிற பிரச்னைகள் பல வற்றைத் தீர்ப்பதற்கும், எழுத்துச் சீர் திருத்தம் செய்வதற்கும் எந்தத் தொடர் பும் இல்லை. இரண்டும் ஒரே நேரத்தில் நடைபெற்றுக் கொண்டே இருக்கலாம். எழுத்துச் சீர்திருத்தம், வேறு எந்த ஒரு பிரச்னையைத் தீர்ப்பதற்கும் குறுக்கே நிற்க வில்லை. எழுத்துச் சீர்திருத்தம் அச்சுத் துறையிலும், தட்டச்சுத் துறையிலும் எளிமை ஏற்பட, சீரான நிலைமை ஏற்பட, குழப்பங்கள் தவிர்க்கப்படப் பெரிதும் துணை புரிகிறது. அண்மையில், மலை யாள எழுத்தில் கூட எவ்வளவோ நல்ல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளனர். எழுத்துச் சீர்திருத்தம் எல்லாவகையிலும் தேவைப் படுகின்ற ஒன்று. இப்பொழுது அதனைச் செய்வதிலும் தவறு ஏதுமில்லை. அதனை நாம் செய்வதிலும் தவறுஏதுமில்லை.

கேள்வி: அ. தி. மு. க. அரசு அமைந்த பிறகு செய்துள்ள மிகப் பெரிய சாதனைகளாக எந்த

''கோடை விடுமுறையில் நான் சமையல் கற்றுக்கப் போறேன், நீ?''
''[illegible]''



இரண்டகக்கருதுகிறீர்கள்? 'லஞ்சமும், ஊழலும் அற்ற அரசு அமைத்துள்ள'தாகச் சொல்லப் படுவதைத் தவிர வேறு இரண்டைக் கூறுங்களேன்?

நெடுஞ்செழியன்: அகில இந்திய அ. தி. மு. க. அரசு தமிழகத்தில் பஞ்சம் — பட்டினி — உணவுத் தட்டுப்பாடு — உணவுக் கட்டுப்பாடு — விலை ஏற்றம் ஆகியவை ஏற்படாத — ஒரு சூழ்நிலையை வளர்த்து வைத்துள்ளது.

அண்டை மாநிலங்களிடையே நல்லுறவை ஏற்படுத்தி, நதிநீர் வசதிகளைப் பெற, கொள்கை அளவில் உடன்பாடு காணுவதில் இன்றைய தமிழக அரசு பெரியதொரு வெற்றியைப் பெற்றுள்ளது.

கேள்வி: மக்கள் தி. மு. க. என்ற அமைப்பு திடீரெனத் தோன்றி, தோன்றின விரைவிலேயே மறைந்ததன் அவசியம் என்ன?

நெடுஞ்செழியன்: அறிஞர் அண்ணா மறைந்ததற்குப் பிறகு, ஆதிக்க அதிகார ஆசை கொண்ட தலைமையின் போக்கு தி. மு. கழகத்தைப் பல வகைகளில் ஆட்டிப் படைத்தது. அதனால் உள்ளக் குமுறல் ஏற்பட்டது. தவிர்க்க முடியாத சூழ்நிலையில் அது வெடித்தது. கொண்ட கொள்கைகளின் அடிப்படையில் தொண்டாற்ற மக்கள் தி. மு. கழகம் திடீரென்று தோன்றியது. நீதி — நேர்மை — நாணயம் — உண்மை — உழைப்பு — இலஞ்ச லாவண்யங்களுக்கு இடமளிக்காத தன்மை — கறை படியாத கரம் — மாசுமறு இல்லாத மனம் அ. இ. அ. தி. மு. கழகத்தின் தலைமையிடத்தில் காணப்பட்டதால், மக்கள் தி. மு. கழகம், அகில இந்திய அ. தி. மு. கழகத்தோடு இரண்டறக் கலந்தது. மக்கள் தி. மு. கழகம் மாயமாய் மறைந்து விடவில்லை; ஒத்த கொள்கையைக் கொண்ட கட்சியோடு இரண்டற இணைந்து இருக்கின்றது.

கேள்வி: எம். ஜி. ஆர். அவர்களால் ஊழல் குற்றம் சாட்டப்பட்ட பலர் இன்று அ. தி. மு. க. வில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்களே! எவ்விதத்தில் இது நியாயமானது?

நெடுஞ்செழியன்: குற்றம் சாட்டப்பட்ட காரணத்தாலேயே யாரும் குற்றவாளி ஆகிவிட மாட்டார்கள். குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் தி. மு. க. விலும் இருக்கிறார்கள்; அ. இ. அ. தி. மு. க. விலும் இருக்கிறார்கள். ''குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் குற்றமற்றவர்கள் என்று நிரூபிக்கப்பட்டு விட்டால், என்னை விட மகிழ்ச்சியடைபவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது'' என்று புரட்சித் தலைவர் அவர்கள் சட்டமன்றப் பேரவையிலேயே கூறியிருக்கிறார்கள். நீதி மன்றத்தால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப் பட்டுத் தண்டிக்கப்பட்டவர்கள் யாரையும், அ. இ. அ. தி. மு. க. சேர்த்துக் கொள்ளவில்லை. விசாரணைக் குழுவின் முடிவு புலன் விசாரணையின் முடிவேயல்லாமல், நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்ல. அ. இ. அ. தி. மு. க. வின் செயல்களில் நியாயத்துக்கு மாறான செயல் எதுவும் இல்லை.

பேட்டி: நாகை...

கிரிக்கெட் கற்கலாம்! •32

கோச்: கே. சந்திரசேகர்
படம்: ராஜூ.. தயாரிப்பு: குண்டுமணி

ஆட்டத் தகுதியாளராகப் பயிற்சி

விரைவுப் பந்து வீச்சாளர்களுக்கு வலுவான காலும் கால் சதைகளுக்கு வலுவும் தேவை.

படிகள் மீது ஓட்டம்



முதலில் ஸ்டேடியம் படிகளின் மீது ஏறி ஓடிப் பழகுங்கள். இப்படி படிகளின் மீது ஓட்டத்தை ஒரு நாளைக்கு நான்கைந்து தடவையாக உயர்த்துங்கள்.




கால் மாற்றிக் குதித்தல்

ஒரு காலை உயர்த்திக் குதித்தல். இருபது மீட்டர் தூர அளவுக்கு இப்படி ஒரு காலை உயர்த்திக் குதித்துச் செல்ல வேண்டும். இவ்வாறு தினம் ஐந்தாறு தடவை பயில வேண்டும். பின்கால் சதை வலுப்பெறும்.


இரு கால்கள் தூக்கிக் குதித்தல்

இரண்டு கால்களையும் சேர்த்து உயர எழும்பிக் குதிக்க வேண்டும். இப்படி பதினைந்து மீட்டர் தூரத்துக்குக் குதித்துச் செல்ல வேண்டும். இம்மாதிரி ஒரு நாளைக்கு பத்து தடவை பயில வேண்டும். கால் முழுவதற்கும் வலுவூட்டும்.




தேர்தலுக்காக
இந்திரா காந்தி
அமெரிக்காவிடமிருந்து
பண உதவி பெற்றதாக
முன்னாள் அமெரிக்க தூதர்
மொய்னிஹான்
குற்றச்சாட்டு.


குற்றச்சாட்டுக்கள்
ஜனதா


தமிழக அரசு நாலாயிரம்
ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு
அளிக்கப்போகிறது:- செய்தி
உன்னாலே நான் கெட்டேன்! என்னாலே நீ கெட்டாய்!
அரசியல் நாகரிகம்



கல்கி

1979 ஏப்ரல் 22
சித்தார்த்தி சித்திரை 9
மலர்: 37 இதழ்: 38

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

பிர்லா தந்த பரிசு!

காந்திஜியின் பெருமதிப்புக்குப் பாத்திரமானவரும், அவரது சுதந்திர இயக்கத்துக்குப் பணத்தை அள்ளி அள்ளிக் கொடுத்தவரும், பிரிட்டிஷ் ஆட்சியாளருக்கும் காந்திக்கும் இடையே நல்லெண்ணத் தூதராகப் பல தருணங்களில் பணியாற்றியவரும், காந்தி சொற்படி தமது செல்வத்துக்குத் தர்மகர்த்தாப் பொறுப்பேற்று ஏராளமான சமுதாயப் பணிகளை நிறைவேற்றியவருமான திரு ஜி. டி. பிர்லாவுக்கு 85 வயது பூர்த்தியாகிறது.

தமது பிறந்த நாளின் போது அவர் பல பரிசுகளை நண்பர்கள் உறவினர்களிடமிருந்து பெற்றிருப்பார். ஆனால் அவை எல்லாவற்றையும் விட மதிப்பு மிக்கதான ஒரு பரிசை அவர் தேசத்துக்கு அளித்திருக்கிறார். அதுதான் இந்திய தொழில் வர்த்தகச் சங்கங்களின் பேரவையில் அவர் நிகழ்த்திய பிரசங்கம்.

''ஜனதா அரசின் சாதனைகளை நான் குறைத்து மதிப்பிட விரும்பவில்லை'' என்று கூறிய பிர்லா, அமைச்சரவையில் ஒருமித்த சிந்தனை இல்லை என்பதைச் சுட்டிக் காட்டினார். தொழில்களைத் தேசிய மயமாக்குதல், அரசுத் துறை அடைந்து வரும் நஷ்டங்களைத் தவிர்த்தல் போன்ற அம்சங்களில் அமைச்சர்கள் முரண்பட்ட வாதங்களைச் சமர்ப்பித்து வருகின்றனர். ''உற்பத்தியாகும் பொருளைக் கட்டுப்படியாகாத விலைக்குச் சமூக நலன் கருதி விற்பதால்தான் அரசுத்துறை நஷ்டமடைகிறது என்ற வாதம் செல்லாது. பொக்காரோ எஃகு எந்த விலைக்கு விற்கப்படுகிறதோ அதே விலைதானே டாட்டா எஃகுக்கும் கிடைக்கிறது?'' என்றார் அவர்.

''தொழில்துறையில் திறமைக்கோ உழைப்பாளர்வத்துக்கோ முதலீட்டுக்கோ கச்சாப் பொருள்களுக்கோ பஞ்சமில்லை. ஆனால் கையையும் காலையும் கட்டிப் போட்டு வைத்திருப்பது போன்ற இந்த நிலை மாற வேண்டும்'' என்ற பிர்லா, அரசுக்கு மட்டுமின்றித் தொழிலதிபர்களுக்கும் அறிவுரை வழங்கினார்:

''புதுதில்லியில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றிய கவலையை விட்டொழித்து உற்பத்தியைப் பெருக்குங்கள். பாடுபட்டால் இறுதி வெற்றி நிச்சயம். உற்பத்தி அதிகரிக்க அதிகரிக்க வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம், அபரிமிதமான வரிகள் எல்லாம் படிப்படியாகக் குறைந்து போகும்.''

தேசத்தின் கஷ்டங்களுக்கு விடிவுகாலம் ஏற்பட வேண்டும் என்றால், ''உற்பத்தி, மேன்மேலும் உற்பத்தி என்பதே தாரக மந்திரமாக இருக்க வேண்டும்'' என்ற பிர்லாவின் கருத்துக்குத் தொழிலதிபர்களும் சரி அரசும் சரி செவி சாய்க்க வேண்டும்.

நாட்டின் தேவை கொள்கை ரீதியான பிடிவாதங்கள் அல்ல. உற்பத்தியும் அதன் விளைவான பொருளாதார சுபிட்சமும், மக்களுடைய நல்வாழ்வும்தாம். கடின உழைப்பினால் யாருமே துன்பமடைந்ததில்லை என்ற எண்ணம் மக்களிடையே பரவும் வகை செய்தல் வேண்டும்.

தொழில் வர்த்தகத்துறை பிரமுகர்களைப் பணத்தை உறிஞ்சும் அட்டைகள் என வர்ணித்துத் துவேஷத்தை வளர்ப்பது எளிது. (இப்படிப் பலர் உண்மையாகவே இருந்து தொலைத்து மற்றவருக்கும் கெட்ட பெயர் வாங்கித் தருகிறார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை.) ஆனால் அவர்களுடைய செல்வத்தையும் நிர்வாகத் திறனையும் தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்வது தான் சாணக்கியம்.

அந்தச் சாணக்கியத்தைத்தான் வலியுறுத்தியுள்ளார் இறை உணர்வும் சுயகட்டுப்பாடும் நிரம்பிய பிர்லா.

கோடைக்கு உதவாத நிழல்...



ஒரு நாட்களுக்குப் பிறகு கருமேகம் சூழ்ந்து கொண்டு வந்தது...

மழைத்துளிகள் நிலங்களை முத்தமிடு கின்றன...

'குப்பென்று புறப்பட்ட மண் வாசனை' — நாசித் துவாரத்தினுள் புகுந்து நிமிண்டும் பொழுது உற்சாகத்தின் புறப்பாடு உள்ளுக் குள் பரவசத்தை உண்டாக்காமல் போக வில்லை.

பூவம்மாள் அந்தப் பரவசத்தை விழிகளில் தேக்கி வானத்தைப் பார்க்கிறாள். அப்படியே பார்வையைத் திருப்பி பக்கமாகக் கண்ணுக்கு எட்டியமட்டும் மேடு பள்ளமின்றிச் சமன மாகப் பாளம் பாளமாகப் பிளந்து கொண்டு மழைத் துளிகளுக்காகக் காய்ந்து காத்திருக் கும் நிலப் பரப்பைப் பார்க்கிறாள்.

—இருபத்தி மூன்றைக் கடந்து நாலுக்குள் பிரவேசம் பண்ணி உடம்பைப் படுத்தும் பிரச்னை களோடும் ஏகப்பட்ட கற்பனைக ளோடும் உழல்கிறாள் பூவம்மாள்.. தன்னைச் சிரிக்க வைக்க வேண்டியே கருமேகம் சூழ்ந்து வருவதாக எண்ணுகிறாள் அவள்...

"ஆத்தா.... நடையம்மா தாயே.. போக்குக் காட்டி மேகத் தைத் தொறத்தாம பெருமழையா ஊத்தித் தள்ளி வெள்ளைச்சேலைக் கொடு தாயே — பொங்க வைக்கிறேன்..." — பூவம்மாள் வேண்டிக் கொள்ளுகிறாள்.

—இருமல் வந்து தொண்டையை எரித்துக் கண்களில் நீரை அள்ளி உடம்பை உலுக்கி எடுக்கும் போது மாதையனின் உறக்கம் கலைந்தது.... கலைந்த பொழுது வெளியே மழை பெய்வது தெரிந்தது... புதிய தெம் போடு குறுகலான வாசலுக்கு அப்பால் சடசடப்போடு பூமியைத் தொடுகிற நீர்க் கோடுகளைப் பார்க்கிறான் மாதையன்...

இரண்டு வருடங்களுக்குப் 'பின்னர் இப் பொழுதுதானே இந்தப் பூமி நீரைப் பார்க் கிறது! — அவனுக்குள் மகிழ்ச்சிப் பூக்கள் மலருகின்றன.

கட்டிலை விட்டு எழுந்து வாசல் நிலைகால் படிக்கு வந்து மழையில் நனைந்தபடி தன்னை மறந்து நிற்கும் பூவம்மாளைப் பார்க்கிறான் மாதையன்.

அவளுக்குள் தான் எத்தனை கற்பனைகள்.. ஆசைகள்... கனவுகள்...

—அதை எண்ணும் பொழுது அவனால் கலங்காமல் இருக்க முடியவில்லை.

• • •

மழை பெய்து ஓய்ந்து வானம் வெளுத்து சூரியன் தென்பட ஒளிக்கதிர்கள் மேனியைத் தைக்கின்றன...

கேணியை மாதையன் எட்டிப் பார்த்த பொழுது இரவு முழுக்கப் பெய்து ஓய்ந்த மழையின் பயனாக ஆளுயரத்துக்கு நீர் நிற்பது தெரிகிறது... தொடர்ந்து இனி மழை பெய் யும் என்று அவன் மனம் நம்புகின்ற பொழுது ஈரச் சொதசொதப்பில் குழைந்து போய் நிற்கும் வயற்காட்டு நிலங்களில் நெற்கதிர் களின் தள்ளாமை தெரிகிறது...

எலும்பும் தோலுமாகக் கொட்டடியில் நிற்கும் உழவு மாடுகளைப் பார்க்கிறான் மாதையன். அவைகளைச் சாட்டையால் விளாசி விளாசி இன்னுமொரு மழை பெய்தான பின், தான் ஏர் உழப் போவதை முன் கூட்டியே எண்ணிப் பார்க்கிறான்.

கோபுரமாய் உயர்ந்து என்றைக்கும் வளர்ச்சி குறையாமல் நிற்கும் வைக்கோற் போர் இருந்த இடத்தைப் பார்க்கிறான்... அங்கே பூவம்மாள் அமர்ந்து கொண்டு கொடு வாளால் விறகு பிளப்பது தெரிகிறது...

மருதாயி' — காலமான பின்னர் இந்தப் பெண் குட்டிதானே எல்லா வேலைகளையும் செய்கிறாள்! நெஞ்சில் கனமையோடு உடம்பில் நோயோடு!

—நினைக்கும் பொழுதே மாதையனின் விழிகள் நீர்த்துளிகளைத் தேக்குகின்றன.


• • •

அன்றைய தினம் அவனுக்குக் காக்காய் வலிப்பு வந்த பொழுது மிதமான நீர்த் தூவலை மென்மேகங்கள் நடாத்திக் கொண் டிருந்தன...

பாக்கியத்தாளம்மன் வீதி முழுக்கச் செம்மண் நீர்க்குழம்பின் சொத சொதப்

டயர் பஞ்சரானால் ஜாக் போட்டுத்தான் உயர்த்த வேண்டும். கொஞ்சம் சிரமமான வேலைதான். அமெரிக்காவில் ஒரு மோட்டார் கம்பெனி ஒரு புதிய ஜாக்கைக் கண்டு பிடித்திருக்கிறது. இது ஒரு பை. இதோடு இணைக்கப்பட்ட ரப்பர் குழாயை வாயுப் பாக்கிலோடு (எக்ஸாஸ்ட் பைப்) இணைத்து என்ஜினை ஸ்டார்ட் செய்தால், வாயு, பையில் நிரம்பி, பை பருத்துக் காரை உயரே தூக்கும்.

நியூஸ் வீக் - பாபு







-இந்திரா சௌந்தரராஜன்-

பிற்கு மழைத்துளிகள் உரு மாறிக் கொண்டிருந்தன.

வலிப்பின் தாக்குதலுக்குப் பூவம்மாள் ஆளாகி வீதியில் விழுந்து புரண்டு நெளிந்த பொழுது குடிசைகளின் திண்ணைப் பரப்பில் ஊதிஊதிக் காப்பி டீயைச் சூப்பும் சிலரும்... பீடி சுருட்டை வலிந்து இழுத்துப் புகைக்கும் சிலரும் ஓடி வந்தார்கள்...

''ராசாத்தியாட்டம் வெள்ளை வெளுக்கப் பரங்கிப் பழமாட்டம் இருக்கிற பூவம்மாளுக்குக் காக்கா வலிப்பா? மாதவனே!''

—அதன்பின் மேற்கண்டபடி வியந்து மாய்ந்து சலித்துக் கொள்ளாதவர்கள் இல்லை... அன்றைக்கு மருதாயியை இறுகச் சுற்றிக் கொண்ட கவலை நாளுக்கு நாள் விசுவ ரூபமெடுத்து வளரத் தொடங்கியது... மருந்து மாத்திரை பலன் தரவில்லை...

அய்யனாரப்பனும்... நடையம்மனும் கூட கைவிட்டு விட்டார்கள்... கடன் வளர்ந்து உழவுத் தொழில் நசித்துப் பீடையும் பிணியும் ராஜவாசம் செய்யும் போது அதைத் தாங்கிக் கொள்ள முடியாத மனநிலையில் மருதாயி அரளி விதையை அரைத்து ஆட்டுப் பாலோடு கலந்து விழுங்கி விட்டு மாதையனின் மேல் வந்து விழுந்தாள்... எதையும் தாங்கிக் கொள்ளும் பக்குவமில்லாத அவள் சற்றைக் கெல்லாம் காலத்தோடு கரைந்து விட்டாள்...

அதன்பின் மெல்ல ஊனத்தனமாய், கழியும் காலக் கட்டத்தில் பூவம்மாளை ஆசை நாயகியாக வைத்துக் கொள்ளச் சிலர் விண்ணப்பம் போட்டார்கள்... சிலர் மூணும் தார நாலாம் தார வகையறுக்களுக்குக் கோரிக்கை விடுத்தார்கள்... சிலர் உயர்ந்த மட்டத்தில் பகடி பேரம் நடத்தினர்கள்...

—மொத்தமாக மாதையனின் இதயத்தை ஊசி இல்லாமல் தைத்து நூல் இல்லாமல் கோத்து என்ன வெல்லாமோ செய்து விட்டார்கள்... இத்தனைக்கும் இடையில் 'கடைசி கடைசி கட்டி மாம்பழம்' — என் பதைப் போல் வயிறு வளர்க்க உதவத் தலைப் பட்டிருந்த — அரை காணி நிலம் கூட வானம் அதனை ஏமாற்ற... அது அவனை ஏமாற்றி விட்டது...

—இப்பொழுது அது மீண்டும் உதவ முற்படும் சூழல்!

• • •

ஓர் ஆயிரம் ரூபாய் இருந்தால், ஏர் உழ ஆரம்பிக்கலாம் என்னும் நிலை! — அது இல்லாத பட்சத்தில் 'விளைச்சல் அது இது' என்று நினைக்கக் கூட முடியாத சூழல்... எப்பாடு பட்டாவது கடன் பட்டேனும் இந்த நல்ல சூழலைப் பயன்படுத்திக் கொள்ளத் துடித்துக் கொண்டிருந்தது மாதையனின் உள்ளம்...

யாரிடம் போய்ப் பணத்துக்கு நிற்பது?

நடையம்மன் கோயிலைத் தாண்டி மாதையன் நடக்கும் பொழுது மணி சுமார் பத்தரை இருக்கும்... விசாலமான கோயில் நிலப்பரப்பில் உயர வளர்ந்து நிற்கும் விளா மரங்களின் அசைவு மாதையனுக்குள் பல விதமான நினைவுகளைப் புரட்டிப் பார்க்கின்றன...

ஒரு காலத்தில் அந்தக் கோயில் நிலம் மாதையன் தகப்பனாரின் சொத்தாக இருந்தது... உயிரோடு அவர் இருந்த காலத்திலேயே நடையம்மனுக்கு என அதை அவர் எழுதி வைத்து விட்டார்... ஊரே அவரது உதார குணத்திற்குப் பாராட்டைப் பொழிந்து தள்ளியது... பாராட்டியவர்களில் அனேகர் பரலோகப் பிராப்தி அடைந்து விட்ட போதிலும் கல்யாண சுந்தர முதலியாரைக் காலம் இன்னும் அழைத்துக் கொள்ளவில்லை. அவரை அண்டித்தான் மாதையன் போய்க் கொண்டிருந்தான்.

''முதலியார் அண்ணன் இருக்காருங்களா?'' — மாதையனின் கேள்விக்குப் பதிலாக ''இருக்கேன் யார் வேணும்?'' — என்று கூறிக் கொண்டே முதலியார் அறிமுகமானார்.

எதிர்காலச் செல்வங்கள்

ஆறு வயது நிரம்பிய என் மகன் ரகு, தாயில்லாக் குழந்தை. அவனுக்கு ஐந்து வயதில் அவனது தாய் இறந்து விட்டாள். தினமும் 'அம்மா எங்கே? அம்மா கிட்டே போகணும்' என்பான். நானும் விடாமல் 'அம்மா சாமிகிட்டே ஆகாயத்திலே இருக்காள்'னு சொல்லிச் சமாதானப் படுத்துவேன்.

என் பெற்றோர்கள் எனக்கு மறுமணம் செய்ய ஏற்பாடு செய்தார்கள். ரகுவிடம் 'உனக்குக் கூடிய சீக்கிரம் இன்னொரு அம்மா வரப் போறாங்க'ன்னு சொன்னேன். ரகு 'அம்மாகிட்டே சொல்லிட்டியா'ன்னு வெடுக்கென்று கேள்வி கேட்டான். வாசலில் பறந்து கொண்டிருந்த பட்டம் ஒன்றைக் காட்டி 'இதன் மூலமா உங்கம்மாவிற்குச் சொல்லி அனுப்பி விடுகிறேன்' என்று சமாதானப் படுத்தினேன்.

அன்று மாலை டேபிளில் இருந்த ரூ. 5 - காணவில்லை. கோபத்தோடு வாசலுக்கு வந்தேன். ரகு பட்டம் விட்டுக் கொண்டிருந்தான். அவன்தான் ஐந்து ரூபாயை எடுத்தான் என்பது புரிய எனக்கு நேரமாகவில்லை. கோபத்தில் செம்மையாக அடித்து விட்டு 'உன் மூஞ்சிக்குப் பட்டம் வேறயா?' என்று கடிந்து கொண்டே நூலைச் சுற்றியவாறு பட்டத்தைக் கீழே இறக்கினேன். அதிலே அவன் தன் கையால் எழுதிய கடிதத்தைப் பட்டத்தில் கட்டியிருப்பதைப் பார்த்துப் படிக்க ஆரம்பித்தேன்.

''அம்மா! அப்பா உனக்குத் தெரியாமே இன்னொரு கல்யாணம் செஞ்சுக்கப் போறாராம். நீ சாமிகிட்டே போய் ரொம்ப நாளாச்சு. நீ ஏமாந்து போகாமே இருக்கச் சாமியை ஏமாத்திட்டு எங்கிட்டே வந்துடு. எனக்கு நீதான் வேணும் - இன்னொரு அம்மா வேணும்!''

இதைப் படித்தவுடன் ரகுவைக் கட்டியணைத்து முத்தம் கொடுத்தேன். கடிதம் குழந்தையின் உள்ளத்தைப் பிரதிபலித்தது. என் மனமும் மறுமணம் என்ற மாயையிலிருந்து விடுபட்டது.

- எம். எஸ். பீமாராவ்.



''நான் மாதையனுங்க...''

''மாதுவா... வா! — நல்லா இருக்கியா? — உன் பொண்ணுக்கு நீ இன்னும் கல்யாணம் பண்ணி வைக்கலேன்னு கேள்விப் பட்டேன்... ஏம்பா?'' — எடுப்பிலேயே பிரச்னைக்குரிய கேள்வியை முதலியார் கேட்டார்.

சங்கடத்தோடு, ''தெய்வம் கண்ணைத் தொறக்கலீங்களே'' — என்றான் மாதையன்... உபசார சம்பாஷணை முடிந்ததும் விஷயத்துக்கு வந்தான் மாதையன்.... மிகுந்த நிதானத்தோடு ''ஐயா! ஒரு ஆயிரம் கடனு வேணும்... பயிர் செய்ய'' — என்ற பொழுது முதலியார் சுருங்கிப் போன முகத்தில் சிரிப்பை ஏற்றினார். அந்தச் சிரிப்போடு அவனைப் பார்த்தவராக, ''பொண்ணு கல்யாணத்தைக் கடன்பட்டாவது முடிக்கிறதை உட்டுட்டு, பயிர் பச்சைக்குக் கடன் கேக்கறியே? எதுடா மொதல்ல செய்ய வேண்டியது?''—என்று அதட்டலாகக் கேள்வியைக் கேட்டார்.

''வாஸ்தவம் தாங்க... மாப்பிள்ளை அமையணுங்களே...''

''மாப்பிள்ளை அமைஞ்சாக் காரியத்தை முடிச்சுடுவையா?''

''ஐயா... நான் நாலை வெறட்டறதே அந்த ஒரு காரியத்துக்காகத் தாங்க...''

''அப்ப ஒண்ணு செய்..., சொத்து பத்தை நம்பிப் பொழப்பு நடத்தறதை வுட்டுட்டு அதையே வித்தோ..., இல்லாட்டி ஒன் பொண்ணைக் கட்டிக்கப் போறவனுக்கு ஒனக்கு இருக்கிற சொத்தை எழுதி வைக்கிறேன்னு சொல்லிப்பாரு! கட்டாயமா எவனாவது அவளைக் கட்டிக்க முன் வருவான்... வந்த பின்னாடி தயங்காம முதல் தாரமோ, இரண்டாம் தாரமோ கல்யாணத்தை முடிச்சுக் கொடுத்துடு...''

''ஐயா நீங்க சொல்றது சரிதான்... எனக்கு இருக்கிற ஒரே பிடிமானமே அந்த அரைக் காணியும் இரண்டு நோஞ்சான் காளையும் தானுங்களே... அதை நான் பூவுக்குன்னு தாரை வாத்திட்டா பின்னாடி நான் என்னுங்க செய்யறது...''

''ஒன்னைப் பத்தியா இப்பக் கவலை? வாழ்ந்து முடிஞ்ச போன உனக்கும்..., வாழ ஆரம்பிக்கப் போற அவளுக்கும் வித்தியாசம் இல்லையா? நோவுல நைஞ்சு போய்க் கிடக்குற அந்த மனசுக்கு இப்ப ஒரே ஆறுதல் கல்யாணம்தான்டா... அதுவும் நடக்காதப்ப சலிச்சுப் போய் ஆத்தாக்காரி மாதிரியே அரளியை அரைச்சு விழுங்கிடு என்னடா பண்ணுவே?''

—முதலியாரின் கேள்வியைத் தொடர்ந்து மாதையனின் இதயம் ஒருமுறை அதிர்ந்து பின் நின்று மறுபடியும் ஓடத் தொடங்கியது. ... சிந்தனையில் விறுவிறுப்புக் கூடியது! இது நாள்வரை சிந்திக்க ஏதோ ஒரு தடை இருந்ததைப் போலவும் இப்பொழுது அது விலகிக் கொண்டு விட்டாற் போலவும் தோன்றியது..

''ஐயா... நீங்க சொல்றது நூத்துக்கு நூறு சரிதான்... ஆனாலும் என் பாரம்பரிய சொத்தை இழக்க மனசு வர மாட்டேங்குதுங்க! அதை இதுவரைக்கும் எனது பரம்பரையிலே யாரும் கூறு போட்டதில்லீங்க... அடமானம் கூட வெச்சதில்லீங்க... அதான் யோசிக்கிறேன்...''

—முதலியார் அவனது பேச்சைக் கேட்டுச் சலிப்புடன் சிரித்துக் கொண்டார்...

—முதலியார் எவ்வளவு பேசியும் மாதையன் மனம் சமாதானப் படாமல் உழன்று கொண்டேயிருந்தது.

—கேள்விகளுக்கும், சிந்தனைகளுக்குமிடையில் அவனது மனம் தெளிந்தது... அதுவே ஒரு குமுறலாக உருமாறிய போது...

''ஐயா..., அந்தக் காலத்துலே எத்தனை பேருக்கு என் ஆயியும் அப்பனும் ஒபகாரம் பண்ணியிருப்பாங்க... நானே எத்தனை

பேருக்கு நாத்துக் கணக்குல ஒதவி பண்ணி விருப்பேன்... ஒருத்தர் கூட இப்ப எனக்கு உதவி பண்ண முன் வரலீங்களே... வசதியா இருக்கச்சே கூடவா ஒரு ஏழையோட பொண்ணெ ஒபகாரமா நன்றிக்காகக் கட்டிக் கிடக் கூடாது...''

—முதலியாருக்கு மாதையன் பேச்சு வேதனையைத் தந்தது... அவனது நிலையை எண்ணுங்கால் மனிதாபிமானம் மிகுந்த எவருக்கும் மனவருத்தம் ஏற்படவே செய்யும். அந்த வருத்தத்தினூடே தன்னுடைய நன்றியை உதவியை எப்படி வெளிக் காட்டலாம் என்று யோசிக்கத் தொடங்கினார் கல்யாண சுந்தர முதலியார்.

யோசனை முற்றிச் செயல்பாட்டை அடைந்து பூவம்மாளின் எதிர் காலத்துக்கு அழகிய ஓர் இளைஞனைப் பரிசாகக் கொண்டு வந்து நிறுத்தியிருந்தது...

''மாதைய்யா... உனக்கு என்னால செய்ய முடிஞ்ச உபகாரம் இவ்வளவு தான்... பையன் ரொம்ப நல்ல பையன்.., பூவம்மாளை நல்லா வெச்சுக் காப்பாத்துவான்... அவ நோயையும் குணப்படுத்துவான்... அப்படிப் பட்டவன்போல நிலத்தையும் சொத்துபத்தையும் எழுதி வெச்சுக் கல்யாணத்தைச் சட்டு புட்டுனு முடி...'' — என்றார் கல்யாண சுந்தர முதலியார்! மாதையன் பூவம்மாளைப் பார்த்தான்... அவளுக்குள் திருமண எதிர் பார்ப்புகள்! — பார்வையைத் திருப்பி நிலப் பரப்பைப் பார்க்கிறான்... சரச் சொத சொதப்பு பாதி காய்ந்து விட்டிருந்தது...

அது முழுவதுமாகக் காய்ந்து முடிவதற்குள் பூவம்மாளின் திருமணம் ஈடேறியது..

நரகத்திற்குள் ஒரு சொர்க்கத்தை நிறுவி அதனுள் அவளைக் குடியேற்றி விட்டாற்போல், ஒரு நோயோடு என்றைக்கும் விலகாமல் இறுகப் பற்றிக் கொண்டிருக்கும் ஏழைமைத் தனத்தோடு அவளை அவளின் நெடுநாளைய எதிர்பார்ப்புக்குரிய வாழ்க்கைக்குள் நுழைத்து விட்ட தெம்போடு மாதையன் கல்யாண சுந்தர முதலியாரைப் பார்த்தான்.. அவரே திருமணத்திற்கான அல்ப சொல்ப செலவுகளை ஏற்றிருந்தார்!

பூவம்மாள் கணவனுடன் இரட்டைக் காளை பூட்டிய பாரம் சுமக்க உதவும் மாட்டு வண்டியில் ஏறினாள்...அவளது தலை தாழ்ந்தே இருந்தது... கூடச் சிலரும் ஏறினார்கள்... புகுந்த வீட்டிற்குப் போய் முதல் மூச்சைத் தொடர்ந்து மூன்று மூச்சுக்களைச் சந்திக்கப் போகின்ற வெட்க உணர்வு தலையை அமுக்கிக் கொண்டிருந்தது...

வெறுமை சூழ்ந்த மனத்தோடு..., பூவம்மாளுக்கு ஒருவழியைக் கண்டு விட்ட இனம் புரியாத நிம்மதியோடு அவனது கால்கள் அந்த ஒற்றையடிப் பாதையில் இறங்கி நடக்க ஆரம்பித்தன...

எங்கே போவது என்பதே தெரியாத நடை அது...



டாக்டர் ராகவன் அமெரிக்கா சென்றிருந்தபோது விஸ்கான்ஸின் பல்கலைக் கழகத்தின் நூலகத்தில் உள்ள சமஸ்கிருத நூல்களின் பட்டியலைப் பார்வையிடுகிறார்.

● ஜடாயு மோக்ஷம் பற்றிப் பேசி விட்டு வந்த டாக்டர் ராகவன் அன்று உணர்ச்சி வசப்பட்டார். ஏறத்தாழக் கண் கலங்கும் நிலைக்கே வந்து விட்டார். வீடு திரும்பியவர் மனைவியிடம் நடந்ததைக் கூறினார். மறுநாள் காலை அவர் மகன் மேட்டூரிலிருந்து வந்த போது தகப்பனார் ஏற்கெனவே மோக்ஷம் அடைந்து விட்டிருப்பதைக் கண்டார்!

சென்னை மியூஸிக் அகாதமிக்கு அலாதியான ஒரு கௌரவத்தை அதன் காரியதரிசியாக விளங்கியதன் மூலம் அளித்து வந்தார் டாக்டர் ராகவன். சங்கீத ஞான பண்டிதர். சாஹித்ய கர்த்தா. காஞ்சி முனிவரால் ''கவி கோகில'' என்று பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றவர்.

சமஸ்கிருதத்தில் மேதை. சென்னை பல்கலைக் கழகத்தின் சமஸ்கிருதப் பிரிவின் தலைவராகத் திகழ்ந்தவர். எத்தனையோ அகில உலக சமஸ்கிருத கலை ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். சமஸ்கிருத இலக்கியம் பற்றியும் இந்தியப் பண்பாடு குறித்தும் ஏராளமாக எழுதிக் குவித்தார். சாகித்திய அகாதமி, சங்கீத நாடக அகாதமி ஆகியவை அவரைக் கௌரவ அங்கத்தினராக்கிப் பெருமித முற்றன.

கிழக்கு ஜெர்மனியில் மே மாதம் நடக்கவிருக்கும் உலக சமஸ்கிருத மகாநாட்டில் கலந்து கொள்ள ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்தார். ராகவன் பங்கேற்றதால் பயனடைய அம்மகாநாட்டுக்குக் கொடுத்து வைக்கவில்லை எனில் பாரதத்தின் பேரிழப்பு பற்றிக் கூறவா வேண்டும்?

அத்தியாயம் 31

நித்யாவிடம் அலுப்புத் தட்டியிருந்த ஆனந்துக்கு ஒரு மாறுதல் தேவைப்பட்டது. ஃபோனை எடுத்து நெம்பரைச் சுழற்றினால் போதும் பல நித்யாக்கள் அவன் கூப்பிட்ட குரலுக்கு வந்து நிற்பார்கள். ஆனால் அவனுக்குக் 'கால்கேர்ல்'களிடம் சுவாரஸ்யம் குன்றி விட்டது. முகரப்படாத புதுமலராக ஒருத்தியை அடைய எண்ணினான். பிரமீளாவின் அழகு அவனை ஈர்த்தது என்றால் அவளுடைய குடும்ப கௌரவம் அவனுக்குக் கிறக்கத்தைத் தந்தது. தன் நண்பனுடைய காதலி என்பதில் ஒரு ஜிலுஜிலுப்பு உண்டாயிற்று. உடலுறவால் ஏற்படக் கூடிய இன்பத்தை விட, நண்பனுக்குத் துரோகம் இழைப்பதால், கௌரவமான ஒரு குடும்பப் பெண்ணைக் கெடுத்து மாசு உண்டாக்குவதால் அவனுக்குள் உருவாகப் போகிற ஆனந்தம் மிக அதிகம்! அந்த எதிர்பார்ப்பிலேயே அவன் கரங்கள் பரபரத்தன. இதயம் படபடத்தது. உடலிலே இலேசான நடுக்கம் கண்டது.

அறைக்குப் போய் ஓய்வு எடுத்துக் கொள்ளச் சம்மதித்ததன் மூலமே பிரமீளா அவனுடைய ஆசைக்கும் அடிபணிய ஒப்புதல் அளித்து விட்டதாக அர்த்தம் பண்ணிக் கொண்ட அவன், அறைக் கதவைத் தாளிட்டு விட்டு அவள் கரத்தைப் பற்றினான். தன்பால் அவளை இழுத்தான். சுதந்திரமாக இயங்கிய மற்றொரு கரத்தை அவன் நெஞ்சின் மீது வைத்துத் தன் உடலை விலகி இருக்கச் செய்தாள் பிரமீளா. கண்களில் குறும்பு எட்டிப் பார்க்கப் புன்னகைத்து ''அடடா! என்ன அவசரம்?'' என்றாள். ''ஐ நீட் எ ஷவர். உப்புத் தண்ணீரில் குளித்து உடம்பெல்லாம் பிசுக்கென்று ஒட்டுகிறது.''

''அதெல்லாம் அப்புறம்'' என்றான் ஆனந்த். ''மொத்தமாகச் சேர்த்துக்குளித்துக் கொள்ளலாம்; சத்யாவுக்கும் சேர்த்துத் தலை முழுகலாம்'' என்று கூறி அவளைச் சுற்றி அணைக்கத் தன் இரு கைகளையும் நீட்டினான். நீண்ட ஒரு கரத்தை அவளுடைய விரல்கள் மெல்லத் தடவித் தந்தன. ஆனந்துக்கு மேனி சிலிர்த்தது. மலர் மாரி பொழிவது போல் சில கணங்கள் இருந்தன. அடுத்த ஒரு வினாடியில் பத்துப் பேரிடிகள் ஒருசேர அவனைத் தாக்கின. அவன் மடேரென்று தரையில் விழுந்து கிடந்தான். முதுகெலும்பின் வின்னென்று வலித்தது. என்ன நேர்ந்தது தனக்கு என்று புரிந்து கொண்டு அவன் இடுப்பைப் பற்றியபடி நிமிர்வதற்குள் கலகலவென்ற சிரிப்பொலி அவன் செவிகளைத் தாக்கியது.

''ஜூடோ!'' என்றாள் பிரமீளா. ''சும்மா தமாஷுக்கு ஒரு ஸாம்பிள். பயந்து விடாதீர்கள்!''

அவன் வெட்கத்தை மறைத்துக் கொண்டும் கோபத்தை ஒதுக்கிக் கொண்டும் புன்னகை புரிந்தான். கண்கள் பளபளக்க, ''தென்றலில் களிப்பதை விடப் புயலுடன் போராடுவது எனக்குப் பிடிக்கும்'' என்றான்.

''அதைச் செய்யுங்கள்'' என்றாள் பிரமீளா. ''இந்தப் புயலும் அதை வரவேற்கும்! ஆனால் முதலில் நான் குளித்து விட்டு வர வேண்டும்'' என்று கூறி அவன் எழுந்து நிற்பதற்கு முன் தனது கைப்பையை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

அவன் அவளைப் பின்தொடர்ந்து பிடிக்க முயலவில்லை. பிரமீளா தன்னிடமிருந்து தப்பி வெளியே ஓட நினைக்கவில்லை, அந்த அறையை யொட்டியே இருந்த குளியலறைக்குள்தான் புகுந்திருக்கிறாள் என்பதில் பெருமையடைந்தான். அவள் தன்னுடைய கம்பீர ஆண்மைக்கு வசப்படவில்லையெனில் அறைக் கதவைத் திறந்து கொண்டு காரைத் தான் நிறுத்தி வைத்திருக்கும் திசை நோக்கியல்லவா ஓட வேண்டும்? அவ்வாறின்றிப் பிரமீளா அவனுக்காகத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளப் போகிறாள். பட்டுப் போன்ற தன் மேனியை மேலும் பளபளப்பாகவும் வழுவழுப்பாகவும் ஆக்கி மணமூட்டிக் கொண்டு வரப் போகிறாள். இது தன் ஆண்மைக்கு வெற்றியன்றி வேறென்ன?'' கர்வம் தலை தூக்கியது.



குளியலறையில் ஷவர் திறந்து விடப்பட்டு நீர் சொரியும் சத்தம் கேட்டது. கட்டிலை மூடியிருந்த பெரியபோர்வையை அகற்றி அப்பால் இருந்த 'வார்ட்ரோப்' அலமாரிக்குள் சுருட்டித் திணித்தான்.

அவள் குளித்து முடித்து மீண்டும் மாக்ஸி அணிந்து கைப்பையிலிருந்த அலங்காரச் சாதனங்களால் தன் மேனிக்குப் புது மலர்ச்சியும் மணமும் ஊட்டிக்கொண்டு கதவைத் திறந்த போது விரிப்புடன் கூடிய மெத்தை மீது குறுக்காக முக்கால் நிர்வாணமாக அவன் விழுந்து கிடந்தான். இடையில் ஓர் அண்டர் வேர் மட்டுமே அவன் ஆண்மையை மறைத்தது. எழுந்தோ நிமிர்ந்தோ அவள் இருக்கும் திசையைக் கூட நோக்காமல் வலக்கரம் நீட்டி, ''கமான் மை டார்லிங்!'' என்றான். இடக்கரம் தரையில் இருந்த ஆஷ் டிரே நோக்கி நீண்டு சிகரெட்டை அணைத்தது. ''கொடியாக என் மீது படர வேண்டும் நீ, சரிதானா?''

''கெட் அப்!'' என்றாள் பிரமீளா அதட்டலாக.

''எதுக்கு என்னை எழுந்திருக்கச் சொல்றே? யூ கம் டு மீ!'' என்றான்.

''அயோக்கியப் பயலே எழுந்திருடா'' என்று பிரமீளாவின் குரல் உயர்ந்தது.

அவன் சிரித்தான். ''பார்த்தியா, அதற்குள் மறந்தே போயிட்டேன்! நீ கொடியாக என்மேல் படர மாட்டே, புலியாகத்தான் என்மீது பாய்வே; நான் உன்னை அடக்கணும்



''பிங்கி! பிளீஸ், பிளீஸ்; டோண்ட் ஷூட்'' என்று கெஞ்சினான் ஆனந்த். அது நிஜத் துப்பாக்கி, தோட்டாக்கள் நிரம்பிய துப்பாக்கி என்று நிரூபணமானதும் அவனுக்குக் கதி கலங்கியது.

''நான் சொல்கிறபடி நீ கேட்டால் சுடமாட்டேன்'' என்றாள் பிரமீளா.

''என்ன வேணுமானாலும் செய்கிறேன்.''

''ஆல்ரைட்! முதலில் அந்த பெட்ஷீட்டை நார் நாராகக் கிழி!''

மெத்தை விரிப்பை எடுத்து அவள் கட்டளைப்படியே செய்தான்.

''உன் இரு கால்களையும் சேர்த்துக் கட்டி முடிச்சுப் போட்டுக்கொள்'' என்று அடுத்த உத்தரவைப் பிறப்பித்தாள் அவள். ஆனந்த் அதனையும் நிறைவேற்றினான். ''முடிச்சு இறுக்கமாக இருக்கட்டும்'' என்றாள் பிரமீளா.

அடுத்து, நாடா நாடாவாகக் கிழிக்கப்பட்டிருந்த பெட்ஷீட்டில் இன்னொரு நாடாவை எடுத்துச் சுருக்கு

கீ.ராஜேந்திரன்

முடி போடச் சொன்னாள். அவனும் அவ்வாறே செய்தான். மேஜை டிராயரைத் திறந்து அதிலிருந்த ஒட்டலின் லெட்டர் பேப்பரையும் பால் பாயிண்ட் பேனாவையும் எடுத்துத் தந்தாள். ''எழுது'', என்று உத்தரவு போட்டு அவன் என்ன எழுத வேண்டும் என்பதையும் சொன்னாள்: ''நான் இனிமேல் பெண்களைக் கற்பழிக்க முயல மாட்டேன். பெண்களைச் சகோதரிகளாக மதித்துப் போற்றுவேன். நண்பனுக்கு நம்பிக்கைத் துரோகம் பண்ண மாட்டேன். அவன் காதலியை என் வசப்படுத்த முயல மாட்டேன்.''

லையா? அது தானே உனக்குப் பிடித்தமான விளையாட்டு?'' என்று கூறியவாறு எழுந்தான். அப்போதுதான் அவள் கரத்திலிருந்த கைத்துப்பாக்கியையும் அவன் பார்த்தான். அவன் கண்கள் அதிர்ச்சியிலும் திகைப்பிலும் திகிலிலும் அகன்று விரிந்தன. உடல் ஒரு முறை தூக்கிப் போட்டது. ''என்ன பிங்கி இது?'' என்று மிரண்டவன், சற்றே சமாளித்து, ''இதுவும் உன் விளையாட்டுக்களில் ஒன்றா?'' என்றான்.

''இரண்டு தலையணைகளையும் கட்டிலின் இந்தப் பக்கமாக வை! நீ அப்பால் அந்த மூலைக்கு நகர்ந்துகொள்'' என்றாள் பிரமீளா. அவன் உத்தரவிற்குக் கீழ்ப்படிந்ததும் துப்பாக்கியை ஒன்றன் மீது ஒன்றாக இருந்த இரு தலையணைகள் மீதும் அழுந்த வைத்துச் சுட்டாள். ஓசை அதிகம் எழவில்லை. நாலாபுறமும் பஞ்சு தூள் பறந்தது!

''விளையாட்டா, வினையா இது?'' என்று கேட்டான்.



மேலட்டை:

குடும்பத்தலைவி ஸ்ரீமதி மீனுவுக்குப் பொம்மைகள் சேகரிப்பது பொழுதுபோக்கு. நாய் வளர்ப்பதில் பிரியமுள்ள அவர், படத்தில் பொம்மை நாயை வைத்திருப்பதன் காரணம் உண்மை நாயினிடம் பயம் — அவருக்கல்ல, புகைப்படக்காரருக்கு!

வண்ணப்படம்: நரேஷ்

அவன் தயங்கினான். ''எழுதுடா ராஸ்கல்!'' என்றாள் பிரமீளா துப்பாக்கியை உயர்த்தி. அவன் பயந்து போய், பொங்கிய ஆத்திரத்தையெல்லாம் அடக்கிக் கொண்டு பரபரப்புடன் எழுதினான். பிரமீளா இடது கரத்தால் தன் கைப்பையைத் துழாவி அதிலிருந்து ''ஸெல்லோ டேப்' உருளை ஒன்றை எடுத்தாள். சேரிகளுக்கோ அல்லது கிராமங்களுக்கோ அவள் சுகாதார அல்லது குடும்ப நலப் பிரசாரத்துக்காகப் போகும் போது வரைபடங்களைச் சுவரிலோ கதவிலோ சற்றுநேரம் ஒட்டி வைத்து விளக்கம் தருவாள். இதற்காக ஸெல்லோ டேப் உருளை ஒன்றை அவள் தன் கைப்பையில் எப்போதும் வைத்திருப்பது வழக்கம். அது இப்போது ஆனந்தை நோக்கிப் பறந்து சென்று அவன் நெஞ்சைத் தாக்கியது. ''நீ எழுதியதை அந்த இடத்தில் ஒட்ட வைத்துக்கொள்!'' என்றாள்.

ஆத்திரம் கொப்பளிக்க ஆனால் அதை வெளிக் காண்பித்துக் கொள்ள இயலாதவனாக ஸெல்லோ டேப்பைக் கிழித்து அதன் பசையுள்ள பக்கத்தால் தான் எழுதிய காகிதத்தைத் தன் நெஞ்சிலேயே வைத்து ஒட்டிக் கொண்டான்.

ரிப்பனிலிருந்த ஸ்ரிப்பில் அவன் ஏற்கெனவே சுருக்கு முடி போட்டு வைத்திருந்தான். அதைக் கரங்களில் மாட்டிக் கொள்ளச் செய்தாள். துப்பாக்கியால் அவனைக் குறி பார்த்தவாறே ரிப்பனின் மறுமுனையைப் பிடித்து இழுத்தாள். நாடாவின் சுருக்கு இறுகியது. முன்பே கட்டுப் போட்டிருந்த கால்களை மடக்கச் சொன்னாள். துப்பாக்கியைப் பாய்ந்து எடுத்துக் கொள்ள வசதியான இடத்தில் வைத்து விட்டு அவள் கைகளையும் கால்களையும் இணைத்துப் பிணைத்தாள். அவன் பற்களை நறநறவென்று கடிப்பது கேட்டது.

துப்பாக்கியைக் கைப்பைக்குள் போட்டுக் கொண்டாள். ''நான் போய் வருகிறேன் ஆனந்த்! கற்பழிப்புக் காட்சிகள் சினிமாவில் வருவது போல் எப்போதும் அமைவதில்லை, தெரிகிறதா? ஹோட்டலைச் சேர்ந்த பணியாள் யாராவது வந்து உன்னை விடுவிப்பான். ஆனால் அதற்கு முன்பு உன் நெஞ்சில் நீயே எழுதி ஒட்டிக் கொண்டிருப்பதை அவன் படித்துப் பார்த்துச் சிரிப்பான். வரட்டுமா? டாட்டா!''

அவள் கதவு நோக்கி நடந்தாள். அவனுடைய சிரிப்பொலி அவளைத் தொடர்ந்தது. அசாதாரணமான, காரணமற்ற, சந்தர்ப்பத்துக்குப் பொருந்தாத அந்தச் சிரிப்பு அவளைத் துணுக்குறச் செய்தது. ஒரு கணம் தயங்கி நிதானித்தாள்.

''பிங்கி!'' என்று அவன் அடித் தொண்டையில் கறுவுவது போல் அழைத்தான். ''நான் உன்னை வசப்படுத்த நினைத்தேன், ஆனால் நீ என்னை வென்று விட்டதாக எண்ணுகிறாய். தவறு பிங்கி! நான் முன்பே ஜெயித்து விட்டேன். தோல்வியைத் தழுவுகிறவள் நீதான்!''

திகைப்பை ஒளித்து, கோபத்தைத் தேக்கி அவள், ''என்னடா உளறுகிறாய்?'' என்று அதட்டினாள்.

''உளறுகிறேனா? என்னுடைய பிரீஃப் கேஸ் அதோ மேஜை மேல் இருக்கிறதே, அதைத் திற! மேலாக ஒரு கவர் இருக்கும், எடுத்துப் பிரித்துப் பார்!''



''அங்கே என்ன எழுதியிருக்கு? படி பார்க்கலாம்.''

''படித்தால், படிச்சமுட்டாள் என்பாய். படிக்காவிட்டால் படிக்காத முட்டாள் என்பாய்! தெரியும் உன் ஜாலக்கு! சரிதான் போடா முட்டாள்!''

அவள் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொள்ள அப்படியே செய்தாள்.

உறையைப் பிரித்து உள்ளே இருக்கும் புகைப் படங்களை உருவி எடுத்த போது அவள் கரங்கள் நடுங்கின. ஒன்றன் பின் ஒன்றாக அந்த ஆபாசப் படங்களைப் பார்த்த போதோ அவள் உள்ளம் நடுங்கியது. அனைத்தையும் பரபரவென்று பார்த்து முடிக்கு முன்னர் அவள் உடலே ஆட்டம் கண்டு நிற்கவும் சக்தியற்றுத் துவண்டது. அவன் எதிரே அழ அவள் விரும்பவில்லை. நெஞ்சைத் தொட்டு அழுத்திக் கொண்டு கண்ணீரை அடக்கினாள்.

'' 'நண்பனுக்கு நம்பிக்கைத் துரோகம் பண்ண மாட்டேன்' என்று என்னை எழுதி ஒட்டிக் கொள்ளச் சொன்னாயே, 'காதலிக்கு நம்பிக்கைத் துரோகம் பண்ண மாட்டேன்' என்று உன் சத்யாவையும் எழுதச் சொல்வாயா? எழுதி நெற்றியில் ஒட்டிக் கொள்ளச் செய்வாயா?'' என்று ஏளனமாகக் கேட்டான் ஆனந்த்.

''யார் இந்தப் பெண்? இவளை இதற்குமுன் நான் சந்தித்ததில்லையே'' என்றாள் பிரமீளா.

''அதில் உனக்குச் சந்தேகம் வேறா? ஊரே சிரிக்கிறதே! அவனுடைய ரிஸப்ஷனிஸ்ட் நித்யா தான்.''

''அடப் பாவி!'' என்று ஆனந்தை வைதாள் பிரமீளா. ''நீதானேடா அவரை இந்த நிலைக்கு ஆளாக்கியிருக்கிறாய்? நீதானே இந்தப் படத்தில் இருக்கும் வெட்கங் கெட்டவளை அவருக்கு ரிஸப்ஷனிஸ்ட்டாக நியமித்தாய்?''

''ஆமாம் ஆமாம்!'' என்று துன்புறுத்துவதில் அடையும் ரசனையோடு மகிழ்ந்து கூறினான் ஆனந்த். ''ஆனால் இந்தப் படங்கள் அதற்கு முன்பாகவே என்னுடைய பாச்சிலர் அப்பார்ட்மெண்டில் எடுக்கப் பட்டு விட்டன. நானேதான் எடுத்தேன். பளிச்சென்று நன்றாக விழுந்திருக்கிறது இல்லையா? ஆங்கிள்களையெல்லாம் கவனி. எவ்வளவு பிரமாதமாய் இருக்கிறது பார்! இந்தப் படங்களை உனக்கே பரிசாகத் தருகிறேன். நீ எடுத்துப் போகலாம், கிழிக்கலாம், கொளுத்தலாம். நெகடிவ்கள் பத்திரமாக பாங்கு ஸேஃப்டி வால்ட்டில் இருக்கின்றன!''

''யூ ஸ்கவுண்ட்ரல்!'' என்று ஹை ஹீல் ஷூவால் அவன் விலாவில் உதைத்தாள் பிரமீளா. அவன் கூச்சலிட்டு நாலு பேர் கூடினால் அவமானம் என்று பொறுத்துக் கொண்டான். தன்னை விடுவிக்க வருகிறவன் ஒரே ஆளாக இருந்தால் பணம் தந்து அவன் மௌனத்தை விலைக்கு வாங்கி விடலாம் என்று கணக்குப் போட்டிருந்தான்.

ஆத்திரம் தீராமலே படங்களைப் பைக்குள் திணித்துக் கொண்டாள் பிரமீளா. டிரஸ்ஸிங் டேபிள் மீது இருந்த அவன் கார்ச் சாவியை எடுத்துக் கொண்டாள். அறைக் கதவைத் திறந்து வெளியேற யத்தனித்தாள்.

''பிங்கி! நீ புயலா இருக்கலாம்; புலியா சீறலாம்; ஆனா நீ இன்று ஒரு சிங்கத்தைப் பகைச்சுட்டே, சூறாவளி கிட்டே விளையாடிட்டே! இதன் பலனை அனுபவிக்காமல் போக மாட்டே!'' என்று கறுவினான் ஆனந்த்.

பிரமீளா பதில் கூறாமல் கதவைச் சாத்தி விட்டு விடுவிடுவென்று நடந்தாள். காரை அடைந்து அதனைக் கிளப்பினாள். புயல் வேகத்தில்தான் அது சென்னையை நோக்கிப் பறந்தது. அவள் உள்ளத்திலோ சூறாவளி வீசிக் கொண்டிருந்தது. எந்தக் கணத்திலும் கண்ணீர் மழை கொட்டலாம் போலிருந்தது.

(தொடரும்)





மரணத்தின் போதும் தேசப் பணி

மறைவின் மூலம் ஒரு பேரிழப்பை உருவாக்கிச் சென்ற போதிலும் மரணத்தைத் தழுவிய போதும் ஒரு தேசப்பணியாற்றிச் சென்றிருக்கிறார் ஆசைத்தம்பி. அரசாங்க விதிமுறைகளை விட மனிதாபிமானம் உயர்ந்தது என்று ஆட்சியில் இருப்போருக்கு உணர்த்தியிருக்கிறார்.

அந்த விதிமுறைகள்தாம் என்ன, எல்லாரிடமும் ஒரே சீராகக் கண்டிப்பும் கறாருமாகக் கடைப்பிடிக்கப் படுகின்றனவா ?

நெருக்கடி நிலையான காலத்தில், போர்ப் படை விமானங்கள், அரசுடன் சம்பந்தமே இல்லாத சஞ்சய்க்கும் அவரது தாசர்கள் குழாத்துக்கும் தாராளமாகவே பயன் பட்டன.

அதுதான் போகட்டும், நெருக்கடி நிலைப் பிரகடனம் அமுலிலிருந்த காலம், யாரும் தட்டிக் கேட்க முடியாது.

சில மாதங்களுக்கு முன்பு கூட சினிமா நட்சத்திரம் ஜீனத் அமானை ராஜஸ்தானிலிருந்து புது தில்லிக்கு எல்லைப்பாதுகாப்புப் படை விமானம் ஒன்று ஏற்றி வந்திருக்கிறது. புது தில்லியில் எல்லைப்பாதுகாப்புப் படையினர் நடத்திய கேளிக்கைக் கொண்டாட்டத்தைத் துவக்கி வைக்க ஜீனத் அமான், ஷூட்டிங் நடந்து கொண்டிருந்த இடத்திலிருந்து இவ்விதம் பறந்து வந்தார். டில்லியிருந்து ராஜஸ்தானுக்கு மற்றொரு நட்சத்திரம் சஞ்சய்கான் பறந்து சென்றார். அவரைத் தனியே அனுப்புவது மரியாதை இல்லை என்று எல்லைப்பாதுகாப்புப்படை உயர் அதிகாரி ஒருவர் உடன் சென்று இறக்கி விட்டு வந்தார்.

அந்தமானில் அகால மரணமடைந்த ஆசைத்தம்பியின் உடலுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் இறுதி மரியாதை செலுத்தத் துடிப்புடன் இருக்கும்போது மட்டும் விதிமுறைகள் குறுக்கிடுகின்றன! வாடகைக்கு இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் அகப்படவில்லை, அந்தமானில் பிரேதத்தைக் கெடாமல் பாதுகாக்க வசதிகள் இல்லை என்ற நிலையிலும் கூட, 'விமானப்படை உதவிக்கு வராது; விதிமுறைகளில் அதற்கு இடமில்லை' என்று ஜகஜீவன் ராமே கையை விரிக்கிறார்.

சர்வாதிகாரிகளுக்கும் சினிமா நட்சத்திரங்களுக்கும் வளைந்து கொடுக்கும் விதிமுறைகள் நாடாளுமன்ற மக்கட் பிரதிநிதி விஷயத்தில் விறைப்புடன் நிற்கின்றன !

நடப்பது மக்கள் ஆட்சி என்பதை அவ்வப்போது நினைவுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது. இல்லாதபோனால் ஆட்சியிலிருப்போருக்கு அதிகார போதை தலைக்கேறி மனிதாபிமானம்கூட மறந்துவிடுகிறது!


செஸ் ராஜ்

சென்ற டிசம்பர் 78 குளிரில் மராத்திய மாநிலம் அமராவதியில் நடைபெற்ற 16வயதுக்குட்பட்டவர்களுக்கான அகில இந்திய சப்-ஜூனியர் செஸ் போட்டியில் ஒரு தோல்வியுமின்றி சாம்பியன் பட்டத்தை வென்ற 14 வயதே நிறைந்த எஸ். பால் ஆரோக்கியராஜ் தஞ்சாவூர் தூய அந்தோணியார் மேல் நிலைப்பள்ளியில் 9ம் வகுப்பு படிக்கிறான். இவன் தன் 9 வயது முதல் பல செஸ் போட்டிகளில் கலந்து கொண்டு வருகிறான். 19 வயதுக்குட்ட ஜூனியர் செஸ் பகுதியில் தமிழ் நாட்டில் 3வது இடம் வகிக்கிறான். செஸ் போட்டிகளும் செஸ் புத்தகங்களும் தனக்கு நல்ல பயிற்சியளிக்கின்றன என்று நம்பும் இச்சிறுவன் வரும் ஜூலை மாதம் பிரான்சு நாட்டில் பெல்போர்டில் நடக்கவிருக்கும் 17-வயதுக்குட்பட்ட உலக சிறுவர்கட்கான செஸ் போட்டியில் இந்தியாவின் சார்பில் கலந்து கொள்ளவிருக்கிறான். இவன் சென்ற ஜனவரியில் சிவகாசியில் ஒரே சமயத்தில் 20 பேரை எதிர்த்து ஆடிய ஆட்டத்திற்காகத் தமிழ்நாடு சதுரங்கக் கழகத் தலைவரும் தொழிலதிபருமான பொள்ளாச்சி திரு மகாலிங்கம் அவர்களிடமிருந்து சிறப்புப்பரிசு பெற்றான்.

— ஜோசப் குமார்



தியாக வல்லபன்



விக்கிரமன்

அத்தியாயம் 5
மாளிகைக்கு வழி

இரட்டை மாடுகள் கட்டிய கூட்டு வண்டி மெல்ல மெல்ல அசைந்தாடிப் புறப்பட்டது. மாடுகளின் கழுத்து மணிகள் ஓசையும், கால்களில் கட்டிய சலங்கை ஒலியும் தாளம் தவறாது எழுந்தன. மாலைச் சூரியனின் சாயும் கிரணங்கள் வண்டிக்குள்ளும், பொற்சரடுபோல் ஊடுருவிச் சென்றன. வண்டிக்குள்ளிருந்தவர்கள் அனைவரும் பெண்டிர். ஒவ்வொருவர் ஒவ்வொரிடத்துக்குச் சென்று கொண்டிருந்தனர். சிலர் வழியிலேயே இறங்கி விடுவர். ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் குசலம் விசாரித்துக் கொண்டனர். தனக்குத் தாயாகவும் விளங்கிய தந்தையை விட்டுப் பிரியும் போது சிறிது கண் கலங்கினாள் அல்லி.

''கண்களைத் துடைத்துக் கொள், அல்லி. மிகவும் சந்தோஷத்துடன் ஏற்று நடத்தும் பணி இது. சோழ நாட்டுத் தளபதி, திருச்சிற்றம்பலம் உடையார் பெருமான் நம்பிப் பல்லவரையர், நம்மையும் ஒரு பொருட்டாக எண்ணி மாபெரும் காரியத்தைப் பணித்திருக்கிறார்.; மகளே! மலர்ந்த முகத்துடன் செல்'' என்று மல்லியண்ணன் மகளது நெற்றியில் திருநீறை இட்டான்.

அல்லி விழிநீரைத் துடைத்துக் கொண்டாள். ''அப்பா! நந்தவனத்தைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். தொழுவத்தில் நந்தினியும் நாகுவும் பசி தாங்கமாட்டா. வேளைக்கு வைக்கோல் போடுங்கள். அவர் வந்து கேட்டால் என்ன செய்வீர்கள்?'' என்று அல்லி, விடைபெறும்போது தந்தையிடம் கேட்டாள்.

அவள் கணவன் கோவிந்தன் குளித்து விட்டு வருகிறேன் என்று சென்றவன்தான், உச்சி வேளை தாண்டி மஞ்சள் வெய்யில் சாயத் தொடங்கிய பிறகும் வரவில்லை. பெருமான் நம்பி இட்ட கட்டளையை நிறைவேற்ற முடியாமல் புறப்படும்பொழுது தன் கணவன் எங்கே வந்து விடுகிறானோ என்ற கவலையிலிருந்த அல்லிக்கு அந்த நேரம் வரை அவன் வராதது சற்று ஆறுதலாயிருந்தது.

அன்று காலை வரையில் கணவனின் பிரிவாற்றாமையைத் தாங்காது, மார்பின் கனம் தானாடு தவித்துக் கொண்டிருந்த அல்லி கணப் பொழுதில் மாறிவிட்டாள். கங்கை கொண்ட சோழபுரத்தில் இரட்டைக் குழந்தைகளைக் காணப் போகிறோம், கொஞ்சப் போகிறோம், அவற்றுக்குப் பாலூட்டப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் குளிக்கச் சென்ற கணவன் திரும்பி வராததை மறந்தே விட்டாள்.

''அல்லி! நீ கவலைப்படாமல் போ. அவன் வந்து கேட்டால் நான் ஏதாவது சொல்லிக் கொள்கிறேன். பொறுப்பற்ற மருமகன் எனக்கு வந்து வாய்த்து விட்டான். எந்த வேலையும் செய்யாமல் சோம்பேறியாக அவன் இருந்துவிட்டால் கூட நான் கவலைப்பட மாட்டேன். ஆனால், ராஜாங்கத் துரோகியாக அவன் இருப்பதுதான் எனக்கு ஆத்திரமூட்டுகிறது. அவன் இன்று எங்கே வரப்போகிறான்?'' என்றான் மல்லி அண்ணன்.

பழையாறையை விட்டு வேறு ஊருக்குப் பயணம் செய்வது அல்லிக்குப் புதிய அநுபவம் தான். முற்றிலும் புதிய மனிதர்களுடன் வண்டியில் செல்வது அவளுக்குச் சிறிது அச்சத்தையும் அளித்தது.

எதிர்காலச் செல்வங்கள்

எங்கள் மகன் காமுத்துக்கு நாலரை வயது ஆகிறது. பள்ளிக்குப் போகும் பழக்கம் வரட்டுமே என்று தெருக் குழந்தைகளுடன் பள்ளிக்கு அனுப்புகிறோம். ஒருநாள் திடீரென்று பள்ளியில் அழ ஆரம்பித்து விட்டான். ஆசிரியரும், ஆசிரியையும் என்னென்னமோ சொல்லிச் சமாதானப் படுத்தியிருக்கிறார்கள். அழுகை ஓயவும் இல்லை. அழுகைக்குக் காரணமும் தெரியவில்லை. நல்ல வேளையாக அப்போது என் கணவர் அங்கே வந்திருக்கிறார். அவனை அழைத்து ''ஏனப்பா அழுகிறாய்?'' என்று கேட்டிருக்கிறார். அப்போது என்ன சொன்னான் தெரியுமா?

''நான் வருவதற்குள் ஏன் மணி அடித்தீர்கள்?''

- சுகந்தா ரங்கநாதன்.



மாலைக் கதிரவன் மிக வேகமாக மறைந்தான். அந்தி வானத்து குருதிக்கோடுகள் மறைந்து இருள் எங்கும் சூழ்ந்து கொண்டது. கூட்டையடையும் பறவைகள் இடும் கூச்சல் இருளின் பயங்கரத்தை அதிகப்படுத்தின. விடிய விடிய வண்டி சென்று கொண்டிருந்தது. பொழுது புலரும் முன்பு கொள்ளிடத்தைக் கடந்து வட கரையில் சிறிது தங்கியது.

வண்டியிலுள்ளவர்கள் தூங்கி வழிந்தனர். வண்டியின் ஆட்டத்துக்கேற்ப அவர்கள் தலை ஆடி அசைந்து வண்டிக் கூண்டுக்குள் மோதின. சில சமயம் தலைகள் இரண்டும் மோதிக் கொண்டன.

கிருஷ்ண பட்சத்து அஷ்டமி சந்திரன் சந்தனக் கிண்ணத்தைக் கவிழ்த்தது போல் வானத்தில் ஒளிவீசிக் கொண்டிருந்தான். நிசப்தமான அந்த வேளையில் அல்லி மட்டும் உறங்காமல் விழித்திருந்தாள். என்ன துணிவுடன் இந்தப் பொறுப்பை ஏற்றேன்' என்று அவள் எண்ணினாள்.

நம் துணிவு இருக்கட்டும் படைத் தலைவர் நம்மைத் தேர்ந்தெடுத்ததில் அவருக்குத்தான் மிகுந்த துணிவு என்று எண்ணினாள்.

கொள்ளிட மணலில் வண்டிச் சக்கரங்கள் புதைய ஆற்றை வண்டி மெல்லக் கடந்து கொண்டிருக்கும் போது பொழுது புலர்ந்து விட்டது. ஆற்றின் ஓர் ஓரமாகச் சலசலவென்று தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. காலை இளங்காற்றும், கால்களில் பரவிய நீரும் சுகமாக இருந்தன. கணுக்கால் வரை நனைந்தோடிய நீரில் அல்லி நடந்து சென்றாள். ஒரு கையெடுத்து முகத்தில் தெளித்துக் கொண்டாள்.

ஆற்றங்கரைத் தோப்பைத் தாண்டிய உடனேயே கங்காபுரி என்று அழைக்கப்படும் கங்கை கொண்ட சோழபுர பெரும் நகரின் வெளிமதில் கம்பீரமாக உயர்ந்து நிற்பது தெரிந்தது. பெரும் மதிலுக்குள் மதிலாக விளங்கும் கோட்டையின் நுழைவாயில்களைக் கடந்து செல்ல வேண்டும் என்று நினைக்கும் போதே அல்லிக்குப் பிரமிப்பாக இருந்தது.

ஆயிரத்தளி மாளிகையையும், இராசராசேச்வரக் கோயிலையும் அதை ஒட்டிய அரண்மனையையும் பார்த்தே வியப்படைந்து திகைக்கும் அல்லிக்குக் கங்கைகொண்ட சோழ



புரத்து நுழை வாயிலே பெரும் அதிசயமாகக் காட்சியளித்தன.

மதில்கள் பல கடந்து நகரத்தின் புறப்பாடிகளையும் கடந்து செல்லும் போதே கங்கை கொண்ட சோழீசர் ஆலயத்து விமானம் ஓங்கி உயர்ந்து நிற்பதை அவள் பார்த்து விட்டாள். கங்கை கொண்ட சோழபுரத்து இறைவர் பெருவுடையாரைப் பற்றி அவள் தந்தை சொல்லியிருக்கிறான். முடிந்தால் காலையிலேயே கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு மாளிகைக்குள் செல்லலாம் என்று முதலில் எண்ணினாள். பிறகு, மனத்தை மாற்றிக் கொண்டு நேரே மாளிகைக்குச் செல்வது என்று முடிவு செய்து கொண்டாள்.

கழனிக் குளம் அருகே வண்டியை நிறுத்தி விட்டார்கள். வண்டியிலிருந்து இறங்கியவர்கள் தத்தம் பேட்டைகளுக்குச் செல்லத் தொடங்கினர்.

அவள் சோழ கேரளன் திருமாளிகைக்குச் செல்ல வேண்டும் என்பதையும் அந்த மாளிகை இருக்குமிடத்தையும் அவள் தந்தை விவரித்திருந்தார். அங்கேதான் பெரிய பிராட்டியார் வசித்து வந்தார்


அகலமான வீதிகளையுடைய கங்காபுரி விழித்துக் கொண்டு விட்டது. மக்கள் தத்தம் அலுவல்களைக் கவனிக்கப் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தனர். பெருவுடையார் திருக்கோயிலின் விமானமிருக்கும் பக்கம் நோக்கி அல்லி சென்று கொண்டிருந்தாள். அவள் சிறு மூட்டை ஒன்றை அணைத்தவாறு இங்குமங்கும் வெறித்து நோக்கும் பார்வையும், மெல்லத் தயங்கித் தயங்கி ஊருக்கு நடப்பதும் ஊருக்கு அவள் புதியவள் என்பதைப் புலப்படுத்தின.

சோழ கேரளன் திருமாளிகை எங்கே இருக்கிறது என்று யாரைக் கேட்டறிவது என்று எண்ணியவாறு மற்றோர் அகலமான வீதியை அவள் அணுகினாள். சாலையைக் கடக்கநினைத்த போது குதிரைகள் சில வேகமாக வருவதைக் கண்டாள். புழுதிப் படலத்தை எழுப்பியவாறு சென்ற குதிரைகளில் ஒன்றில் அமர்ந்து சென்றவனான் ஒருவன் அவள் கணவனைப் போல் தோற்றமளித்ததைக் கண்டு அவள் திடுக்கிட்டு நின்றாள். குதிரைகள் விரைந்து சென்று மறைந்தன. குதிரைகள் செல்வதற்காக வழிவிட்டு நின்ற ஒருவரைப் பார்த்து அல்லி கேட்டாள்: ''ஐயா, சோழ கேரளத் திருமாளிகை எங்கே இருக்கிறது?'' என்று.

அவர், அல்லியை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்து, ''இந்த ஊருக்கு நீ புதியவளா?'' என்று கேட்டார். இல்லை என்பதற்கு அறிகுறியாக அல்லி தலையசைத்தாள்.

''அப்படியென்றால் திருமாளிகை எங்கே இருக்கிறது என்று ஏன் கேட்கிறாய். திருமாளிகையைத் தெரியாதவர்கள் யாரிருப்பார்கள்? மாளிகை பல ஆண்டுகளாகச் சோபை இழந்திருந்தாலும், அரச குடும்பத்து முக்கியமான மகளிரெல்லாம் அங்குதானே இருக்கிறார்கள்.'' என்று அவள் கேட்காத கேள்விக்கெல்லாம் அவர் மறுமொழி கூறிவிட்டுச் சாலையைக் கடந்து சென்று விட்டார். சாலையைக் கடந்து மறுபக்கம் சென்றவருக்கு என்ன தோன்றியதோ, ''பெண்ணே, அதோ வருகிறதே சிவிகை அதைத் தொடர்ந்து சென்றால் திருமாளிகையை அடையலாம்'' என்று சொல்லி விட்டுத் திரும்பிப் பாராமல் சென்று விட்டார்.

சிவிகை சுமப்பவர்கள் ஒருவித ஒலியை எழுப்பிக் கொண்டு வந்தனர். சிவிகைக்கு முன்பு, குதிரை மீது வீரனொருவன் பாதுகாவலாகச் சென்று கொண்டிருந்தான். குதிரை மெல்லிய கதியில் சென்றதால் அதன் மீது



மகரிஷியாராக..

கொஞ்ச நாட்களாக
ஈர்க்கும் பெரியாரின்
மூளை, இருதயம், கல்லீரல்
என்று ஒரு 'அறுவை'ச் செய்தியாய்
படித்ததின் விளைவு...
நிலவரப்படி விளம்பரத்தின்
பெரியார் திடலும்
'கடலாய்'த் தெரிந்தது...

— குமல்பாஷ்

அமர்ந்திருந்த வீரன் குதித்துக் கொண்டு செல்வது போல் தோன்றியது. சிவிகையின் இரு புறங்களிலும் தொங்கிய திரைகளில் புலியின் உருவம் தீட்டப்பட்டிருந்ததால், அரச குடும்பத்தைச் சேர்ந்த முக்கியமானவரொருவர் சென்று கொண்டிருக்கிறார் என்பதை அறிய முடிந்தது. வழிப்போக்கன் கூறியதைப்போல் அல்லி சிவிகையைப் பின் தொடர்ந்தாள்.

சிவிகை சென்று கொண்டேயிருந்தது.

காலை வெயில் மெல்ல மெல்ல மாறிக் கொண்டே வந்தது. ''இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டியிருக்குமோ?'' என்ற கவலை அவளைப் பிடித்துக் கொண்டது.

சிவிகை சென்று கொண்டே இருந்தது. வீதியின் இருபுறமும் மாடங்கள் நிறைந்த மாளிகைகள் இருந்தன. அன்னக் கொடி பறக்கும் சத்திரங்கள் இருந்தன. வேத மொலிக்கும் பாடசாலை இருந்தது. பண்ணிசைக்கும் தேவாரப் பள்ளிகள் இருந்தன. திவ்யப் பிரபந்தங்களை இசையுடன் ஓரிடத்தில் பாடிக் கொண்டிருந்தார்கள். ஓரிடத்தில் 'ஜல் ஜல்' என்ற சலங்கை ஒலி கேட்டது. அந்த வீட்டில் பெண்கள் நிறைந்திருந்தார்கள். மாடத்திலிருந்து சில பெண்கள் எட்டிப் பார்த்தார்கள். சிலர் முதுகுப் புறம் மட்டும் வெளியே தெரியச் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

வேடிக்கை பார்த்துக் கொண்டே அல்லி மெல்ல நடைபோட்டதால் சிவிகையும், குதிரை வீரனும் வெகுதூரம் போய் விட்டார்கள். அல்லி ஓட்டமும், நடையுமாய்ச் சிவிகையைப் பின் தொடர்ந்தாள். ஒரு நாழிகைப் போது அவள் நடந்திருப்பாள். கடைசியில் பெரிய மாளிகை ஒன்றின் முன்புறம் சிவிகையைக் கீழே இறக்கி வைத்தார்கள். மாளிகையைச் சுற்றிப் பெரிய மதில் இருந்தது. பெரிய மரக் கதவுகள் மதில் வாயிலை மூடியிருந்தன. வாயிற் கதவின் திட்டிவாசல் திறந்திருந்தது. சிவிகை வந்ததைக் கண்ட வீரர்கள் பெரிய மரக்கதவுகளைச் சிறிது திறந்தார்கள். சிவிகையினின்று மூதாட்டியார் இறங்கினர். எண்பது பிராயத்துக்கு மேல் ஆகியும் அவர்கள் திடகாத்திரத்துடன் இருந்தார்கள். தும்பை மலரைப் போல் தலைமுடி நரைத்திருந்தது. வெண்ணிறப் பட்டாடை அணிந்திருந்தார்கள். தோளையும், சிகையையும் இழுத்துப் போர்த்தி மூடி மறைத்திருந்தார்கள். நெற்றியில் வெண்ணீறு துலங்கியது. கையில் கம்பளப் பை இருந்தது. வாயிற் காவலர்கள் வணக்கம் தெரிவித்து மூதாட்டி உள்ளே செல்ல வழி விட்டு மரியாதை செலுத்தினார்கள். சிவிகையைக் கீழே இறக்கி வைத்திருக்கும் சிவிகை சுமப்போர் வணங்கியவாறு நின்றிருந்தனர். பெரிய பிராட்டியாரான மதுராந்தகத் தேவி மெல்ல நடந்து, வழியே உள்ளே வாயிற்படியே நுழைந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த அல்லி, பிராட்டியை நோக்கி விரைந்து ஓடினாள்: என்ன கூறி அவர்களை அழைப்பது என்று புரியாமல் வார்த்தைகள் தொண்டைக் குழியிலேயே நின்று விட்டன.

வாயிற் கதவுகள் மூடப்பட்டன. உள்ளே நுழைய முயன்ற அவளை உள்ளே செல்ல விடாமல் வாயிற் காவலர் தடுத்து விட்டார். தன் கையிலிருந்த பெருமான் நம்பி கொடுத்த அடையாளச் சின்னத்தைக் காட்டலாமா என்று ஒரு கணம் அவள் எண்ணினாள். தான் தளபதியால் அனுப்பப்பட்டவள் என்பதைத் தெரிவிக்கலாமா என எண்ணினாள்.

''நான் யார் தெரியுமா? பழையாறையிலிருந்து வருகிறேன். என்னை இந்த நாட்டுத் தளபதி அனுப்பினார்.'' என்று அல்லி சொல்லி முடிப்பதற்குள் அவளுக்கு உடல் வியர்த்தது.

''ஹோ ஹோ' என்று காவலாளிகள் நகைத்தனர். ''காலையிலிருந்து எவ்வளவு பேர் இப்படி வருவீர்கள் தளபதி அனுப்பியதாகச் சொல்லிக் கொண்டு?'' என்று கூறி மீண்டும் அவர்கள் சிரித்தார்கள். அல்லி ஒன்றும் புரியாமல் விழித்தவாறு நின்றாள். திடீரென்று அவர்கள் சிரிப்பொலி நின்றது.

''உம் இந்த இடத்தில் வழியை மறைத்து நிற்காதே. அப்படி நிழல் பக்கமாக மரத்தடியில் போய் நில்'' என்று கடுமையாகக் காவலர்கள் கூறவே அல்லிக்கு அழுகை வரும் போல் ஆகியது. என்ன செய்வது என்று புரியாமல் அவள் மெல்ல நடந்து மரத்தடிக்கு வந்த போது அவளருகே குதிரை ஒன்று வந்து நிற்பதை உணர்ந்து திடுக்கிட்டாள்.

குதிரையின் மீது அவளுடைய கணவன் அமர்ந்திருந்தான். அவளுக்கு வியப்புத் தாங்கவில்லை. காண்பது கனவா? கங்கை கொண்ட சோழபுரத்திலிருக்கிறோமா அல்லது பழையாறையிலிருக்கிறோமா என்ற சந்தேகம் அவளுக்கு ஒரு கணம் எழுந்தது.

''அல்லி நீயா...? இங்கு எங்கே, ஏன் வந்தாய்?'' என்று அவன் கேட்டான்.

அல்லியின் உடல் நடுங்கியது. நடு வீதியில் கணவர் என்ன சொல்வாரோ என்ற பயம் அவளைப் பிடித்தது. இருந்தாலும் உறுதியை வரவழைத்துக் கொண்டு, ''உங்களைத் தேடித் தான் வந்தேன்'' என்று ஒரு பெரும் பொய்யைத் தூக்கிப் போட்டாள்.

கோவிந்தன் திடுக்கிட்டான். கங்கை கொண்ட சோழபுரத்துக்கு அவன் பல்லவப் தேவனுடன் வந்திருப்பதும், மன்னவரின் குழந்தைகளைக் கொன்றுவிட முடிவு செய்திருப்பதும் அல்லிக்குத் தெரிந்து விட்டதா? பயம் அவனை ஆட்கொண்டது.

(தொடரும்)

தமாஷ்

தீக்குச்சிகளைக் கீழே காட்டியபடி மேஜை மீது அமையுங்கள்.

ரோமன் எண்கள் உள்ள இந்தக் கணக்குத் தானே! சரியல்ல.

X I + I = X

ஒரு சவால், தீக்குச்சிகளைத் தொடாமலேயே இந்தக் கணக்கு சரியாக இருக்கும்படி செய்ய வேண்டும்.

முடியுமா?

ஜாக்கிரதை, எதையும் தொடக் கூடாது!

விடை: மேஜையை ஓர் அரை சுற்று சுற்றி எதிர் பக்கம் சென்று கணக்கைப் பாருங்கள்.

X = I + IX

என்று வருகிறதல்லவா! சரிதானே!

சுவையான தலைப்புச் செய்திகள்!

- மீன் வியாபாரியின் வீட்டில் கொள்ளை. போலீஸ் வலை வீச்சு!
- மின்சாரம் தாக்கிப் பிரமுகர் மரணம்; தலைவர்கள் அதிர்ச்சி!
- முடி திருத்தக சாஜுகள் - வெட்டு ஏற்படாது!
- கோலக் கண்காட்சி - பெரும் புள்ளிகள் - திரை விழும்!
- ரிலீஸ் ஆகாத சினிமாப் படங்கள் - அரங்கில் போடப்பட்டன.
- குரங்குகள் ஏற்றுமதி பிரச்னை; மேல் இடத்திற்குப் போகிறது!
- பயில்வான் ஹுராஜன் - அடி சறுக்கி விழுந்து காயம்.
- மாவட்டத்தலைவர் பெரிய கைப்பர் - எதிர்க் கட்சியினர் விமர்சனம்.

புத்திமதி என்பது விளக்கெண்ணெய் போல — கொடுப்பது சுலபம், உள்ளே எடுத்துக் கொள்வது கடினம்.

— ஜோஷ் பில்லிங்ஸ்

சிட்டு



ராஜேஷ்கன்னா பெங்களூருக்கு ஷூட்டிங்குக்கு வந்திருந்தார். அசோகா ஹோட்டல் வாசலில் காரில் டிரைவர் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். பின்னால் நின்ற அயல்நாட்டுக்காரர் ராஜேஷின் கார் வழி மறிக்கிறது என்பதால் தமது காரின் ஹாரனை அழுத்தினார். ராஜேஷ் அசையவில்லை. அயல்நாட்டவர் மறுபடியும் தமது கார் ஹாரனை ஒலிக்கச் செய்தார். ராஜேஷ் ஒரு முறை கோபமாகத் திரும்பிப் பார்த்துவிட்டு வாளாவிருந்தார். மூன்றாவது முறையும் அந்த அயல் நாட்டவர் ஹாரனை அடித்தபோது ராஜேஷ் தாம் அமர்ந்திருந்த காரைப் பின்னோக்கிச் செலுத்தி வந்து அந்த அயல் நாட்டவர் கார் மீது மோதினார். வாக்குவாதம் நடந்தது. வழிமறித்தபடி காரை நிறுத்தியிருந்தது ஒரு தவறு; பின்பக்கமாக ஓட்டிவந்து வேண்டுமென்றே மோதியது இன்னொரு தவறு. அந்த அயல்நாட்டவர் ஒரு கம்பெனியில் பிரதான துணைபொறியாளர்.

ராஜேஷ் மீது போலீஸ் நிலையத்தில் கேஸ் பதிவாயிற்று. ஆனால் பின்னால் அவர் யார் என்பது தெரியவந்ததும் விஷயத்தை அப்படியே அமுக்கிவிட்டார்கள்! - ஆதாரம்: ஸண்டே



தெளிவு

கௌசிகன்

காரியாலயத்திலிருந்து திரும்பிய ரகு, தன் உத்தியோக உடைகளைக் களைந்து விட்டு மாற்றுடை அணிந்து கொண்டு உணவருந்தத் தயாராகும் போது அவன் பார்வை அனுவையே மேய்ந்து கொண்டிருந்தது. அன்று அவள் வனப்பு பிரகாசிப்பது போலத் தோன்றியது அவனுக்கு. பொன்னாகத் துலக்கப்பட்டு ஐந்து முகங்களிலும் சுடர்விட்டு ஜ்வலிக்கும் அழகிய குத்து விளக்கைப் போன்றவள் அனு. அவள் சிரிப்புக்கே தனிக் கவர்ச்சியுண்டு. கிறங்க வைக்கும் அந்தச் சிரிப்புடன் பார்வையால் தன்னைக் கொரித்துக் கொண்டிருக்கும் கணவனிடம் அதைக் காட்டினாள்.

''இதிலுள்ளது உங்களுக்கு. இதிலுள்ளது எனக்கு!'' — 'அவனுககு' 'அவளுக்கு' என்று அழகாக எழுதப்பட்ட வேலைப்பாடமைந்த பீங்கானாலான, சாப்பாட்டு மேஜையை அலங்கரிக்கும், ஜோடிக் கிண்ணங்கள் அவை. தேனிலவுக்கு டார்ஜிலிங் போயிருந்த போது அவர்கள் தங்கி இருந்த அந்தப் பெரிய நவீன ஹோட்டல் நிர்வாகம் இந்தக் கிண்ணங்களையும் '**நாங்கள் ஒருவர்**' என்று பொறிக்கப்பட்ட பூங்கொத்துக்களை வைக்கும் அழகிய 'ஃபிளவர் வேஸ்' ஒன்றையும் அன்பளிப்பாகக் கொடுத்தது. தங்கள் ஹோட்டலில் வந்து தங்கும் புதுமணத் தம்பதிகளுக்கு இப்படிப் பரிசளிப்பது அதன் வழக்கம். பீரோவுக்குள்ளிருந்த அந்தக் கிண்ணங்களை இன்று வெளியிலெடுத்து அதில் பொன்னிறமாக வறுக்கப்பட்டு கமகமத்துக் கொண்டிருக்கும் முந்திரிப் பருப்புக்களை நிரப்பி அதைக் கணவனிடம் காட்டியபடி கவர்ச்சியாக நின்றாள் அனு. முந்திரியின் மணமும் அவளின் முல்லைச்சிரிப்பும் ரகுவின் கரங்களை அவள் இடையைச் சுற்றி வளைத்துத் தன் உடலோடு இறுக்க வைத்தன.

''இந்தக் கிண்ணத்திலுள்ளதை நான் எடுத்துச் சுவைத்தால் தண்டனை பலமாக இருக்குமோ?'' என்றான்.

''ஆமாம்... ரொம்பக் கடுமையாக இருக்கும்... இப்படி'' என்று அவன் கன்னத்தில் செல்லமாக ஒரு தட்டுத் தட்டிவிட்டுச் சட்டென்று ஒயிலாக விலகிக் கொண்டவள் ''சாப்பிட நேரமாயிற்று வாருங்கள்!'' என்று அந்தக் கிண்ணங்களை டீப்பாயில் வைத்துவிட்டுக் கணவனின் பசியாற்றப் பரபரப்புடன் உள்ளே ஓடினாள். குலுங்கும் அவள் செழுமையைக் கூர்ந்து ரசித்தபடி உணவருந்த உட்கார்ந்தான். அவள் குறும்பும், சிரிப்பும், ஒய்யாரமும் அவனுள் ஆசையைக் கொழுந்து விட்டெரியச் செய்ய அவள் பரிமாற முடியாதபடி பாடாய்ப் படுத்தி விட்டான் ரகு.

'சே, இருந்தாலும் இந்த ஆண் பிள்ளைகளே சுத்த மோசம்!' என்று அனு பொய்யாகப் போலியாகச் செல்லமாகச் சிணுங்கியபடி சமையலறையைக் கழுவித் துப்புரவு செய்வதில் ஈடுபட்டிருக்கும் போது ரகு செய்தித்தாளைப் பரத்தியபடி ஹாய்யாக கால்களை எதிர் சோபாவில் நீட்டிக் கொண்டு அமர்ந்திருந்தான். இடது கைப்பக்கத்தில் இருந்தது அந்த டீப்பாய். அதில் இருந்த முந்திரிப் பருப்புக்களைக் கொரிப்பதற்காக விரல்கள் பரபரத்து ஊர்ந்த போது மனம் மாலாவின் நினைவால் குறுகுறுத்தது. உள்ளம் இன்பபோதை ஏறித் தள்ளாடும் போதெல்லாம் மாலா அங்கு தோன்றி விடுவாள். எவ்வளவோ முயன்றும் அவனால் அவள் நினைவைத் தவிர்க்க முடியவில்லை.

அனுவின் இடத்தில் இருக்க வேண்டியவள் மாலா.

அவனைப் பைத்தியமாக்கி இருந்தன அவள் அழகும், கவர்ச்சியும்...

ஆறு மாதங்களுக்கு முன்புவரை மாலாவே தன் வாழ்வு, உலகம் என்று மயங்கிக் கிடந்தவனாயிற்றே ரகு. இன்னமும்கூட அந்தக்கவர்ச்சி, மோகம் அவனை முழுமையாக விட்டு விலகி விடவில்லை.

அவள் கமலைத் தன் கணவனாக ஏற்றுக் கொண்டதினால் ஏற்பட்ட ஏமாற்றமும் கசப்பும் பாலின் மீது படிந்த ஏடாக இருந்தாலும் அதன் அடியில் உள்ள கதகதப்பைப் போல, அவள் மீதுள்ள காதலும் அவன் உள்ளத்தினடியில் கனன்று கொண்டுதானிருந்தது.

முந்திரியின் சுவை போல, நினைத்தாலே இனிக்கும் மாலாவின் நினைவுகளில் லயித்துப் போனான் ரகு.

வேகமாக வளர்ந்து கொண்டிருந்த அந்த ஸ்தாபனத்தில் ரகு முக்கிய பொறுப்பில் அமர்த்தப் பட்டான். ஒத்த வயதுடைய இளைஞர்கள் பலரை ஒருங்கிணைய வைத்து, அவர்களின் செயல் திறனை வெளிப்படுத்த வாய்ப்பளித்து, வாழ்க்கையில் அவர்களை உயர்த்தித் தாங்களும் உயருவதற்கான குறிக்கோளுடன் இயங்கிய அந்த அமைப்பில் ரகுவோடு மாலாவும், கமலும், அனுவுமே கூட இருந்தார்கள். கலகலப்பான சுபாவத்தினாலும் பகட்டான, படாடோபமான கவர்ச்சியினாலும் மாலா அத்தனை இளம் உள்ளங்களையும் வதைத்துக் கொண்டிருந்தாள். அனுவின் அடக்கமான அழகு, கண்ணியமான நடத்தை காளைகளின் கவனத்தைக் கவரவில்லை. அதற்காக அனு கவலைப்படவில்லை.

மயக்கு மோகினி மாலாவைத் தனதாக்கிக் கொள்ளும் ஓட்டத்தில் முந்திக் கொண்டவர்களில் கமலும் ரகுவும் முக்கியமானவர்கள். கமலுக்கு விசேஷமான தகுதி அவன் பணக்காரக் குடும்பத்து ஒரே பிள்ளை. ஆனால் மாலாவின் பாராட்டும், பழகுதலும் ரகுவிடமே தாக்கலாக இருந்தன. "என்னை அடையத் துடிக்கும் அத்தனை பேரினும் உங்கள் அழகும் கம்பீரமும் யாருக்குமில்லை... உங்களுடைய அந்தப் பார்வை இருக்கிறதே அது எந்தப் பெண்களையும் பித்தனாக அடித்து விடும் பொல்லாத பார்வை!'' மாலாவின் இப்படிப்பட்ட பாராட்டுக்களினால் காளையரின் இந்தக் கன்னி வேட்டையின் முடிவு தனக்குச் சாதகமாகவே அமையும்; மாலா தன் மனைவி யாவாள் என்ற நம்பிக்கையோடிருந்தான் ரகு. அந்த நம்பிக்கை உண்டாக்கிய உற்சாகத்தில் தன் பணியில் ஆர்வங் காட்டினான். உயர்வு வேண்டி உழைக்கலானான். சாதாரண உத்தியோகஸ்தன் ஒருவனுடைய மனைவியாக வாழக்கூடியவளில்லையே மாலா! அவனுடைய உத்வேகமும் உழைப்பும்,



எதிர்பார்ப்பும் ஏமாற்றமளித்து விடவில்லை. மேலதிகாரிகளின் திருப்தியான பார்வை அவன் மீது படிந்தது. மாலாவின் நினைவும், அவளைத் தன் மனைவியாக்கிக் கொள்ளும் துடிப்பும் அவனை உயர்ந்த பதவிக்குத் தூக்கி விட்டன.

அப்போது அவனுக்குக் காரியதரிசியாக அமர்த்தப் பட்டவள்தான் அனு.

ஓட்டப் பந்தயத்தில் முன்னதாக ஓடிவரும் இருவர் வெற்றிக் கோட்டைத் தொடுவதில் 'நீயா நானா?' என்ற வெறியோடு முந்த முயல்வது போல; மாலாவைக் கவர்ந்து

செல்வதில் கமலும், ரகுவுடன் போட்டி போட்டுக்கொண்டு வந்தான். கமல், ரகு இருவருக்குமே திறமைசாலியான அனுவின் உதவி தரப்பட்டிருந்தது.

அனுவை ரகுவிற்குப் பிடித்திருந்தது. அவள் அருகிலிருக்கும் போது ஒரு நிம்மதி இருந்தது. ஏதோ ஒரு முழுமை அவளிடமிருப்பதை உணர்ந்தான் ரகு. பொறுப்பாக அவள் காரியங்களைச் செய்யும் புத்திசாலித்தனத்தைப் பாராட்டினான். ஆனால் மாலாவின் கவர்ச்சி என்ற காந்தத்தில் ஒட்டிக் கொண்டிருந்த அவனால் அனுவுடன் ஒட்ட முடியவில்லை. அவளை எட்ட நிறுத்தியே எடை போட்டான், பழகினான்.

மாலா என்னும் வாகினியின் போதையிலிருந்து மயங்கிக் கிடந்த ரகுவை ராகு கவ்வலாயிற்று. ஒருநாள் இரவு, ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தன்னுடன் இரவு விருந்துக்கு அழைத்திருந்தான் மாலாவை. அவளும் வருவதாகச் சம்மதமளித்திருந்தாள். மன்மதனாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டு, ரதியாக அவளைப் பாவித்து அழைக்க அவள் அறைக்குப் போன போது அவள் அங்கு இல்லை. அவள் அறைத்தோழி கூறிய செய்தி அவன் கன்னத்திலறைந்தது போலிருந்தது. வேறு ஒரு பாய் பிரண்டுடன் அவள் அன்று வேறோர் ஹோட்டலுக்கு விருந்துண்ணப் போயிருந்தாள்.

அதிர்ச்சியும் அவமானமுமாகத் தன் அறைக்குத் திரும்பினான் ரகு.

மாலாவிடம் எத்தனை நம்பிக்கையும் பிரேமையும் கொண்டிருந்தானோ அது அப்படியே மாறுபட்ட மனோபாவத்தை ஏற்படுத்தியது. 'இனி நான் அவள் நினைவாகவே பித்தனாக, பைத்தியமாக இருக்கக் கூடாது' என்று முடிவுக்கு வந்தபோது மாலா அவனைத் தேடி ஓடி வந்தாள். 'ரகு... .ரகு... என் டார்லிங்!' என்று குழைந்தாள். அன்று அவனோடு வருவதாகக் கூறி இருந்தது மறந்து போய் விட்டது என்று கொஞ்சினாள்; கெஞ்சினாள். அவன் பேசாது ஒதுங்கிப் போனான். இவள் ஓடிவந்து அணைத்துக் கொண்டாள். அவன் மார்பில் தன் மலர் முகம் பதித்து அதை ஈரமாக்கிய போது அவனால் இளகாதிருக்க முடியவில்லை. தான் கையோடு கொண்டு வந்திருந்த ஒரு காஸட்டை அவனுடைய டேப் ரிகார்டரில் போட்டு இயக்கினாள். அது ஒரு மேல் நாட்டு இசை. துறவியையும் துள்ளி எழுந்து ஆடச் செய்யும் பாப் மியூசிக். ரகு பொடியாகிப் போனான். அவளையும் அணைத்துக் கொண்டு ஆடினான். அவள் கோபத்தையும் அணைத்தாள். அதன் பிறகே அவனிடம் விடை பெற்றாள். எல்லையில்லாத ஆனந்தமடைந்தாலும் ரகு எல்லை மீறிப் போகவில்லை. பழைமைகளில் பிடிப்புடையவன் அவன். பிரும்மசாரிகள் குடி இருப்பில் ஓர் இளம் பெண் இரவு தங்குவதை அவன் மனம் ஒப்பவில்லை.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு மூன்றும் நாள் வந்த அந்தச் செய்தி ரகுவை அதிர்ச்சியடையச் செய்தது. 'கமலினுடைய மனைவியாகப் போகிறாள் மாலா. அருகிலுள்ள ஒரு கோயிலில் நடைபெறப் போகிறது அவர்களது திருமணம். திருமணமான மறுநாளே கமல் வடக்கேயுள்ள கிளைக்கு உயர் அதிகாரியாகப் பொறுப்பேற்க மனைவியுடன் கிளம்பப் போகிறான்.

தாங்கிக் கொள்ள முடியாத அந்தத் தவிப்பை அமுக்கிக் கொண்டு கமலின் கைகளைப் பற்றிக் குலுக்கித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டான் ரகு. மாலாவின் திருமணத்தன்று இரவு அவன் தன் அறைக்குப் போகவே இல்லை. தொழிற்சாலையின் விஸ்தரிப்பு விஷயமான திட்டங்களைத் தயாரிப்பதில் முழுமூச்சுடன் ஈடுபடலானான். ஓவர் டைம். உதவியாக அன்றிரவு தன்னுடன் காரியாலயத்தில் தங்கும்படி அனுவையும் கேட்டுக் கொண்டான். தான் தனிமையாக்கப் பட்டு விட்டதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மாலா இப்படி வஞ்சித்தது அவனை வெகுவாகப் பாதித்திருந்தது.

அவன் அனுபவிக்கும் அவஸ்தையை உணர்ந்து கொண்டாள் அனு. அனுதாபத்துடன் அவனை அணுகினாள். பரிவோடு நடந்து கொண்டாள். பாசத்தினால் அவனைப் போர்த்தினாள். இதுநாள் வரை புத்திசாலியானதோர் காரியதரிசி என்றுபார்த்தவன் இப்போது அவளை மாறுபட்ட கண்களோடு பார்த்தான்.

மெள்ள மெள்ள — கொஞ்சங் கொஞ்சமாக அனுவிடம் நெருங்கலானான் ரகு. அவன் இதயத்தில் ஏற்பட்ட காயத்துக்கு இதமாக ஒரு பெண்ணின் அருகாமை வேண்டி இருந்தது. அவன் ரணத்துக்கு மருந்தானாள் அனு. அவன் மன நிம்மதிக்காக, திருப்திக்காக, சந்தோஷத்துக்காக, தனக்குப் பிடிக்காது போனாலும், பலவற்றைப் பொறுத்துக் கொண்டாள். தன் அழகினால், கவர்ச்சியினால் மாலா தன்னை ஆட்டி வைத்ததையும்; அழகியானாலும் அனு, தனக்கு அடங்கித் தன்னைத் திருப்திப் படுத்துவதையே குறியாகக் கொண்டு நடப்பதையும் எண்ணிப் பார்த்து நெகிழ்ந்து போனான் ரகு. தன்னைக் கணவனாக ஏற்றுக் கொள்ளக் கேட்ட போது அனு முகம் சிவக்கத் தலை குனிந்த அந்தக் காட்சி அவன் மனத்துக்கு ரம்யமாக

அவன்: வீட்டுக்குப் போனதும் என் மனைவியிடம் ஏதாவது ஜோக் சொன்னால் விழுந்து விழுந்து சிரிப்பாள்!

இவன்: எந்த நம்பிக்கையில் சொல்றே?

அவன்: சட்டைப் பையில் சம்பளப் பணம் இருக்கிற நம்பிக்கையில்! —உ. ராஜாஜி



இருந்தது. 'இதே நிலையில் மாலா இப்படியா அடக்கமாக அழகாக நாணமுடன் இருப்பாள்? அனு ஆயிரம் மடங்கு உயர்ந்தவள் தான்' என்று திருப்திப் பட்டாலும் ஏனோ மாலாவின் நினைவை அவனால் கிள்ளி எறிய முடியவில்லை. அவளுடைய அந்த வசிய சக்தியிலிருந்து விடுபட முடியாமல் தன்னை வருத்திக் கொண்டிருந்தான் ரகு. கணவனின் இந்தப் போக்கு அனுவுக்குத் தெரியும். ஆனாலும் அதுபற்றி அவனிடம் பேசவேமாட்டாள்.

ஒருநாள் உள்ளமும் உடலும் சோர்ந்து போய் உட்கார்ந்திருந்தான் ரகு. அவனை உற்சாகப்படுத்த எண்ணி டேப் ரிக்கார்டரில் ஒரு காஸட்டைப் போட்டு இயக்கினாள். அவள் பொருத்திய அந்த டேப் — மாலா கடைசியாக ரகுவிற்குப் போட்டு அவனோடு ஆடிய அதே டேப். அனுவிற்கு இது தெரிந்திருக்க நியாயமில்லை. எதேச்சையாக நிகழ்ந்தது அது. அந்த பாப் இசை ஒலிக்க ஆரம்பித்ததும் ''அனு!'' என்று கத்தினான் ரகு எரிச்சலுடன் ''அதை நிறுத்து! இதை நான் திருப்பித் திருப்பிப் போட்டுக் கேட்டு எனக்கு எரிச்சல்தான் அதிகமாச்சு'' என்றான்.

அனு உடனே டேப் ரிகார்டரை ஆஃப் செய்தாள். காரணம் கேட்கவில்லை ''வேறு காஸட்டைப் போடவா ''என்று அமைதியாகக் கேட்டாள். அனுவின் அந்தப் பணிவு, அடக்கம், தன் ஒவ்வொரு வார்த்தைக்கும் கீழ்ப்படியும் குணம் அவனை வெட்கமடையச் செய்தன. 'என்னிடம் இத்தனை அன்பும், பரிவும், பாசமும், கொண்டுள்ள இவளிடம் நான் உண்மையாக நடந்து கொள்ளவில்லை. என்னை உதறிவிட்டு வேறொருவனுடன் வாழப்போன, மாலாவையே நினைத்துக் கொண்டு அனுவின் தூய அன்புக்கு நான் துரோகமிழைக்கிறேன். கடவுளே! மாலா என்னும் அந்த மாயக்காரியை என் நினைவிலிருந்து அகற்று... அந்தத் துணிவை, தூய்மையை எனக்களி' என்று வேண்டிக் கொண்டிருக்கும் போதே வாசல் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது.

திறந்த வாசல் கதவின் முன்னால் நின்றவர்களோ, கமலும் மாலாவும்.

''என்ன மிஸ்டர் ராகு? (அவள் அவனைச் செல்லமாக அழைப்பது இப்படித்தான்.) இப்படித் திகைத்துப் போய் விட்டீர்களே!'' சர்வ அலட்சியமாக, உரிமையோடு உள்ளே புகுந்து பவனி வந்தாள் மாலா. அதே கவர்ச்சி, அதே மகிழ்ச்சி, அதே அலட்சியம் அகம்பாவம். கணவன் கமலை யாரோ உடன் வந்துள்ள வேலைக்காரனைப்போல நடத்தினாள்.

மாலா அந்த வீட்டில் ஒவ்வொன்றையும் தொட்டுப் பார்த்தாள். பாராட்டினாள். அவள் கிண்டலாகக் குத்தலாகப் பேசுவதைக் கல்மஷமில்லாத அனு உணரவில்லை. ரகு புரிந்து கொண்டான்.

''இதென்னது '' என்று-'நாங்கள் ஒருவர்' என்று எழுதப்பட்டிருந்த பீங்கான் பிளவர் வேஸை' அலட்சியமாகக் கையிலெடுத்து உருட்டினாள் மாலா.

''எங்கள் தேனிலவின் நினைவாக மணம் பரப்பிக் கொண்டிருப்பது இது... ஜாக்கிரதை கைதவறி'' என்று அனு சொல்லி வாய் மூடுமுன், அந்த வேலைப்பாடு மிக்க பூஜாடி மாலாவின் கையிலிருந்து கீழே விழுந்து உடைந்து நாலாகியது.

கொஞ்சமும் பரபரப்படையாமல் நிதானமாக ''சாரி, அனு...! கைதவறி... ரொம்ப வேதனையா... இருக்கு... '' என்றவள் சற்று நிதானித்து, ''சாதாரணப் பீங்கான் தானே? இதுக்காக நீ மனம் உடைஞ்சு டமாட்டேன்னு நினைக்கிறேன்'' என்றாள் பயக்குச் சிரிப்புடன்.

அந்தச் சிரிப்பில் பொதிந்துள்ள குரூரத்தை முதன் முறையாக ரகு அப்போதுதான் உணர்ந்தான். தன் நினைவை மூடிப் படிந்திருந்த பாசி, மோகவலை அறுந்து அகன்றதையும் தெரிந்து கொண்டான்.

மாலாவிற்கு அனு பதில் கூறுமுன் அவனே கூறினான். ''அது சாதாரணப் பீங்கானல்ல. அதன் மதிப்பு அதன் வெளித் தோற்றத்தினால் அல்ல.''

அனு அர்த்த புஷ்டியுடன் தன் கணவனை நோக்கினாள். அதுவரை ரகு அவளிடமிருந்து கேட்டிராத கணீர்க் குரலில் அனு பேசினாள். ''பரவாயில்லை மாலா. அவர் இதை ஒட்டவைத்து நேராக்கி விடுவார். பல சந்தர்ப்பங்களில் பழுது பார்க்கப்பட்ட பொருள், ஆரம்பத்திலிருந்தது போலவே அழகாகி விடுவதுண்டு.''

கொடிய மந்திரக் கட்டிலிருந்து விடுபட்டது போலிருந்தது ரகுவிற்கு. அவன் ஓர் அன்பு மனைவிக்கு ஆசைக் கணவன். மனைவியிடம் தான் கொண்டுள்ள தூய காதலை வெளிப்படுத்தவோ, அவளை மனைவியாக அடைந்ததில்தான் கர்வப் படுவதைத் தெரிவிக்கவோ தயங்குவானேன்? பாசமும் நேசமும் காதலும் பொங்க அனுவைப் பார்த்தான். பிறகு கூறினான்.'' உடைந்த இந்தப் பூ ஜாடியை ஒட்ட வைத்து உறுதியுள்ளதாகச் செய்வேன். அனேக சந்தர்ப்பங்களில் பழுது பார்க்கப்பட்ட பொருள்கள் **ஆரம்பத்திலிருந்ததைவிடச் சிறப்பாகிவிடுவதுண்டு.''**

அனு தனக்கு எத்தனை அருமையானவள் என்பதையும், அவளது கருவிழிகள் எத்தனை அழகாக இருக்கின்றன என்பதையும், அந்த விழிகளில் வழியும் காதலும், பாசமும் எவ்வளவு கதகதப்பாக இருக்கின்றனஎன்பதையும் அவளிடம் கூறத் தவிப்போடு காத்திருந்தான் ரகு, திடீர் விஜயம் செய்திருந்த அவ்விருவரும் வெளியேறுவதற்காக.



கனவா - நிஜமா? 17

கதை வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்




கையொப்பமென்றால் "x" இப்படி இருகோடு கிழிப்பதுதான்!
முண்டரே! சாதாரண மான அக்காரியங் கள் என்னவோ?
பெரிதாக ஒன்றுமில்லை. அயல் நாடுகளில் வியாபா ரம் செய்யும் உரிமை, இப்படிச் சில. நீங்கள் விசேஷமாகச் சிந்திக்க ஒன்றுமில்லாதவை...
சண்டனும் முண்டனும் தனியே....
எப்படி? முதல் உத்தரவு நாம் இருவரும் பொக்கிஷத்திலிருந்து எவ்வளவு பொன் வேண்டுமானா லும் எடுத்துக் கொள்ள அனுமதி
அடுத்த உத்தரவு நாட் டின் ஒவ்வொரு பிரஜையும் தாங்கள் சொத்தில் மூன்றில் ஒரு பாகத்தை மன்னரின் கஜானாவில் சேர்ப்பிக்க வேண்டும் என்பது!...
பிரமாதம் நண்பரே, பிரமாதம்! ஆக, நாம் நாட்டின் செல்வத்தில் மூன்றில் ஒரு பங்கைத் தாராளமாக அனுபவிக் கலாம்..ஹ..ஹ..ஹா!
சொத்தில் மூன்றில் ஒரு பாகம் வரி என்ற அறிவிப்பு மக்களிடையே புரட்சியை உண்டாக்குகிறது.
புதிய மன்னர் ஒழிக...
மன்னர் ஒழிக...
எங்களைப் பழைய மன்னரே ஆளட்டும்....
புரட்சியும் கூச்சலும் பலன் தரவில்லை. பலர் மௌனமாகப் பணிந்தனர். சிலரின் ஆர்ப்பாட்டம் அடக்கப்பட்டுவிட்டது
பெயர்-சாருதத்தன். தொழில்-வாணிபம். இதோ மூவாயிரம் பொற்காசுகள்
சாருதத்தன்- மூவாயிரம்... அடுத்தவர்....
அநியாய வரிவிதிப்பை எதிர்த்து அடம்பிடித்த வர்கள் அவதிப்பட்டனர்
சொத்து ஏதுமே இல்லை என்றாயே, இதெல் லாம் என்ன?
பொய்க்கணக்குக் காட்டி அரசை ஏமாற்ற முயன்ற குற்றத்துக்காகத் தண்டனை—வழக்கமான மூன்றில் ஒரு பங்கும் அதிகப்படியாக, மற்றொரு பங்கும்....
தொடரும்

சிறந்த சர்வதேச விற்பனையாளர் அரங்கில் ஓர் சிறப்பிடம்

மின்சக்தித் துறையில் காலப் போக்கில் உருவாகும் நவீன சர்வதேச தொழில் நுட்ப சாதனைகளுக்கு ஈடு கொடுத்து செயலாற்றும் BHEL-ன் வளர்ந்து வரும், நன்மதிப்பும், அதன் வெளிநாட்டு வர்த்தக ஒப்பந்தங்களும், இந்தியாவை உலக மின்சக்தி தளவாடச் சந்தையில் போட்டியிடும் ஒரே வளர்ச்சியடையும் நாடாக அரங்கேற்றியுள்ளன. முப்பதிற்கும் அதிகமான பல்வேறு நாடுகள் BHEL தயாரிக்கும் தளவாடங்களையும், அளிக்கும் சேவைகளையும் ஏற்கனவே தேர்ந்தெடுத்துள்ளன. இவற்றில் சில நாடுகள் இயக்கப் பூர்த்தியான முழுத் தளவாட அமைப்புகளை கொள்முதல் செய்துள்ளன. தொடர்ந்து வரும் சர்வதேச கொள்முதல் விண்ணப்பங்கள் BHEL-ன் தொழில் திறமையில் சர்வதேச நம்பிக்கையை வலுப்படுத்தும் அத்தாட்சிகளாகத் திகழ்கின்றன.

BHEL உற்பத்தி செய்யும் மின்சக்தித் தளவாடங்களும், அளிக்கும் சேவைகளும் பெற்றுள்ள, பெருகிவரும் சர்வதேச ஆமோதிப்புகள், பெரும்பாலும் பல்வேறு நாடுகளின் பிரத்தியேக மின்சக்தித் தேவைகளை காலாகாலத்தில் உணர்ந்து செயலாற்றும் BHEL-ன் தனித் திறமையின் பிரதிபலிப்புகளே. இந்தியாவின் மின்சக்தி அபிவிருத்திப் பணியில் தனக்கு ஏற்பட்டுள்ள அனுபவத்தினால், இன்று BHEL மற்ற வளர்ச்சியடையும் நாடுகளின் தேவைகளுக்குத் தகுந்த தொழில் நுட்பத் திறனையும், மின்சக்தித் தளவாடங்களையும் அளிக்கத் தேவையான ஒப்பற்ற தகுதி பெற்றுள்ளது. மேலும், BHEL தனித்தனியான சிறு தளவாடங்களை மட்டுமல்லாமல், மற்ற பெரும் சேவைகளையும் அளிக்கும் தகுதி பெற்றுள்ளது.

சாத்தியக் கூறு ஆராய்ச்சி முதற்கொண்டு, வடிவமைப்பு, உற்பத்தி, நிர்மாணம், இயக்கத் துவக்கம் வரை, BHEL இயக்கப் பூர்த்தியான முழுத் தளவாட அமைப்புக்களையும் அளிக்கிறது உலகத்தின் எந்தப் பகுதிக்கும்.

30 MW பிரிவுகள் முதல், 210 MW பிரிவுகளுக்குத் தேவையான மின்சக்தித் தளவாடங்கள் வரை, எந்தக் கொள்முதல் விண்ணப்பமும் BHEL-க்கு சிறுமையானதல்ல. மேலுமென்ன, போட்டியிடும் விலையமைப்புகளையும், விரைவான பட்டுவாடாத் திட்டங்களையும் BHEL அளிக்கின்றது. 'BHEL' தனது வாடிக்கையாளர்களின் பணியாளர்களுக்கு பயிற்சியளிக்க உதவி செய்வதுடன், தேவை ஏற்பட்டால் ஆரம்பக் காலங்களில் தன் வாடிக்கையாளர்களின் மின்சக்தித் தளவாடங்களை இயக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறது.

BHEL-உலக மின்சக்தித் தேவைகளுக்கேற்ப செயலாற்றுகிறது.

BHEL தற்பொழுது லிபியா நாட்டில் உருவாகும் மேற்கு திரிபோலி மின்சக்தி நிலையத்தின் ரூபாய் 102 கோடித் திட்டத்தில் ஈடுபட்டுள்ளது. இது இரண்டு வருடங்களுக்கு அந்த வாடிக்கையாளர்களின் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்து தளவாடங்களை பராமரிக்கும் பொறுப்புடன் கூடிய ஒரு முழு இயக்கப் பூர்த்தியான தளவாட அமைப்பு. சவுதி அரேபியாவில், BHEL வாடிநூரான் பகுதியை மின்சக்திப் பூர்வமாக்கும் ரூபாய் 65 கோடி மதிப்புள்ள கொள்முதல் விண்ணப்ப கலப்பு ஒப்பந்தத்தை நிறைவேற்றி வருகிறது. மலேசியாவில், BHEL அந்த நாட்டின் தேசிய மின்சக்திக் கழகத்திடமிருந்து நீராவி மின்சக்தி உற்பத்தித் தளவாடங்களுக்கான தொடர்ந்த ஐந்தாவது கொள்முதல் விண்ணப்பத்தை வென்றுள்ளது. 544MW மொத்த சக்தியுள்ள நீர் மின்சக்தி உற்பத்தித் தளவாடங்கள் நியூசிலாந்து நாட்டின் ஒஹாவு ஸ்டிபோ எனும் இரு மின் உற்பத்தி நிலையங்களுக்கு அனுப்பப் படுகின்றன. தாய்லாந்து நாட்டின் பட்டானி பல நோக்குத் திட்ட நிறுவனத்திடமிருந்து 3 நீர் மின் விசையாழிகளுக்கான ஒப்பந்தம் BHEL-க்கு வழங்கப் பட்டுள்ளது. நேபாளத்தில் BHEL ஒரு முழுமின் உபநிலையத்தை நிர்மாணிக்கும் பணியில் ஈடு பட்டுள்ளது.

இவைகளும், மேலும் பல கொள்முதல் விண்ணப்பங்களும் BHEL-ன் உற்பத்தித் தளவாடங்களிலும், தொழிற் திறமையிலும் வளர்ந்து வரும் சர்வதேச நம்பிக்கையின் அத்தாட்சிகளாக விளங்குகின்றன.

மக்களுக்கு சக்தி

பாரத் ஹெவி
எலெக்டிரிக்கல்ஸ் லிமிடெட்

மார்க்கெடிங் & விற்பனைப் பிரிவு
நியூ டெல்லி ஹவுஸ்
பாரக்கம்பா சாலை
புது டெல்லி - 110 001.

பதிவு பெற்ற அலுவலகம்
18-20 கஸ்தூரிபா காந்தி சாலை
புது டெல்லி 110 001.



SAA BHEL 1223



பட விமரிசனம்

வேலும் மயிலும் துணை

அன்று அப்பன் இரண்யனுக்கு முன் பிள்ளை பிரகலாதன் 'கடவுள் உண்டு' என்று அவருக்கு விளக்கப் படாத பாடு பட்டான்! நம்பாத இரண்யனுக்குப் பிரகலாதன் கடைசியில் தூணைப் பிளந்து நரசிம்மாவதாரமே இறைவனை வேண்டி எடுக்க வைத்தான்!

நவீன நாஸ்திக வாதத்திலேயே ஊறிப் போன தணிகாசலத்துக்கு (எம். ஆர். ராதாவுக்கு அந்தப் பாத்திரம்.' நாஸ்திக வாதத்தில் உச்ச கட்டத்தையே அவர் எட்டிப் பிடிக்க மாட்டாரா?) கிருஷ்ணன், பிள்ளையார், அன்னை மீனாட்சி, முருகன் என்ற நான்கு தெய்வங்களின் அருள் மகிமையை விளக்கும் நான்கு நிகழ்ச்சிகளைக் காணும் வாய்ப்பு ஏற்படுகிறது. நாஸ்திக வாதி தணிகாசலத்துக்கு (எம். ஆர். ராதாவுக்கு அல்ல!) அவரது புதல்வன் சரவணன் தெய்வ நம்பிக்கை ஊட்டப் பாடுபடுகிறான்! 'அர்த்தமுள்ள இந்துமதம்' கண்ட கவிஞர் கண்ணதாசன் கண்ணனின் மகிமையை அந்த நாஸ்திக வாதிக்கு எடுத்துச் சொல்கிறார்! செவிடன் காதில் சங்கை ஊதினால் எப்படி?

மாட்டுக் காரக் கறுப்பனுக்குக் கிருஷ்ண பிரேமையில் பகவத் தரிசனமே கிட்டுகிறது! தீவிர வைஷ்ணவரான குருக்களுக்கு (மேஜர் சுந்தரராஜனுக்கு வைணவ பரிபாஷை கைவந்த கலையாயிற்றே!) கிருஷ்ணனைப் பூஜை செய்யும் மாட்டுக் காரக் கறுப்பனை மாட்டுக் காரப் பயலாகவே கருதி அடித்து நொறுக்கவே தோன்றுகிறது. பிறகு, குருக்களுக்குச் ''சூடு'' கண்ட பிறகே' 'ஞானம்' பிறக்கிறது!

குருக்களின் மனைவி முகப்பவுடர் பற்றி வேதம் படிக்கும் மாணவர்கள் அலசியபோது, குருக்களின் வாயிலிருந்து அபசார வார்த்தைகள் உதிருவது தேவையில்லாதது!

பிள்ளையார் — யானை முகத்தோனின் மகிமை காளி — வள்ளி தம்பதி நிகழ்ச்சியில் வெளிப்படுகிறது! பிள்ளையார் கோவில் நகைத் திருடன் காளி .(ஜெய்கணேஷ்) கோவில் யானைப் பாகன் மகள் வள்ளி (ராதிகா) யின் மனத்தையும் கொள்ளை கொண்டு விடுகிறான்! வள்ளியின் தாலி பாக்கியத்தினால் யானை முகத்தோன் காளிக்கு உயிர்ப் பிச்சை தருவது உச்ச கட்டம்!

ஊமைப் பெண் மீனாட்சியின் காதலனைக் கொலைக் குற்றத்திலிருந்து காப்பாற்ற மதுரை மீனாட்சி இனி உருவம் கொண்டு கோர்ட்டில் சாட்சி சொல்கிறாள்! ஊமைப்பெண்ணாக ஸ்ரீப்ரியாவின் நடிப்பு உண்மையாகவே நெகிழ்ச்சியைத் தருகிறது.

வைதாரை வாழ வைப்பவன் முருகன். நாஸ்திக வாதமே பேசிக் காலம் கழித்த. தணிகாசலத்தை (எம். ஆர். ராதாவை அல்ல!) காவடி தூக்க வைத்ததுதான் 'கிளைமாக்ஸ்!' ஆஸ்திகப் பிள்ளை சரவணன் 'தகப்பன் சாமி' ஆகி விட்டானே!

வேலும் மயிலும் துணையில் நடிகை — நடிகர் பட்டியல் ஏராளம்! சோ — மனோரமா ஹாஸ்ய விருந்து உண்டு! வக்கீல் அப்பளாச்சாரியாக வரும் சீனுவின் வெங்காய வடை தமாஷும் உண்டு! முருக பக்தர்களுக்குச் செவிக்கினிய கந்தர் சஷ்டி கவசம் உண்டு.

திரைக்கதை டைரக்ஷன் பொறுப்பை வகிக்கும் ரா. சங்கரன் ஒரு பக்திக் கதம்பத்தைப் பக்தர்களுக்கு வழங்கியிருக்கிறார்.

— பி. எஸ். எம்.

பாட்டிமார்களும் பேத்திமார்களும்

ஜெயகாந்தன்

4. வெள்ளையம்மாளுக்குத் தெரியுமே!

"அடேடே இங்கே ஒரு மாப்பிள்ளை இருக்காரே! இவருக்குப் பொண்ணு எங்கே பொறந்திருக்கிறாளோ?" என்று கூடத்தி லிருப்பவர்களைப் பார்த்துக் கூவினாள் காத்திமதி...

"போபோ! உனக்கு இதே வேலைதான்" என்று அவளைக் கேலி செய்து சிரித்தான் சிங்காரம்.

"நீ வா வெளியே... கல்யாணப் பொண்ணு மாதிரி அறைக்குள்ளே பூந்துக்கினுஇருக்கே?" என்று தம்பியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு கூடத்துக்கு வந்தாள் காத்திமதி... "கையெ வுடு அக்கா... நானே வரேன்" என்று அவன் எத்தனை தடவை சொல்லியும் கேளாமல், அவனைத் தானே இழுத்துக் கொண்டு வந்து கூடத்தில் உட்கார்ந்திருந்த அனைவரின் முன்னாலும் நிறுத்தினாள் காத்திமதி...

"என்னடி பொண்டுகளா?... இந்தச் சிறுக்குச் சிங்காரத்துக்கு நம்ப ராசாத்தி கல்யாணம் பண்ணிக்கிட்டுப் போயிப் பொண்ணுப் பெத்துக் குடுக்கற வரைக்கும் காத்திருக்கணுமா? எவளாவது இப்பவே பெத்து வெச்சிக்கினு காத்திருக்கிறீங்களா? சொல்லுங்கடி" என்று தன் தங்கைமார்கள் எல்லாரையும் பார்த்து அவள் கேட்ட போதி லும் அவள் பார்வை குறிப்பாகப் பொன்னம் மாளின் மீதே பதிந்திருந்தது. இப்போது அவளது நோக்கம் மூன்று இலக்குகளில் குறி வைத்துப் பிரிந்து திரிகோணமாய் வியூகம் கட்டி நின்றது. ஒன்று, இந்தச் சிங்காரம் பய லின் மனத்தை இந்த முடிவுக்குப் பதப்படுத்து வது. இன்னொன்று பொன்னம்மாளையும் இந்தத் தீர்மானத்துக்குத் தயார்ப்படுத்துவது —அவளைப் பற்றிப் பிரச்னை ஏதும் இல்லை;— மூன்றாவதாக, மிக முக்கியமாகப் பொன்னம் மாளின் மாமியார் அவ்வையாரம்மாளை எல்லாரின் முன்பாகவும் இந்த முடிவை ஆமோதிக்கச் செய்வது...

"சிங்காரத்துக்குக் கல்யாணம் பண்ணற துக்கு இப்ப என்ன அவசரமாம்?..." என்று சொல்லிப் பார்வையை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள் அவ்வையாரம்மாள்.

"எங்கே, இங்கே பார்த்துச் சொல்லுங்க" என்று அதட்டினாள் காத்திமதி: "சிங்காரத் துக்கு அவசரம்னு நான் சொன்னேன்?... அவனுக்கென்ன அவசரம்! அவன் ஆம்பிளைச் சிங்கம்... கோமகவரன்... அவனுக்கு அவசர மும் இல்லே; பெண்களுக்குப் பஞ்சமுமில்லே! தெரிஞ்சுக்குங்க... உங்க பேத்தி அமுதுவுக்கு ஆகுதே பன்னெண்டு வயசு?... அதுக்குமா அவசரமில்லே?..." என்று விஷயத்தை அழகாக அவிழ்த்து எல்லாரும் பார்க்கப் பரத்தி வைத்தாள் காத்திமதி.

"சரி அக்கா! இப்ப நீங்க வந்திருக்கிறது ராசாத்தி அக்காவைப் பொண் பார்க்க யாரோ வராங்கன்னு சொல்றதுக்குத் தானே? அதைப் பத்திப் பேசுவீங்களா? இப்ப அமுது எங்கே பூந்தது — நான் எங்கே போயிடறேன்..." என்று சொல்லிவிட்டுப் புறப்பட ஆயத்தமானான் சிங்காரம்:

"எனக்குக் கொஞ்சம் வேலை யிருக்குது. சாயங்காலம் சீக்கிரம் வந்துடறேன்... என்ன யோசனை? ஆகவேண்டிய ஏற்பாடுகளை அமோ கமா செய்யுங்க... காத்திமதி அக்கா போட்ட முடிச்சைக் கடவுள் கூட அவிழ்க்க முடியாது" என்று சொல்லிச் சிரித்தவாறு வெளியே வந்த சிங்காரம், இந்த வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்திருக்கும் பெரியசாமியைப் பார்த் ததும் சட்டெனச் சிரிப்படங்கி முகம் மாறி நின்றான்.

"உக்காரு தம்பி..." என்று புன்னகை காட்டினான் பெரியசாமி. சிங்காரம் பெரிய சாமியின் முகத்தைக் கூடப் பார்க்கவில்லை, தலையைக் குனிந்து கொண்டான்: "எனக்குக் கொஞ்சம் அவசர வேலை இருக்குது — பெரியவங்க எல்லாம் இருந்து செய்ய வேண்டி யதுதானே?..." என்று ரொம்பவும் பெரிய மனுஷ தோரணையில் சொல்லி விட்டுப் போய் வண்டியில் ஏறிக் கொண்டான் சிங்காரம்.

வண்டியில் ஏறிய பிறகுதான் தனக்காக வந்து காத்திருந்த அக்கரை நண்பர்களை அவன் கண்கள் தேடின.

அவர்கள் பெரியசாமிப் பிள்ளை இங்கு வரு வதைப் பார்த்துப் பயபக்தியுடன் கைகளைக்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

மாது: என் மகன் உங்கள் நினை வாகவே இருக்கிறான். முறைப் பெண்ணைக் கட்டிக்க மாட்டேன் என் கிறான்.

நடிகை: (பெருமையாக) இதுதான் தொந்தரவு. அழகாக இருப்பது எவ் வளவு ஆபத்து?

மாது: அதில்லையம்மா. முறைப் பெண் உங்களைப் போல் அவலட்சணமா இருக்கிறாள் என்கிறான்!

— எஸ். மகாதேவன்



கட்டிக்கொண்டு பின்புறமாகவே நடந்து பெரியவரின் கண்ணில் படாமல் அப்போதே ஓடிப்போய் விட்டார்கள்...

''என்ன இளவரக தர்பாருக்குப் புறப்பாடு ஆயிடுச்சா?...'' என்று கேட்டுக் கொண்டே வந்து திண்ணையில் ஏறி உட்கார்ந்தார் விளக்குச்சாமி.

வடம் போன்ற தங்கச் சங்கிலியொன்றை ரஞ்சிதம் தன் கரிய மார்பின் மீது பொருத்திப் பொருத்தி வைத்து அழகு பார்த்துக் கொண்டிருந்தாள். அதன் மதிப்போ உயர்வோ அவளுக்கும் தெரியாது, அதை அவளுக்கு ஆசையோடு கழுத்தில் அணிவித்த சிங்காரத்துக்கும் தெரியாது. ஆனால் வெள்ளையம்மாளுக்குத் தெரியுமே! நாளைக்கு ஏழைகளான தங்கள் மேல் ஏதும் பழி வந்து விடக்கூடாதே என்று ஒரு பக்கம் மனத்துள் பயந்து புலம்பிக் கொண்டிருந்தாள் வெள்ளையம்மாள்.

''அடியே ரஞ்சிதம்! நீ ஒரே முட்டாத்தான் அந்தப் புள்ளை உனக்கே இதெக் குடுத்துட்டு துன்னு நெனச்சிக்கின்னு ஆடாதே!... அவங்க எல்லாம் அப்படி ஏமாந்து எதையும் அள்ளிக் குடுத்துடறவங்க இல்லே... நாளைக்கே வந்து கப்ட்டிக்கினு பூடுது பாரு. அந்தப் புள்ளே...'' என்று ரஞ்சிதத்தை எச்சரித்தாள் வெள்ளையம்மாள்...

ரஞ்சிதம் வெள்ளையம்மாள் சொல்லுவதை நம்பாதவளாகச் சிரித்தாள். ''அவுரு எம் மாம் ஆசையா எங்கழுத்திலே போட்டு நீயே வெச்சிக்கன்னு சொன்னாரு... அவுரு ஒண்ணும் இதெத்திருப்பிக் கேக்க மாட்டாரு, போ — புத்தி?''

சிங்காரம் இந்தச் சங்கிலியைத் தன் கழுத்தில் அணிவித்த அந்தச் சம்பவம், அந்தத் தனிமை எல்லாம் ரஞ்சிதத்துக்கு மானசீகமாய்த் தோன்றி உடலும் மனமும் புல்லரித்தன... அவள் கண்களை ஏறச்



செருகிக் கொண்டு 'அவரு அவரு' என்று சிங்காரத்தைப் பற்றி மிரள மிரளப் பேசுவதையும் வெட்கப்படுவதையும் பார்த்து வெள்ளையம்மாள் மோவாயில் கையூன்றி அதிசயித்தாள்.

''ஊஹும்... எனக்கொண்ணும் உன்பாடு புரியலேடி அம்மா... நீ ஆழந்தெரியாமல் காலே உட்டுக்காதே – சொல்லிட்டேன்...'' என்றாள்.

''மீன் குஞ்சுக்கு நீ ஒண்ணும் நீந்தக் கத்துக் குடுக்க வேணும்'' என்று அந்தச் சங்கிலியின் அழகில் லயித்தவாறே சொன்னாள் ரஞ்சிதம்.

''தே பாரு... அது ரொம்ப வெலே ஜாஸ்தியான பொருளு... அந்தச் சிலுக்குப் பிள்ளைக்கு ஒண்ணும் தெரியாது... அது குடுத்தாலும் அவுங்க ஊட்டிலே இருக்கிற பெரியவங்க சம்மதிக்க மாட்டாங்க... நமக்கேன் இம்மாம் பெரிய பொருளு?... வேணும், ஆசைக்குப் போட்டுக்கினு இருந்துட்டு 'நீயே வைச்சிக்க'னு அந்தச் சிலுக்குப் பிள்ளை வந்தா அவுரு கிட்டே திருப்பிக் குடுத்துடு... பெரிய இடத்துச் சகவாசம் நல்லதில்லேடி! பின்னாலே கெட்ட பேரா ஆவும்...'' என்று புகையிலைக் காம்பைத் திருகிக் கொண்டு மகளுக்கு புத்தி சொன்னாள் வெள்ளையம்மாள்.

அப்போது குடிசைக்கு வெளியே இருந்து ரஞ்சிதத்தின் தோழிகள் சிலரின் சிரிப்பும் குரலும் கேட்டன...

அவர்கள் திருவிழாப் பார்க்கப் போகிறார்களாம். அதுதான் அந்தக் குதூகலத்துக்கும் கும்மாளத்துக்கும் காரணம்.

இங்கிருந்து பத்து மைலுக்கு அப்பால் குன்றேறிக் குமரக் கோட்டம் என்னும் பெயரில் ஒரு முருகன் கோயில் இருக்கிறது. இந்த அக்கரை மக்கள் பலருக்கு அந்தக் குன்றேறிக் குமரன்தான் குலதெய்வம். ஆண்டு தோறும் பத்து நாட்கள் அங்கே திருவிழா நடக்கும். தேர்த்திருவிழாவுக்கு அந்தப் பகுதியில் முப்பது நாற்பது மைல் தூரத்திலிருந்து மக்கள் வண்டி கட்டிக் கொண்டும், தலையில் மூட்டைகளைச் சுமந்து கால்நடையாகவும் குடும்பம் குடும்பமாய் – கிராமம் கிராமமாய் வருவார்கள். காவடி தூக்கிக் கொண்டும், அலகு குத்திக் கொண்டும் 'அரோகரா' கூப்பாட்டுடன் அணிஅணியாகப் போகிற கும்பலின் சத்தம் தாரை தப்பட்டை, பம்பை உடுக்கை ஒலிகளுடன் வெளியே கேட்கிறது...

''யம்மா... யம்மா நாலு திருநாளுக்கு மட்டும் இத்தெப் போட்டுக்கினு போயி வந்துடறேன்... அப்புறம் நீ சொன்னாப்பலேயே அவுருகிட்ட குடுத்துடறேன்'' என்று அந்தத் தங்கச் சங்கிலியைக் காட்டித் தலை குனிந்து வருத்தத்துடன் சொன்னாள் ரஞ்சிதம். அதைத் திருப்பிக் கொடுக்கும்போது, அதற்காகச் சிலுக்குப் பிள்ளை எப்படிச் சீறிக் கோபித்துக் கொள்ளப் போகிறானோ என்று நினைக்க ரஞ்சிதத்துக்குப் பயமாயிருந்தது.

சிலுக்குச் சிங்காரம் அந்தச் சங்கிலியைத் தன் கழுத்தில் போட்டு அருகே இழுத்துக் காதில் சொன்ன சேதியை நினைத்து இப்பவும் அவள் கிளுகிளுத்துச் சிரித்துக் கொண்டே தனது தோழிகளுடன் ஓடினாள்.


அக்கரையில் சலங்கைச் சத்தம் ஒலிக்க வண்டி வந்து நிற்பதையும் அதிலிருந்து சிலுக்குச் சிங்காரம் இக்கரைக்கு வரத் தோணிக்காரனைக் கைதட்டிக் கூப்பிடுவதையும் தூரத்திலிருந்து கவனித்து விட்ட ரஞ்சிதம்,

''இருங்கடி – செத்த நாழியிலே சித்தாடை மாத்திக்கிட்டு ஓடி வரேன்...'' என்று மறுபடியும் வீட்டுக்குள் ஓடி அறைக் கதவைச் சாத்திக் கொண்டாள். உடை மாற்றிக் கொள்ளும் போது – அந்த அறையின் சிறிய ஜன்னல் வழியாகத் தலைநீட்டி – தோணியிலேறித் தன்னைப் பார்க்க வந்து கொண்டிருக்கும் சிங்காரத்தை ரசித்துக்கொண்டே அவன் வந்து தன்னைத் தேடட்டும் என்று மனத்துள் சொல்லிக்கொண்டே, அறைக்குள் ஒளிந்து கொண்டிருப்பவள் போல் காத்திருந்தாள் ரஞ்சிதம். (தொடரும்)

கவர் விளம்பரத்துச் சினிமா மோகினி
சிரித்து மயக்கிய சிறுநொடிப் பொழுதில்,
சட்டைப் பையில் கத்தரி வெட்டு! —யெஸ்பால்.



3 மாதம் ஆனபின், பால் மட்டும் போதாது





டாக்டர்கள் சிபாரிசு செய்வது

ஃபாரெக்ஸ்®

உங்கள் குழந்தைக்கு உன்னதமான திட உணவு

டாக்டர்கள் ஃபாரெக்ஸ் சிபாரிசு செய்யக் காரணம்?
திட உணவு தொடங்கும் காலத்தில் உங்கள் பாப்பாவின் தேவைகளுக்கு நிறைவு தரும்படி சரிவிகிதமாகச் சத்துக்கள் நிரவியது ஃபாரெக்ஸ்; பச்சிளம் ஜீரண சக்திக்கு ஏற்றது.

ஃபாரெக்ஸ், பாப்பாவின் தேவைகளுக்கு நிறைவு தரும் சத்துணவாக விளங்கக் காரணம்?
இது வழங்கும் சத்துக்கள்: மூளை வளர்ச்சிக்கும் உடல் வளர்ச்சிக்கும் தக்க அளவில், ஜீரணிக்க லகுவான புரதச் சத்து; சக்திக்கான கார்போ-ஹைட்ரேட்; பற்களுக்கும் எலும்புகளுக்கும் வலுவூட்டப் போதுமான கால்ஷியம், பாஸ்பரஸ், வைட்டமின் D அதிமுக்கியமாக, இரத்தத்தை நலமுடன் வைத்திருக்க உகந்த அளவு இரும்புச் சத்து.

எதற்காக 3ஆம் மாத முதல்?
உணவை உங்கள் பாப்பா தக்கபடி மென்று தின்னப் பழக வேண்டும்; விழுங்கினாலோ, வயிற்று வலி வரலாம், வளர்ச்சி பாதிக்கப்படலாம்.

3 மாதக் குழந்தையின் ஜீரண சக்தி இன்னமும் இளம் பிஞ்சுதான். எனவே, சம்பிரதாய உணவுகளை விட மேலாக அவனுக்குத் தேவை: தனிப்படத் தயாரிக்கப்பட்ட திட உணவு--எளிதில் செரிக்கத்தக்க குழந்தையுணவு.

'வயதேறிய' உணவுகளைத் துவக்குவது எப்போது?
பாப்பா முதலடி வைத்து நடக்கும்போது, 'வயதேறிய' உணவுகளை வரவேற்பான். சிறிது கற்பனையும் அளவிலா அன்பும் இழைய, எல்லா உணவுகளிலும் கலந்து கொடுங்கள் ஃபாரெக்ஸ்.

இப்போது, 400 கிராம் டின்னிலேயும் வருகுது அதே ஃபாரெக்ஸ் நல்லமுது.



விரைவான முழு வளர்ச்சிபெற பாப்பாவுக்கான உன்னதமான திட உணவு



‘அளப்புக் கோய்ந்தன்’ பீதாம்பரம்!

‘அறந்தை ராஜு’

மேஜர் பஞ்சாயத்து போர்டு மதிப்பேயுள்ள ஊர். போலீஸ் ஸ்டேஷன். சப் — இன்ஸ்பெக்டர் சீறிக் கொண்டிருந்தார்:

‘‘ஏய்’’ எங்கேய்யா ஏட்டு பீதாம்பரம் தொலேஞ்சு போனுர்.’’

‘‘தண்ணி போடப் போயிருக்காருங்க!’’

‘‘என்ன... தண்ணியா...?’’

‘‘ஸாரி... ஸாரி... மன்னிக்கணும்... தண்ணி குடிக்கப் போயிருக்காருங்க—ஐஸ் வாட்டர்.’’

‘‘ஐஸ் வாட்டர் குடிக்காம இருக்க முடியலேயாமா தொரைக்கு... வரட்டும் பேசிக்கிறேன்...’’

சைக்கிளிலே வந்து இறங்கினுர் ஏட்டு... சப் இன்ஸ்பெக்டர் பீதாம்பரத்தை முறைத்தார்.

‘‘ஏய்யா, ஐஸ் வாட்டர் குடிக்காம இருக்க முடியலியா?’’

பீதாம்பரம் சாவகாசமாகப் பதிலளித்தார்: ‘‘ஸ்டேஷனுக்கு வர்ற எல்லாப் பயலும், ‘ஏனய்யா ராஜபாளேயம் மாதிரி விழுந்து புடுங்குறே’ன்னு கறுவுறுன். அதான் கொஞ்சம் கூலா ஐஸ் வாட்டர் அடிச்சிட்டு... சேச்சே... குடிச்சிட்டு வர்றேன்.’’

‘‘ஆமா... இப்படியே பொழுதை ஓப்பேற்று...’’ கொஞ்ச காலமா கேஸே ரொம்ப கம்மி... ஊரிலே எல்லாரும் யோக்கியமா போயிட்டான் போலிருக்கு’’ன்னு சொல்லி டி. எஸ். பி. இண்டல் பண்றுருய்யா. இண்டல்...’’

‘‘ஸார்.. போன நான் சும்மா வரல்லே... கேஸோடும் கொண்டாந்திருக்கேன்...’’

‘‘என்னய்யா கேஸ்...? மறுபடியும் சட்டத்தை மறந்துட்டு டபிள்ஸ் பிடிச்சியா?’’

‘‘இது சைக்கிள் கேஸில்லே ஸார்... நான் ‘‘ஓட்டல் பரலோக்’’கிலே ஐஸ் வாட்டர் குடிக்கப் போனேனு, அப்போ ரெண்டு சர்வருக்குள்ளே சண்டை வந்துடிச்சி...’’

‘‘என்ன சண்டை?’’

‘‘ஒற்றுமையைப் பத்தி எங்க தலேவருதான் நல்லாப் பேசிஞருன்னு ஒருவன்; இல்லே, எங்க தலேவருதான்னு இன்னெருவன் கட்சி.’’

‘‘அப்புறம்...?’’

‘‘அப்புறம் என்ன... ஒரு சர்வர் இன்னெருத்தன் மேலே தோசை திருப்பியாலே ஓங்கி அடிச்சிட்டான்.’’

‘‘அய்யய்யோ...!’’

‘‘அய்யய்யோவா... அந்த சர்வருக்கு 70 எம்.எம். பாடி. தடியன் சார். இதுக்கெல்லாம் மசிவானு... தோசை திருப்பியைப் பிடுங்கிக் கையாலே ஒடிச்சித் தூக்கி எறிஞ்சிட்டு, அடிச்சவன்கிட்டே நகர்றுன்...’’

‘‘பிறகு?’’

‘‘அடிச்சவன் பீதியடைஞ்சுட்டான்... நல்லவேளேயா சரக்கு மாஸ்டர், காதிலே ஒரு ஐடியா சொல்லியிருக்கார். அதுபடி, ஒரு போண்டோவை எடுத்து 70 எம். எம். பாடி தடியன் நெஞ்சைப் பார்த்து வீச அது நம்ம சர்க்கிள் ஐயா துப்பாக்கி குறி போல தவறி, தடியன் மண்டை யைத் தாக்க, மண்டை உடைஞ்சி ரத்தம் கொட்டி ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போயிட்டாங்க...’’

‘‘அடிச்சவனே அரஸ்ட் பண்ணலியா?’’


‘‘அவன்தான் ரெண்டு இட்லியைக் காலிலே போட்டுக்கிட்டுக் கால் ஒடிஞ்சி தடியனுக்குப் பக்கத்து பெட்டிலே அட்மிட் ஆயிருக்கானே ஸார்...’’

''அப்புறம் யாரைய்யா கேஸ் புக் பண்ணினே?'' என்று கேட்டார் பொறுமையிழந்த சப் – இன்ஸ்பெக்டர்.

''வழக்கம் போலச் சண்டையை விலக்கி விட்டவங்களை புக் பண்ணிட்டேன்.''

''அறிவிருக்காய்யா உனக்கு? சண்டையை விலக்கி விட்டவங்களை கேஸ் புக் செய்றியா?...''

''அவங்கதானே ஸார் நமக்கு ரெண்டு கொலைகேஸ் கிடைக்கறதைத் தடுத்தானுக.''



''போகட்டும்... இத்தனைக்கும் காரணம் அந்த ஓட்டல்காரன்தான்... அவனைப் பயங்கர ஆயுதங்கள் தயாரிப்பு குற்றத்தைச்சுமத்தி அரஸ்ட் பண்ணு... அதுசரி, இந்த மாதிரி ஒரு ஓட்டல் ஆரம்பிக்கணும்னு அதிலே இப்படி சரக்குகளைத் தயார் பண்ணணும்னு அந்த ஆளுக்கு எப்படித் தோணிச்சு...?''

''அதுங்களா... ஓட்டல்காரரோட மச்சினன் ஒரு டாக்டர். ரெண்டு பேரும் ஒருத்தருக்கொருத்தர் உதவுறதா 20 ஆண்டு ஒப்பந்தம் பண்ணிக்கிட்டாங்க...

''அதோட சார்... இந்த ஓட்டல் காரருக்கு நாட்டுப் பற்று ஜாஸ்தி. நம்ம பகுதியிலே நிறைய நல்லபாம்பு, கட்டுவிரியன், கொம்பேரி மூக்கன் போன்ற விஷப் பாம்புகளெல்லாம் இழையுதா... அதெல்லாம் இந்த ஓட்டல் கஸ்டமருங்களைக் கண்டாலே 'சிறியா நங்கை' மூலிகைச் செடி யைக் கண்டமாதிரி ஓடிப்போயிடுதாம். அப்படியும், பராக்கு பார்த்திட்டு மறந்துபோய்ச் சில பாம்புங்க கடிச்சாலும், உடனே பாம்பு செத்துப் பூடுமாம்...''

''அட... இந்த ஹோட்டல் செய்யறது அபூர்வ சேவைதானைய்யா!''

''இல்லையா ஸார் பின்னே!... 'இந்த ஓட்டல் காப்பி தயாரிக்கிற ஃபார்முலா மட்டும் கிடைச்சால் போதும். எங்களுக்கு ஹைட்ரஜன் பாம் கூட வேண்டாம்... இஸ்ரேலை ஒரு கை பார்த்திடுவோம்னு பாலஸ்தீன கொரில்லாக்கள் சொல்றுங்களாம்... இந்தப் பார்முலா கிடைச்சால் ரஷ்ய ஒப்பந்தத்தை ரத்து செய்ய அராபியர்கள் தயாராம்!''

''அட அப்படியா?''

''அது மட்டுமா. இந்தக் காப்பியோட எபெக்டைக் கேள்விப் பட்டு அதிபர் ஜிம்மி கார்ட்டர் அதிர்ந்து போயிருக்காராம். இஸ்ரேல் பிரதமர் பிகின் பீதியடைஞ்சு போயிருக்காராம். எங்கே அராபியர்களுக்கு இந்தப் ஃபார்முலா கிடைச்சுடுமோன்னு பயந்து போய் எகிப்து அதிபர் சாதத்தை நைஸ் பண்ணி சமாதானம் பண்ணிட்டாங்களாம்!''

''அது சரிய்யா ஏட்டு... அவங்களுக்கு இந்த ''பரலோக் ஓட்டல் காப்பியை''ப் பத்தி எப்படித் தெரிஞ்சதுன்னேன்?''

''சி. ஐ. ஏ. யும், ஸ்காட்லண்ட் யார்டும் துப்பு குடுத்திருக்கு ஸார்... அது மட்டுமில்லே; இங்கே, கொள்ளுப் பேரன் ''குவா குவா''ன்னு கதறுகிற சத்தத்தைக் கூடக் காதிலே வாங்கிக்காமல் சீனப்பிரதமர் 'ஹுவா குவா பெங்' குர்ன்னு' உட்கார்ந்திருக்காராம். அவங்க நாட்டு 'நால்வர் குழு' பிரச்னைகூட இப்போ பெரிசில்லையாம். பரலோக் ஓட்டல் முதலாளி, சரக்கு மாஸ்டர் கொண்ட 'இருவர் குழு'வைப் பத்தித்தான் இப்போ அவருக்குச் சிந்தனையாம். இந்தச் சிந்தனையிலே மாவோ சிந்தனையைக்கூட மறந்திருக்கார். யுத்தத்திலே பிடிச்ச இமயமலை ஏரியாவைத் திருப்பிக் கொடுத்து இந்தியாவை நைஸ் பண்ண நினைச்சிருக்கார். அதுக்காகத்தான் ''பிங் பாங்'' டிப்ளமஸியைக் கையாள்றார்.''

''அடேயப்பா... ஏய்யா பீதாம்பரம்... இதுக்கு இவ்வளவு பின்னணியிருக்கா?'' என்று வாயைப் பிளந்தார் சப் – இன்ஸ்பெக்டர். தொடர்ந்தார் ஏட்டு பீதாம்பரம்: ''இவ்வளவு பிரபலமான பிறகு பரலோக் காப்பியின் ஃபார்முலாவை நம்ம கவர்ன்மெண்ட் கம்மா விட்டு வைக்குமா?''

''நம்ம கவர்ன்மெண்டிலே அந்த ஃபார்முலாவை வாங்கிட்டாங்களா?''

''ஊஹூம். கொடுப்பாரா ஓட்டல் பரலோக் முதலாளி? கண்டிச்சுச் சொல்லிட்டார். 'ஃபார்முலாவை வாங்கிட்டுப் போய் ரகசிய அறையிலே இப்போ பூட்டித்தான் வைப்பீங்க. ஆனால் நாளைக்கு பார்லிமெண்டிலே பூபேஷ்குப்தா ஃபார்முலா பேப்பரை எப்படி எலி கடிச்சதுன்னு கேள்விகேட்டுப் பேப்பரை மூஞ்சிலே விட்டு எறியும்போது உளற ஆரம்பிச்சுடுவீங்க...!' அப்படின்னு.''

''கடைசிவரை கொடுக்கலியா?''

''இல்லையே.. அப்புறம் சி. பி. ஐ. சாம்பிள் காப்பியை டெஸ்ட் டியூபிலே எடுத்துக்கிட்டுப்



போய், டில்லியிலே இருந்த தலைசிறந்த இரசாயன விஞ்ஞானி கிட்டே கொடுத்து ஃபார்முலாவைக் கண்டுபிடிக்க எடுத்துக்கிட்டுப் போயிருக்கு. ஆனால் அவர் அப்போ வறுமை தாளாமல் தற்கொலை பண்ணிக்கிடவே, டிராம்பே போய் விஞ்ஞானி டாக்டர் விக்ரம் சாராபாய்...''

''அட இந்தி நடிகை மல்லிகா சாராபாயோட தகப்பனர்!...''

''ஆமா ஸார்... உங்களுக்கு நடிகையின் தகப்பனருன்னுத்தான் புரியுது... அப்புறம்... டாக்டர் எச். என். சேத்னு... டைரக்டர் ராமண்ணு...''

''அட தேவலாமே ராமண்ணு சினிமாவும் எடுக்கிறரு... விஞ்ஞானியாகவும் இருக்காரே'' என்று ஆனந்தித்தார் சப் — இன்ஸ்பெக்டர்.

தலையில் அடித்துக் கொண்டார் ஏட்டு பீதாம்பரம்.

''ஸார் அவரு வேறே; இவரு வேறே... அந்த விஞ்ஞானியெல்லாம் ஒட்டு மொத்தமா சொல்லியிருக்காங்க:

''ஐயா சி. பி. ஐ. தலைவரே, நாங்க இப்போ வெடிச்ச அணுகுண்டு அந்தக் காலத்திலே நாகசாகியிலே அமெரிக்கா வெடிச்ச அணுகுண்டுக்குச் சமமான சக்தி உள்ளது தான்'னு சொல்லி எல்லாரும் எங்களைக் கிண்டல் பண்றுங்க... வேணும்னு கஷ்டப்பட்டுத் தற்போதைய அமெரிக்க அணுகுண்டுக்குச் சமானமா ஒன்னை உருவாக்குறேும்.

என்ன விநோதம் பாரு!

உங்கள் வாழ்க்கையில் நடந்த வேடிக்கை, விநோதமான நிகழ்ச்சி ஏதாவது ஒன்றைக் குறிப்பிட முடியுமா? என்று நான்கு பேர்களைக் கேட்டபோது:



''ஆகா! பிரமாதம்'' என்றர் வாடேகர்.

திரு குமார் சொல்கிறர்: ஆறு ஆண்டுகளுக்கு முன் பொங்கலன்று ஏன் பொங்கல் பூஜையை மைதானத்தில் நடத்தக்கூடாது என்ற ஆசை பிறந்தது. அவ்வளவுதான். நண்பர்களுடன் நானும் என் மனைவியும் மைதானத்துக்குள் நுழைந்தோம். மனைவி ஸ்டாண்ட் வாசலில் கோலம் போட, நன்கு மந்திரம் தெரிந்த நபர் மந்திரம் ஓத, பூஜை முடித்துப் பொங்கல் சாப்பிட்டோம். எட்டு மணிக்கே மைதானத்துக்கு வந்திருந்த ரசிகர்கள் ஆரவாரம் செய்து ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். நெட் பிராக்டீஸ் செய்து கொண்டிருந்த வாடேகரிடம் பொங்கல் கொடுத்தேன். 'ஒவ்வொரு வருடமும் இதுபோல ஆட்டக் காரருக்குக் கொடுத்து உற்சாகப் படுத்துங்களேன்' என்று யோசனை வேறு சொன்னர். அதிலிருந்து ஒவ்வொரு வருடமும் யாராவது ஒரு ஆட்டக்காரராவது எங்கள் பொங்கலைச் சாப்பிடுவது வழக்கமாகி விட்டது!

''திருடரே வருக!''

குமாரி எஸ் ஜெயந்தி கூறுகிறர்: என் அத்தை பையனை ஒரு விசேஷத்திற்கு வருமாறு அழைத்தேன். குறிப்பிட்ட தினத்தன்று நாள் முழுவதும் எதிர்பார்த்தும் அவன் வரவில்லை.

இரவு எல்லோரும் தூங்கிய பிறகு பதினெரு மணி சுமாருக்குக் கதவு தட்டப்படும் ஓசைகேட்டது. அப்பா கதவைத் திறந்தார். வெளியே வாட்ட சாட்டமான மனிதர் கறுப்புச்சட்டை ஜுங்கியோடும் கையில் பளபளக்கும் கத்தியோடும் நின்று, விழிபிதுங்க எங்களை மிரட்ட ஆரம்பித்தான். ''ம்... எடுங்கள் நகைகளை, சீக்கிரம்!'' என்றன். நகைகளை அம்மா கழற்றி அவன்முன் வைத்தாள். பின்பு என்னை நோக்கியவன், ''உம்... நீயும் சங்கிலியைக் கழற்றி வை'' என, நான் மறுத்தேன். மேலும் என்னை மிரட்டினன். ''டேய் கண்ணு போதும் உன் நாடகம்'' என்றேன். ''எப்படிக் கண்டு பிடித்தாய்?'' என்று அவனும் என் பெற்றேரும் வியந்து கேட்டனர். ''முக ஒப்பனையுடன் உடையும் மாற்றியிருந்தானே யொழிய கால்களை ஷூ போட்டு மறைக்காமல் விட்டு விட்டான்! வலது கால் ஆறு விரல்களும் பளிச்சென்று தெரிந்தன'' என்றேன்.



ஆனா இந்த காப்பி ஃபார்முலாவைக் கண்டறிஞ்ச விஷயம் எங்கள் அறிவுக்கு எட்டாதது.''

''அப்புறம்...?'' கேட்டார் சப் - இன்ஸ்பெக்டர்.

''அப்புறம் ஓட்டல் முதலாளிக்கும், சரக்கு மாஸ்டருக்கும் ஆளுக்கொரு பட்டம் கொடுத்துக் கைக்குள்ளே போட்டுக்கிடுச்சி அரசாங்கம். ஆனால் பட்டத்தைப் பறக்க விட 'லிலித் தனமா' கவர்ன்மெண்ட்லே காசு கேட்காமல் சுதேசியாகவே போண்டா, உளுந்து வடையிலேயிருந்து திருவாங்கூர் ரேயான் நூலைவிட அற்புதமான நூல் பிரிப்பேர் செய்ததைத்தான் நாம் நிலைய சங்கம் வியந்து பாராட்டியிருக்குது. டைம்ஸ் ஆப் இண்டியா பாராட்டுச் செய்திகளை வெளியிட்டது.''

அடுத்த நாள், எஸ். பி.க்கு டி. எஸ். பி. குறிப்பு ஒன்று எழுதிக் கொண்டிருந்தார்:

''...நேற்று அமாவாசையாதலால் பி-1 ஸ்டேஷன் சப் - இன்ஸ்பெக்டருக்கும் -- ஏட்டு பீதாம்பரத்துக்கும் நன்றாக ''முற்றி விட்டது.'' தற்செயலாக ஸ்டேஷனுக்குப் போன நான், அவர்களது பயங்கர உளறல்களைக் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை — பின் ஹியரிங் எய்டு வைத்துக் கொண்டபின் தான் கேட்க முடிந்தது!

மேற்படியார்களுக்கு ஒரு மாதம் லீவு கொடுத்துஅரசு செலவில், சென்னைக் கீழ்ப்பாக்கம் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுப்பலாம் என்று நான் சிபாரிசு செய்கிறேன்!

பிரம்மச்சாரி ஸ்பெஷல்!

திரு துரை தம் அனுபவத்தை விவரிக்கிறார்:

ஹோட்டலில் சாப்பிடும் எனக்கும் என் மூன்று பிரம்மச்சாரி நண்பர்களுக்கும் நாங்களே சமையல் செய்து சாப்பிட வேண்டும் என்ற ஆசை கிளம்பியது. பம்பாயில் உள்ள எங்கள் காட்டேஜின் மறு பகுதியில் ஒரு தென்னிந்தியக் குடும்பம் குடியிருந்தது. வேண்டிய மளிகை சாமான்களை, காய்கறிகளை முதலில் வாங்கிக் கொண்டோம். பிறகு, தேவைப்பட்ட பாத்திரங்களை வாங்கிச் சேர்த்தோம். மறுபடி வெளியே சென்றோம். திரும்பிய போது பெரிய ஆச்சரியம் எங்களுக்குக் காத்திருந்தது. நாங்கள் வாங்கிய, எதையும் அறையில் காணவில்லை. தேடும் படலத்தில் ஈடுபட்ட எங்களை மறு போர்ஷனில் இருந்த அக்குடும்பத்தின் தலைவர் அழைத்து அப்பொருள்களைத் தாம்தான் எடுத்ததாகக் கூறி, தயாரிக்கப்பட்ட பதார்த்தங்களைக் கொடுத்தார். ''அடடா! நாங்களே சமைக்க வேண்டும் என்று ஆசைப் பட்டோமே. கெடுத்தீர்களே காரியத்தை'' என்றோம். ''அது சரி இவ்வளவு சேகரித்தவர்கள் மிகவும் முக்கியமான ஸ்டவ் வாங்க மறந்து விட்டீர்களே? எப்படிச் சமைப்பீர்கள்?'' என்றார். முகத்தில் அசடு வழிவதை மறைக்க அவசரமாகச் சாப்பிடச் சென்றோம்.



சங்கராந்தி சம்பந்தம்!

திருமதி அருணா கோபாலகிருஷ்ணன் கூறுகிறார்: என் திருமணத்துக்கு முன்பு நாங்கள் பெங்களூரில் இருந்தோம். அங்கு பொங்கலைச் 'சங்கராந்தி' என்று கொண்டாடுவார்கள். அன்று பூஜைக்குப் பிறகு, எள், வெல்லம், கொப்பரை, இவைகளைத் தட்டில் வைத்து எல்லோருக்கும் கொடுப்போம்.

இதன்படி இவைகளை எடுத்துக்கொண்டு பக்கத்தில் வசித்த தமிழர் வீட்டிற்குச் சென்றேன். என்னை விரட்டாத குறையாக 'நல்ல நாளும் அதுவுமாக இவைகளைக் கொண்டு வந்தாயே பெரிய அபசகுனம்' என்று அவர்கள் எரிந்துவிழ எனக்கு அழுகையே வந்துவிட்டது. வீட்டுக்கு அவற்றைத் திரும்ப எடுத்துச் செல்வது மேலும் பெரிய அபசகுனம் என நினைத்தேன்.

மறுபக்கத்து வீட்டிலிருந்தவர்களிடம் அதிகப் பழக்கம் இல்லை. தயங்கியவாறு சென்றேன். அதுவும் தமிழர் குடும்பம்தான். அங்கிருந்தவர் இதன் அர்த்தத்தைக் கேட்டார். ''நம் இருகுடும்பங்களிடையே நல்லுறவு நீடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் என் கொடுக்கிறோம்'' என்றேன். என்னைப் பார்த்தவர் மிகுந்த உற்சாகத்தோடு பெற்றுக் கொண்டார்.

அன்று மாலை அவர் எள், வெல்லம், கொப்பரையோடு, பழங்களுடன் எங்கள் வீட்டிற்கு வந்து என்னைப் பெண் கேட்டார். அன்று மாலையே நிச்சயதார்த்தம் நடந்தது!



போட்டி: ''சிக்கி''



✖ நிழல் பொம்மலாட்டத்தில் பயன்படும் தோல் பொம்மை



✖ ''மாக்யோங்'' நடனம்



✖ வெள்ளியில் கலை வேலைப்பாடு

அந்தச் சிற்றூரில் டீ சாப்பிடுவதற்காக நாங்கள் வண்டியை நிறுத்திய போது இரவு மணி ஒன்றரை. அந்நேரத்தில் நாங்கள் சென்ற சிற்றுண்டி சாலை திருவிழாக் கூட்டத்தோடு, பாட்டும், சிரிப்புமாய் அமர்க்களப் பட்டுக் கொண்டிருந்தது.

நுழை வாயிலில் பெரிய பெரிய அடுப்புகளில் மூங்கில் கூடைகளை, பாத்திரங்களுள் வைத்துச் சமைத்துக் கொண்டிருந்தார்கள். மூங்கில் கூடை கேக்குகளாம், ரொம்ப ருசியாய் இருக்குமாம். ''சாப்பிடுகிறீர்களா?'' என்றார் குமணன். அந்தக் கூடைகளிலிருந்து வீசிய மணம் சகிக்க முடியாமல் இருக்கவே வேண்டாம் என்றேன்.

உள்ளே சென்று உட்கார்ந்தோம். சீனப் பெண்களும், இளைஞர்களும் நிறைந்து வழிந்தனர். சீனப் பணிப் பெண்கள் அனைவரும் சின்னவர்களாய், சிரித்த முகங்களைக்கொண்டவர்களாய் இருந்தனர். வந்திருந்த ஆண்களில் சிலர் பெண்களின் கையைப் பிடித்தும், இடுப்புப் புறத்தைத் தழுவியும் செய்ததைப் பார்த்து ''இவ்வளவு சகஜமாய்ப் பழக இப்பெண்கள் சம்மதிக்கிறார்களே?'' என்றேன்.

''இவர்களெல்லாம் குடும்பத்துப் பெண்களே. கம்மா கடையின் வருமானத்தை அதிகரிக்க இப்படி வாடிக்கைக் காரர்கள் சில்லறை விஷமம் செய்ய அனுமதிக்கிறார்களே தவிர மேற்கொண்டு ஏதாவது வம்பு செய்யக் கிளம்பினால் அதைத் தடுத்து நிறுத்த அடி ஆட்கள் உண்டு. அங்கே பாருங்கள்...''

குமணன் காட்டிய திசையில் பார்த்தேன்.

தடி தடியாய் நாலைந்து முரட்டு ஆட்கள் ஒரு பக்கமாய் அமர்ந்து குடித்துக் கொண்டிருந்தனர்.

''கடையில் ஏதும் ரசாபாசமாய் நடக்காமல் இருக்க இவர்களைக் கடைச் சொந்தக்காரர் நியமித்திருப்பது இங்கு வரும் அனைவருக்கும் தெரியும். அதனால் சாதுவாய்ப் போய் விடுவார்கள்—''

''இந்தச் சின்ன ஊரில் எப்படி இவ்வளவு கூட்டம் இருக்கிறது? அதுவும் இந்த நேரத்தில்?''

''இன்றைக்குச் சனிக்கிழமை அல்லவா? அதனால்தான் இவ்வளவு கூட்டம்... தவிரவும் இங்கு சாப்பாடு ரொம்ப ருசியாக இருக்கும்'' என்று குமணன் கூறிக் கொண்டிருக்கையிலேயே டீயும், வெள்ளை பதார்த்தமும் வந்து சேர்ந்தன.

பார்ப்பதற்கு அவை கொழுக்கட்டை மாதிரி இருந்தன. மாவுப் பகுதியைப் பிளந்தால் உள்ளே மாமிசத்தால் ஆன பூரணம். இதைச் சீனர்கள் ரொம்ப விரும்பிச் சாப்பிடுவார்களாம். (இதற்குக் குமணன் சொன்ன பெயரை நான் மறந்து விட்டேன்.)

டீ குடித்து முடித்ததும் மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தோம். குமணன் தூங்கி விடாமல் இருக்க, துரைராஜும், என் கணவரும் விடாமல் அந்தக் காலத்துப் பாடல்களைப் போட்டி பாடிக் கொண்டே வந்தார்கள்.

வண்டி கெர்லிங் என்ற ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தாண்டிய போது சமீபத்தில்

மனம் கவர்ந்த மலேஷியா-10





✱ மலேஷிய நாயனம்

✱ எம். துரைராஜ்

சிவசங்கரி

அங்கு நடந்த சம்பவம் ஒன்றைக் குமணன் விவரித்தார்.

ஆறு மாசங்களுக்கு முன் சில மலாய் மொழி வெறியர்கள் தமிழர்கள் மேல் காரணமில்லாமல் ஆத்திரம் கொண்டு, ஆங்காங்கு தோட்டங்களில் இருக்கும் கோவில்களுள் இரவு நேரங்களில் நுழைந்து சிலைகளைப பின்னப்படுத்தி, கோவிலை அசுத்தம் செய்யத் தொடங்கினார்களாம். கிட்டத்தட்ட பத்து கோவில்களை இப்படி நாசம் செய்தும் அவர்கள் யார் என்று கண்டுபிடிக்க முடியாமல் போகவே, வேறு பல தோட்டங்களில் உள்ள கோவில்களில் அந்தந்தத் தோட்டத்தைச் சார்ந்த இளைஞர்கள் காவலாகப் படுத்துக் கொள்ள முற்பட்டனராம். அப்படி இங்கு கெர்லிங்கில் உள்ள கோவிலில் மூன்று மாசங்களுக்கு முன் நாலு இளைஞர்கள் தங்கி இருந்த ஓர் இரவில் முகமூடி அணிந்த ஐந்து மலாய்க்காரர்கள் காரில் வந்தார்களாம்.

அவர்கள் கோவிலுள் நுழைய, இவர்கள் தடுக்கச் சண்டை பயங்கரமாகி விட்டது. அவ்வழியே சென்ற ஒருவர் ஓடிப்போய் ஊரின் இமாமை, அழைத்து வந்திருக்கிறார். 'இமாம்' நல்ல வார்த்தைகள் சொல்லித் தடுத்தும் கேளாத மலாய் இளைஞர்கள் கத்தி வீறல் அவரையே குத்திவிட்டுக் கோவிலுள் நுழைந்து விட்டனர். தமிழர்களுக்கும் ஆவேசம் வந்துவிட்டது. சரியான அடிதடி. இதில் நாலு மலாய் இளைஞர்கள் செத்து விட்டார்கள். போலீஸ் வந்து பாக்கி இருந்த ஒருவரையும், தமிழர்களையும் கைது செய்து விட்டது. இப்போது தமிழர்கள் மேல் கொலை செய்த குற்றத்துக்காக போலீஸ் கேஸ் போட்டிருக்கிறதாம்.

''தீர்ப்பு எப்படி இருக்கும் என்று தெரியவில்லை. இத்தனைக்கும் மலாய் இளைஞர்கள் அனைவரும் நன்கு படித்தவர்கள், பாமரர்கள் கூட இல்லை. ஒற்றுமையுடன் பல இனங்கள் வாழும் இந்நாட்டில் இந்நிகழ்ச்சி மிகுந்த பரபரப்பை உண்டு பண்ணி யிருக்கிறது...''

பேசிக் கொண்டே சென்று மூன்று மணி அளவில் கே. எல். ஐ. அடைந்தபோது தெரியாத சிரமம், ஹோட்டல் அறையை அடைந்து படுக்கையில் விழுந்த போது தான் புரிந்தது.

காலையில் ஏழு மணிக்குக் கூட எழுந்திருக்க மாட்டேன் என்று உடம்பு சண்டித்தனம் பண்ணியது. மூட்டுக்கு மூட்டு வலி, கண்களைத் தூக்கம் அழுத்தியது. ஒன்பது மணிக்கு மலேஷியத் தமிழ் எழுத்தாளர் சங்கக் கூட்டம் இருந்ததால், அசதியை உதறித் தள்ளிவிட்டு, குளித்துத் தயாரானேன்.

நூற்றி ஐம்பது எழுத்தாளர்கள் போல் வந்திருந்தனர். ஈப்போவிலிருந்து விடிகாலை நாலு மணிக்குக் காரில் புறப்பட்டு கே. எல். லுக்கு வந்ததன் மூலம் திருமதி கமலாட்சி தமது ஆர்வத்தை வெளிப் படுத்தினார். யூனிவர்ஸிடி கூட்டத்தில் நான் சந்தித்திருந்த பிரமுகர்கள் வந்திருந்தார்கள், மலேஷியாவின் தலை சிறந்த எழுத்தாளர்கள், கவிஞர்கள் வந்திருந்தார்கள். தமிழ்நேசன் பத்திரிகையின் ஆசிரியர் வந்திருந்தார். இன்னும் பல அன்பர்கள்.

சங்கத்தின் செயலாளர் திரு பூபாலன், வரவேற்பு உரை நிகழ்த்தினர்.

''வழக்கமாக யாரைப் பேட்டி கண்டாலும் அவர்களை எந்தக் கேள்வி கேட்டுப் பதில் சொல்ல முடியாமல் திணற வைக்கலாம் என்றுதான் நான் திட்டமிடுவதுண்டு. ஆனால் வெகு இயல்பாக திருமதிசிவசங்கரி என்னை மடக்கி விட்டார் என்பதை இங்கு சந்தோஷத்தோடு ஒப்புக் கொள்கிறேன்!''

திரு பூபாலனின் பாராட்டு, அதுவும் எழுத்தாளர்கள் நிறைந்த ஒரு சபையில் அவர் மனப்பூர்வமாக அளித்த பாராட்டு, என் கண்களைப் பனிக்கச் செய்து விட்டது.

என் உரையில் நான் கூறினேன். ''ஒரு பேட்டி ரசிக்கும்படி அமைய, சரியானபடி பதில்களை வரவழைக்கக் கூடிய கேள்விகள் தேவை. திரு பூபாலன் புத்திசாலித்தனமாகக் கேள்விகளைக் கேட்டார், அதனால்அவைகளுக்கு என் பதில்களும் சுவாரஸ்யமாய் அமைந்தன. என்னைப் பாராட்டியது பூபாலனின் உயர்ந்த குணத்தைக் காட்டுகிறது...'' என்று சொல்லி விட்டு மேற்கொண்டு பிறகு சற்று நேரம் பேசினேன். கலந்துரையாடல் துவங்கியது.

தமிழ்நாட்டின் பத்திரிகைகளைப் பற்றிக் கேட்டார்கள், இன்றைய எழுத்தாளர்களின் எழுத்தைப் பற்றிக் கேட்டார்கள், மக்களின் ரஸனை பற்றிக் கேட்டார்கள்.

தெரிந்தவற்றுக்குப் பதில் சொன்னேன், தெரியாதவைகளுக்குத் தெரியாது என்றேன்.

''ஏன் தமிழக எழுத்தாளர்கள் ஆங்கிலம் அதிகம் உபயோகித்து எழுதுகிறார்கள்?'' என்றார் ஒருவர்.

நான் சொன்னேன்: ''திருமதி கமலாட்சியுடன் நேற்று பேசிக் கொண்டிருந்தபோது அவர் சமீபத்தில் சென்னைக்கு வந்த அனுபவத்தை என்னிடம் விவரித்தார். ஹோட்டலில் தங்கியிருந்த அவர், சிப்பந்தியை அழைத்துச் 'சுடு தண்ணீர் கொண்டுவா' என்றாராம். சிப்பந்திக்குப் புரியவில்லையாம். ''நல்ல வெந்தண்ணீர்'' — என்றாராம். ஊஹூம் பலன் இல்லையாம். ''கொதிக்கிற ஜலம் — குடிக்க'' என்றாராம். 'ஓ! ஹாட் வாட்டரா?' என்று சொல்லிப் பையன் கொணர்ந்து கொடுத்தானும். இதிலிருந்து உங்களுக்குப் புரியலாம், தமிழ்நாட்டில் பல ஆங்கில வார்த்தைகள் உரையாடும் தமிழில் கலந்திருப்பது. எங்களுக்கு இது சகஜமாகிவிட்ட ஒன்று. டாக்ஸி டிரைவரும், ரிக்ஷாக்காரரும் ஏன் என் வீட்டுத் தோட்டக்காரப்பையனும், சரளமாய் உபயோகிக்கும் ஆங்கிலச் சொற்களை நீங்கள் கேட்டால் அதிசயப் படுவீர்கள்.'' இப்படி நான் விளக்கிகொண்டிருக்கும்போது அருகில் இருந்த என் கணவர் என்னை அழைத்து ஒரு குறிப்புக் கொடுத்தார்.

''மலேஷியாவில் வாழும் உங்களிடையே மலாய்மொழி சகஜமாய்க் கலந்திருப்பது மட்டும் தவறில்லையா, அதுமட்டும் அந்நிய மொழி இல்லையா? உங்களிடம் பழக்க தோஷமாய் மலாய் மொழி கலந்திருப்பதுபோல, எங்களிடம் ஆங்கிலம் கலந்திருக்கிறது என்கிறார் என் கணவர்.''

''தமிழகப் பத்திரிகைகள், எழுத்தாளர்களுக்கு நாங்கள் வரவேற்பு கொடுப்பதுபோல் எங்களுக்கு அங்கு ஏன் வரவேற்பு இல்லை?'' — இது ஒரு எழுத்தாளரின் கேள்வி.

''நீங்க கதைகளைத் தமிழகத்துக்கு அனுப்ப முயன்றீர்களா?'' — இது என் பதில் கேள்வி.

இதற்குச் சரியாக ஒருவரும் பதில் சொல்லாததால் நானே தொடர்ந்தேன்.

''தமிழக மக்கள் இலங்கைத் தமிழ்க் கதைகள், மலேஷிய தமிழ்க்கதைகளைப் படிக்க ஆர்வத்துடன் தான் இருக்கிறார்கள். தயவு செய்து இந்நாட்டு எழுத்தாளர்கள் முயற்சி எடுத்துக் கொண்டு தமிழகத்துப் பத்திரிகைகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்.''

இன்னும் பல கேள்விகள், பதில்கள்...

மொத்தத்தில் மலேஷிய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் கலந்துரையாடல் கூட்டம் மனசுக்கு ரொம்பப் பிடித்ததாக அமைந்தது.

அன்று மாலை போர்ட் கிள்ளானில் எல். முத்து என்ற எழுத்தாளரின் 'விரதங்கள்' என்ற சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டேன். அழுத்தமான சிறுகதைகளைத் தோட்டப் பின்னணியில் நன்றாய் எழுதியிருந்தார் திரு. முத்து.

இந்த விழா முடிந்து நாங்கள் அப்துல் காதர் வீட்டுக்கு இரவு விருந்துக்குப் போகும் போது மணி பத்தைத் தொட்டு விட்டது.


காதர் நல்ல மனுஷர் மட்டுமல்ல, கைதேர்ந்த சமையல் நிபுணரும்கூட.

'பூல்கா' ரொட்டிகளும், ருசியான உருளை சப்ஜியும் காதரா செய்தார்?

அசைவம் சாப்பிட்டவர்களுக்குத் தந்தூரி சிக்கன், மீன்குழம்பு... இத்யாதி... இத்யாதி.

பத்து வருஷங்களுக்கு முன் பிளாஸ்டிக் தொழிற்சாலை ஒன்றில் நாள் ஒன்றுக்கு ஒன்ணரை வெள்ளிக் கூலி வாங்கி உழைத்த காதர் தம் விடாத உழைப்பினால் இன்று உயர்ந்த மனிதராக இருப்பதும் நிஜம், அவருக்குச் சமையல் செய்யத் தெரிவதும் நிஜம், அதுவும் ரொம்ப வேண்டியவர்களாகிய எங்களுககாகச் சமையல்கட்டில் அவர் புகுந்து இத்தனை உணவு வகைகளையும் தாமே சிரமப்பட்டுச் சமைத்ததும் நிஜம், என்று சுமணன் மட்டுமல்லாது, காதரின் மனைவியும் தாயும் சேர்ந்து சொன்னபோது அந்தக் குழந்தைத்தனமான, வெகுளித்தனமான அன்பை நினைந்து நாங்கள் உருகியதும் நிஜம். (தொடரும்)

சென்னை எழும்பூர் பகுதியில் தென்னிந்திய ரயில்வே பணிமனையை ஒட்டி ரயில்வே ஊழியர்களுக்குப் பயன்படும் வகையில் ஒரு கல்யாண மண்டபம் கட்டியிருக்கிறார்கள். அதன் பெயர் ரயில் கல்யாண மண்டபம்! - சாமி



மகரிஷி மகேஷ் யோகி பறப்பதற்குக் கற்றுத் தருகிறாராம். பத்மாசனம் போட்டுக்கொண்டு உட்கார்ந்த நிலையிலேயே பறந்து திரும்பலாமாம்!

இதற்காகக் கடுமையான யோகாப்பியாசம் ஏதும் செய்ய வேண்டாம்; டி. வி. சங்கரநாராயணனைப் பாடச் சொன்னால் போதும் என்றுதான் ராமநாம யக்ஞ மண்டலி சார்பில் நடந்த அவருடைய கச்சேரியைக் கேட்டபோது நினைக்கத் தோன்றியது!

லதாங்கியை ஆலாபனை செய்தார். அப்போதே ஆசனங்களிலிருந்து ரசிகர்கள் உயர்ந்து விட்டார்கள்! அபராத மூலகீர்த்தனை பாட ஆரம்பித்தார். நிரவலும் ஸ்வரப் பிரஸ்தாரங்களும் நிகழ்ந்த போது அரங்கிலிருந்த ரசிகர்கள் மிதக்கவே ஆரம்பித்து விட்டார்கள். பைரவியின்போது ராகத்துடன் சேர்ந்து ரசிகர்களும் பறந்து சஞ்சரிக்கத் தொடங்கிவிட்டார்கள்! கச்சேரி முடிந்தபோது அவரவர் நாற்காலியில் உட்கார்ந்திருந்ததே ஆச்சரியம் என்பது போல ஆகாசத்துக்குத் தூக்கிக் கொண்டு போகும் ஒரு ஜிலுஜிலுப்பு இருந்தது அவருடைய பாட்டில். மதுரை மணி அய்யர் பாணிதான். ஆனால் இமிடேஷன் அல்ல. மேலே மேலே சென்று பாடும் போதும் இடக்குப் பண்ணாத வசதியான சாரீரம், சுருதி சுத்தம், கற்பனா சக்தி எல்லாம் அமைந்திருக்கின்றன. அன்று பிர்காக்கள் புஷ்பமாரியாக உதிர்ந்தன. கார்வைகள் ஜில்லென்று ஜீவனுடன் நின்றன. லால்குடி ஜெயராமனும் தஞ்சாவூர் உபேந்திரனும் அன்று தங்கள் அபார ஆற்றலைக் காட்டி சங்கரநாராயணனை உற்சாகப்படுத்தி விட்டார்கள். அதற்குத் தகுதியுடையவராக விளங்கிக் கம்பீரமாகச் சோபித்தார் டி. வி. எஸ். இந்தச் சலசலப்பில் கடம் விநாயகராமும் குஷியாகச் சேர்ந்து கொண்டு ஜமாய்த்து விட்டார். தில்லானா, பிருந்தாவன சாரங்கா எல்லாம் ரசிகர்களையும் பாடகரையும் முழுமையாக ஆட்கொண்டன.

கச்சேரிகளில் கூடக் கூடப் பாடுவது என்று சிலரிடம் ஒரு பழக்கம். ரசிகர் காசு கொடுத்து வருவது பாடகரின் பாட்டை அனுபவிக்கவா, பக்கத்தில் அமர்ந்திருப்பவரின் கச்சேரியைக் கேட்கவா?

மியூஸிக் கிளப் ஆதரவில் நடந்த கே. வி. நாராயணசாமி கச்சேரியின் போது என்ன செய்தும் மற்றொரு சமநேரக் கச்சேரியைத் தவிர்க்கவே முடியவில்லை! ஒருகாதைப் பொத்திக் கொண்டேன், உடலை முன்னுக்குச் சாய்த்துக் கொண்டேன் — ஹூஹூம்! ஒன்றும் பலிக்கவில்லை. மயிலை ஸ்ரீனிவாச சாஸ்திரி அரங்கில்தான் இந்த இரட்டைக் கச்சேரி! சுவரில் மாட்டப் பட்டிருந்த படத்திலிருந்த மகா கனம் வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரியார் என் தர்ம சங்கடத்தைப் பார்த்துக் கன்னத்தில் கைவைத்துச் சிரித்துக் கொண்டிருந்தார். கடைசியில் பொறுமை இழந்து, ''உங்க கச்சேரி ரொம்ப ஜோர் ஸார்!'' என்றேன், கிண்டலாக. மனுஷன் சளைக்கவில்லையே! ''மறக்காமல் விமர்சனம் எழுதுங்கள். என் பெயர் பத்மநாபன்'' என்று ஒரு போடு போட்டார்!



கே. வி. நாராயணசாமி

இந்த உபத்திரவத்தையும் மீறி அன்று கச்சேரியை ரசிக்க முடிந்தது என்றால் அது கே. வி. நாராயணசாமி பாட்டானதால்தான்! இரண்டு மணி இருபது நிமிஷ நேரக் கச்சேரியா அல்லது வெறும் இருபது நிமிஷம்தானா என்று புரியாமல் பிரமிக்கும் அளவுக்கு நேரம் ஓடிச் சென்று விட்டது. இரண்டே கால் மணி நேரத்துக்குள் எத்தனை எத்தனை ராகங்களை கே. வி. என். ஜீவ களையுடன் சித்திரித்துக் காட்டி விட்டார்! ஒவ்

அயோத்தியைக் கண்டோம்



டி. வி. சங்கரநாராயணன்

வொரு ராகத்தையும் சற்று நேரமே பாடினு லும் பூரண மன நிறைவு ஏற்படும்படி செய்து விடுகிருரே, புல்லரிப்பு உண்டாகச் செய்து விடுகிருரே. அந்த மாயத்தை என் னென்பது? இந்த மாதிரி பாட்டைக் கேட்கப் பாக்கியம் பண்ணியிருக்க வேண் டும் என்று எண்ணத் தக்க பாடகர்களில் கே. வி. நாராயணசாமி ஒருவர். ''கார்த்தி கேய'' கீர்த்தனை நிரவலில் வடிவேல் மருவும் கமலக் கரத்தவனைக் கண் ணெதிரே கண்டோம் என்ற பேஹாக் கீர்த்தனையைப் பாடியபோது கண்ணன் எதிரே வந்து நர்த்தனமாடவே ஆரம்பித்து விட் டான்!

வயலின் வாசித்த வி. வி. சுப்பிரமணியம் அளவோடும் அழகாகவும் அனுசரணையாகவும் தமது ஆற்றலை வெளிப்படுத்தி ரசிகர்களை ஆஹாகாரம் செய்ய வைத்தார். கமாஸ் ஒன்று போதும். மணியாகப் பிரகாசித்தது. மற்றவையும் தேனாக இனித்தன. மதுரை அரசினர் இசைக் கல்லூரியில் வயலின் பேரா சிரியராக வி. வி. எஸ். நியமிக்கப் பட்டுள் ளார் என்ருல் சும்மாவா?

இளைஞர் திருச்சூர் நரேந்திரனை மிருதங்கம் வாசிக்கச் செய்து உற்சாகப் படுத்திஞர் நாராயணசாமி. ரகுவின் சிஷ்யரான இவரது நடையும் ஆற்றலும் நன்கு விகசித்தது.

ஸ்ரீராமநவமியை யொட்டி நவநவமான கச்சேரிகள் பல இடங்களிலும் நடக்கின்றன. நாதோபாசனையால் திரிமூர்த்திகளும் ஒளி பெற்று விளங்குவதாகத்தானே தியாகைய ரும் கூறுகிருர்! ஆனல் மெய்யான பக்தி யின்றி எவ்வளவு நடந்தாலும் அயோத்தியை அடைய முடியாது என்றும் அவர் உணர்த்து கிருர், ''நடசி நடசி'' கீர்த்தனையில்.

இசை உணர்வோடு இறை உணர்வையும் இசைத்துக் கொண்டு நலன் பெறுவோம்.

— குட்டிகிருஷ்ணன்.

ஆண்டாள் அவன் ஆண்டாள்!



சமுதாயக் கேடுகளைச் சித்திரித்து நாட கம் எழுதுவது சாலச் சிறந்தது. அதையே யாருடைய மனமும் புண்படாத படிக்கு நகைச்சுவையாக எடுத்துக் காட்டுவது அதை விடச் சிறந்தது.

இந்த உயர்வான காரியத்தைச் செவ்வனே செய்கிறது ஆண்டாள் அவன் ஆண்டாள் என்ற நாடகம்.

பிரதான பாகம் ஏற்று அமைச்சராகத் தோன்றும் மனேரமா மிக அலட்சியமாக, லகுவாகத் தம் பாகத்தை ஏற்றுச் செய்வது போன்ற பிரமிப்பை உண்டாக்கிப் பிரமாதப் படுத்திவிட்டார். மற்ற எல்லா நடிகர்களிட மும் அனுபவமோ உழைப்போ பேசியது.

இதிலொன்றும் வியப்பதற்கில்லை. மனே ரமா காட்சிக்குக் காட்சி இடைவெளியை உணர்த்த வெவ்வேறு வண்ணப் புடைவை அணிந்து தோன்றுகிருரே அதுதான் பேராச் சர்யம்! எப்படி இவ்வளவு சீக்கிரமாக இத் தனை கச்சிதமாக உடை மாற்றம் செய்து கொள்ள முடிகிறது அவரால்!

திறம்பட எழுதப் பட்டிருந்த விசுவின் கதை வசனத்தில் நகை இருந்தது, சுவை இருந் தது, அர்த்தமுள்ள நகைச்சுவையாக நாடகத் துடன் இரண்டறக் கலந்தும் இருந்தது.

காட்சிக்குக் காட்சி கணத்துக்குக் கணம் ரசிக்கும் படி இருந்தது நாடகம் — இடை வேளைவரை. இடைவேளையுடன் நாடகத்தை முடித்து விடும் தைரியம் மட்டும் சம்பந்தப் பட்ட அனைவருக்கும் இருந்திருந்தால் நாடகம் முதல்தரமான சாதனையாக விளங்கியிருக்கும்.

ஆண்டாள் அவன் ஆண்டாள் இடைவேளை வரை நமது இதயங்களை ஆண்டான். அந்த ஆட்சிக் காலம் மகோன்னதமாக இருந்தது என்பதை மகிழ்ச்சியுடன் எண்ணிப் பார்க் கிறோம்.

— செம்பியன்



அற்புதமான உவமைகளைக் கையாளு கிறார்கள்; அருமையான விஷயங்களைச் சொல்லுகிறார்கள்; ஆனால் வசனத்தை வளைத்துப் போட்டு, அதைப் 'புதுக் கவிதை' என்கிறார்கள்.

தமிழ் தரமான மொழி. அதில் எளிமையும் உண்டு; கடுமையும் உண்டு. நான்காம் வகுப்பு மாணவன் கவிதை எழுதவும் இலக் கணம் உண்டு; பண்டிதர்களுக்கும் பல துறைகள் உண்டு.

கல்வி அறிவில்லாத கிராமத்துத் தாய் மார்கள் கூட, சந்தம், சப்தம், தாளத்தோடு தான் தாலாட்டுப் பாடுகிறார்கள். கிராமங் களில் ஆடுமாடு மேய்ப்பவர்கள் கூட, சந்த முள்ள பாடல்களைத்தான் பாடுகிறார்கள்.

தமிழில் இவ்வளவு வசதி இருக்கும் போது 'புதுக்கவிதை' என்றொரு ஜாதி எதற்கு?

பாரதியினுடைய வசன கவிதையில் ஒரு சுகம் இருந்தது.

இத்தகைய வசன கவிதைகளையே தமிழும் வடமொழியும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் மறுக்கவில்லை.

வட மொழியில் காவியங்களை மூன்று வகை யாகப் பிரித்தார்கள். அவை, 'கத்யம்', 'பத்யம்', 'சம்பு.'

தமிழிலும் மூன்று வகை. பாட்டு, உரைப் பாட்டு, உரையுடன் கூடிய பாட்டு.

நம்முடைய புராதன இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் பல ஆசிரிய பாணி வசனங்களாகவேதான் காட்சியளிக்கின்றன.

ஆகவே, வசன கவிதை கூடாதென்பது என் வாதமல்ல. வசனத்திலும் கேவலமான வசனத்தைக் கவிதை என்று, சிலர் கவியரங் கங்களிலே படிக்கிறார்களே, அதைத்தான் என்னால் தாங்க முடியவில்லை.

இந்தப் பாவத்துக்குத் தந்தை, தமிழகத்து அரசியலில் பிரபலமான ஒருவர். அவரே அப்படித்தான் எழுதுகிறார் என்ற உடனே இலக்கணம் தெரிந்தவர்கள் கூட, வசனத்தை எழுதி வளைக்க ஆரம்பித்து விட்டார்கள்.

ச. து. சு. யோகியார் அவர்கள் சொல்வது போல், உரை இடையிட்ட பாட்டாகவாவது ஒன்று இருந்தாக வேண்டும். அவர் கூறு கிறார்: ''ஆங்கிலப் புலவன் ஆஸ்கார் வைல்ட் அழகிய சின்னஞ்சிறு கதைத் துணுக்குகளை வசனத்தில் கவிதை என்றே வரைந்துள்ளான். அமெரிக்கக் கவிஞன் வால்ட் விட்மனின் கவி தைகள் வசனத்தால் ஆனவையே. வட மொழிக் காவியமான 'காதம்பரி' வசன கவிதையே. இறையனார் அகப்பொருளை உரை என்று சொல்வதைவிட உரைப் பாட்டு என்று சொல்வது பொருந்தும். பாரதியாரின் 'ஞானரத'மும் கவிதைச் சுகமுள்ள வசனமே!

ஆனால் இன்று கவிதை என்ற பெயரிலும், புதுக் கவிதை என்ற பெயரிலும் பலர் கூத்த டிக்கிறார்கள். எவ்வளவுதான் வசன கவிதை எழுதினாலும், சந்தம் உள்ள கவிதையின் லட்சணம் அதற்கு வராது.

''வர்ணனும் அர்த்த ஸங்காரனும் ரஸானும் சந்தஸாமயி'' என்றபடி, எந்த இசையும், பொருளும், தாளமும் கொண்டு இயங்கி னால்தான் சுகமாக இருக்கும்.

அண்மையில் ஒரு பத்திரிகையின் ஆண்டு விழா நடைபெற்ற போது, அதில் ஒரே ஒருவர் கவிதை பாடுகிறேன் என்று பாடினார். அட ஆண்டவனே, கவிதையா அது? அப்பட்ட மான வசனம்!

கவியரங்கங்களில் கரகோஷம் வாங்குவதற் காகப் பலபேர் அதைச் செய்து வருகிறார்கள்.

என்னுடைய கவிதைத் தொகுதிகள் சில வற்றில் அச்சுப் பிழைகள் ஏற்பட்டன. அச்சுப் பிழை என்பது எனக்குத்தான் தெரியும். பார்ப்பவர்களுக்கு இலக்கணப் பிழைபோல் தெரியும். நான் அவற்றைத் திருத்தச் சொல் லியும் திருத்தாமலேயே பல பதிப்புகள் ஓடிவிட்டன. இத்தனைக்கும் அவற்றில் பிழை திருத்தி உதவியவர்கள் பெரும் புலவர்கள். யாரிடம் சொல்லி அழுவது?

இனி கவிதை விரும்புகிற ஒவ்வொருவரும் திரு. கி. வா. ஜ. அவர்களைச் சந்தித்து, குறைந்த பட்சக் கவிதை இலக்கணத்தை யாவது தெரிந்து கொள்ள வேண்டும்.

'காலையில் எழுந்தேன்; கண்ணாடியைப் பார்த்தேன்;
வேலையைச் செய்தேன்; வீட்டுக்குத் திரும்பினேன்'

—இதுவும் கவிதைதான். இந்த அளவுக்குக் கூடவா யாருக்கும் சந்தம், தாளம் தெரி யாமல் போய் விட்டது? அருமையான விஷ யங்களை ஏன் வீணாக்க வேண்டும்? சந்தத்தில் சொல்லுங்கள்; தாளத்தில் சொல்லுங்கள்; பாரதி பாடல்களை வழிகாட்டியாகக் கொள் ளுங்கள்; ஓசையுள்ள பாடல்களை மனப்பாடம் செய்யுங்கள்; குற்றாலக் குறவஞ்சி' படி யுங்கள்; 'அம்மானை' நூல்கள் படியுங்கள்.

பெரிய இலக்கியங்களுக்குள் புகுந்து தலையை உடைத்துக் கொண்டு தடுமாறுமல், சிற்றிலக்கியங்கள் மூலமாகவே நீங்கள் சிறந்த கவிஞராகிவிட முடியும்.



அருள் வாக்கு

ஏழ்நிலை மாற இதுவே வழி!

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகள்

உலகத்தில் முன்னேற்றம் அடைந்ததாகச் சொல்லப்படும் நாடுகளின் ஜனங்களுடைய வாழ்க்கைத் தரத்துக்குச் சமமாக நம் நாட்டு ஜனங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்துடன் இப்பொழுது தீவிரமான முயற்சிகள் செய்யப் பட்டு வருகின்றன. இந்த நோக்கத்தையும், முயற்சிகளையும் பாராட்ட வேண்டியதுதான் — ஆனால் ஓரளவுக்கு உட்பட்டுத்தான் பாராட்ட வேண்டியிருக்கிறது. ஏனென்றால் இவ்வித முயற்சிகள் செய்கிற போது வாழ்க்கையின் லக்ஷியத்தையும் வாழ்க்கையின் பிரயோஜனங்களையும் நாம் புறக்கணித்து விடக் கூடாது. ஆனால் ஸமீப காலமாக இந்த முக்கியமான விஷயத்தில் நியாயமாக இருக்க வேண்டிய ஆவல் மிகவும் குறைந்து வருகிறது ; சிறப்பாக, நமக்கு ஸ்வயராஜ்யம் கிடைத்த பிறகு வெகு வேகமாகக் குறைந்து வருகிறது.

முஸ்லீம்கள் நமது நாட்டின் மீது படையெடுத்து வந்து வெற்றி கொண்ட காலத்தில் நமது பண்பாட்டுக்கும் மதத்துக்கும் ஏற்பட்ட அதிர்ச்சி — அதிலும் வடநாட்டில் ஏற்பட்ட அதிர்ச்சி — மிகக் கடுமையானது. ஆனாலும் அதனால் நம் மத நம்பிக்கைகளுக்கோ ஆசார அநுஷ்டானங்களுக்கோ கலாசார மரபுக்கோ அதிகமான ஊனம் ஏற்படவில்லை. அது போலவே சுமார் முந்நூறு வருஷ பிரிட்டிஷ் ஆட்சியிலும் நம் மதக் கோட்பாடுகளோ வாழ்க்கை முறைகளோ பாதிக்கப்படவில்லை.

நாம் ஸ்வயராஜ்யம் பெற்ற பிறகுதான் வாழ்க்கை முறைகள் பெரிதும் மாறி, நமது ஸன்மார்க்க நெறியில் இதற்கு முன்பு இல்லாத அளவுக்குக் கறை படிந்து வருகிறது. நமது பெருமைக்குரிய பாரமார்த்திக வாழ்க்கை இப்போது பழங்கதையாகி விட்டது. நம்முடைய கலாசார பாரம்பரியத்துக்கும், ஜீவித லட்சியங்களுக்கும் விடை கொடுத்து விட்டோம். லௌகிக அநுகூலங்களே — பணம், பதவி, அதிகாரம் முதலியனவே — லக்ஷியம் எனக் கொண்டு விட்டோம். சீலங்களை விடுத்து இன்ப நுகர்ச்சியிலேயே ஈடுபட்டு விட்டோம். மத விஷயங்களில் பலருக்கு அசிரத்தை; பலரோ கடவுளை ஏற்கவும் ஏற்காமல், மறுக்கவும் மறுக்காமல் ஏதோ இருக்கிறார்கள். மதச் சடங்குகள் செய்வோரிலும் பெரும்பாலோர் லௌகிகப் பிரதிப் பிரயோஜனம் கருதியே செய்கிறார்கள்.

இந்த நிலையில் ஆகாய விமானம், மோட்டார், பங்களா, டெரிலின், நைலான், டிரான்ஸிஸ்டர், டெலிவிஷன் ஆகிய நவீன வஸ்துக்களைக் கொண்டு வாழ்க்கைத் தரத்தைக் கணித்து, முன்னைவிட இப்போதுதான் நாம் உயர்ந்து, முன்னோர்களைவிட நாகரிக வாழ்வு வாழ்கிறோம் என்று பெருமைப் பட்டுக் கொள்கிறோம்! எளிய வாழ்க்கையின் நன்மைகளை மறந்தே விட்டோம். இப்போது ஏற்பட்டுள்ள ரீதியில், ஏழைகள் பணக்காரர்களைப் பார்த்துப் பொறாமை கொள்கிறார்கள். பணக்காரர்கள் ஆடம்பர வாழ்க்கை நடத்துவதால் ஏழைகளுக்குக் கெட்ட வழியைக் காட்டுபவர்களாகவே இருக்கிறார்கள்.

எளிய வாழ்க்கையைத்தான் துறந்து விட்டோமென்றால் உயர்ந்த சிந்தனையையும் இழந்து விட்டோம். இப்போது வெளியாகும் பெரும்பாலான நூல்கள் இளைஞர்களைத் துன்மார்க்கத்திலும் இந்திரிய ஸுகங்களிலும் இழுத்துச் செல்வனவாகவே உள்ளன. இக்கால இளைஞர்களுக்கு உயர் சிந்தனைகளைத் தூண்டும் இலக்கியங்கள் பயனற்றவையாகத் தோன்றுகின்றன. பொழுது போக்குக்காக நடைபெறும் ஸினிமா முதலியவை ஆண் பெண் இருபாலாரிலும் இளைஞர்களின் மனத்தை மிகவும் மாசு படுத்துகின்றன.

கிராம மக்கள் நகரங்களில் குடியேறுவது அதிகமாகிக் கொண்டே வருவதால் கிராம வாழ்க்கையில் கிடைக்கக் கூடிய அமைதி போய், நகர வாழ்க்கையின் சிக்கல்களும் போட்டிகளும் மேலும் வளர்கின்றன.

அரசியல் விவகாரங்களில் அறிவுக்கும், நேர்மைக்கும், பிரஜைகளின் நலனிலேயே கருத்துக்கும் இடமாகவிருந்த ராம ராஜ்யத்துக்காக மஹாத்மா காந்தி வெகுவாக ஆசைப்

பட்டார்: அந்த ஆசை அவருடைய மரணத்தோடு முற்றுப் பெற்று விட்டது.

ஜனநாயக ஆட்சியில் தேர்தல்கள் எனப்படுபவை நடை பெறுகின்றன. திருதராஷ்டிரன் ஸபையில் மானபங்கத்துக்கு ஆளான துரௌபதி, ''வான்சபையில் கேள்வி பலவுடையோர், 'தேடிலா நல்லிசையோர், மேலோர் இருக்கின்றார். அவர்கள் தர்ம நியாயத்தை எடுத்துச் சொல்லாமலிருக்கின்றாரே!'' என்று கதறியழுத குரல் நம்மில் யார் காதிலும் விழுந்ததாகத் தெரியவில்லை.

நமது கலாசாரத்தையும் சீலத்தையும் பேணிக் காத்து வரும் இருபெரும் அரண்கள் வீடும், பள்ளிக் கூடமும். இவை இரண்டும் இப்போது சீர்திருத்த முடியாத அளவுக்குச் சீர்குலைந்து போயிருக்கின்றன. வயதுக்கும் அநுபவத்துக்கும் முக்கியத்துவம் தந்த அவிபக்த (கூட்டுக்) குடும்ப முறை எடுபட்டு, ஒவ்வொருவரும் நமக்கு நாமே என்று தலைப்பட்டு, ஆசாரநெறிகளை அறியாமலும், அலக்ஷியம் செய்தும் வருகிறார்கள். பள்ளியில் குரு பக்தியுடன் ஒழுகிப் பணிவால் ஒழுக்கம் பெற வேண்டிய ஒருவனே சிஷ்யன் என்னும் அமைப்பு எடுபட்டு விட்டது. குருபக்தி செலுத்தும் மாணவனும் இல்லை; அதனை ஏற்கும் தகுதி பெற்ற ஆசிரியரும் இல்லை!

(வாழ்க்கைத் தரம் உயர்ந்ததாகப் பெருமைப் பட்டாலும்) நமக்கு மன அமைதியும், அதனால் ஏற்படும் நிறைவும் போய் விட்டன. வாழ்க்கைக்கு லக்ஷியமும், பிரயோஜனமுமான இவற்றைத் திரும்பப் பெற என்ன செய்யவேண்டும்?

முன்னோர் வகுத்த தர்ம நெறிதான் இதற்குத் தீர்வு.

அவர்கள் (ஆத்மிகத்தையே எண்ணி) லௌகிகத்தைப் புறக்கணித்தார்கள் என்று எண்ணினால் தவறு. (வாழ்க்கைப் பயனான) நான்கு புருஷார்த்தங்களில் அவர்கள் அர்த்தம் (பொருள்), காமம் இரண்டுக்கும் இடம் கொடுத்திருப்பதைக் கவனிக்க வேண்டும். அவர்கள் விதித்தபடி முதற் புருஷார்த்தமான தர்மத்தின் வழியிலேயே நின்று அர்த்த காமங்களை அநுபவித்தால் இன்றைய கோளாறு ஏதும் இராது. அவரவரையும் பக்குவப் படுத்துவதற்கு அநுஸரணையாகச் சிறியவர்—பெரியவர், ஆண்—பெண்; வெவ்வேறு தொழில்புரிபவர்கள் என்று பாகுபாடு செய்து அவரவருக்கும் விதித்துள்ள தர்மப்படி நடந்தால்தான் தனிவாழ்க்கையும் பொது வாழ்க்கையும் அமைதிகரமாக ஆகுமேயன்றி, எல்லோருக்கும் ஸமதர்மம் என்பதால் அல்ல. இப்படி அனைவரும் இன்றிருப்பது போலன்றி உரிமைகளை விடக் கடமைகளைப் பெரிதாகக் கருதி அவற்றை ஆற்றினால்தான்—இன்றுள்ள கட்டுப்பாடின்மை போய் தர்மம் என்ற கட்டுப்பாட்டின்படி ஒழுகினால்தான் — பாரத ஸமுதாயத்தை நெருக்கடியிலிருந்து மீட்டவர்களாவோம். நாம் அனைவரும் பகவானை நோக்கி இதற்காகப் பிரார்த்தனை செய்வோமாக!

(சுருக்கம்: ரா. கணபதி)



திரும்பி வந்தவன்

அனீஸா

வேகமாகக் குனிந்து கொண்டிருந்த மங்குலின் மறைவில் மெல்ல மெல்ல நடந்து சென்றான், மாரி.

அவனுக்குப் பழக்கப்பட்ட பாதைதான். என்றாலும், அந்தச் சொதி மணலில் அவனுக்கு அடிக்கடி கால்கள் தடுமாறின.

நெஞ்சம் பக்,பக்கென்று அடித்துக் கொள்ள, மாரி திரும்பிப் பார்த்தான். யாருமே தென்படவில்லை.

நினைவு பின்னோக்கியோடச் சடாரெனச் சிந்தை நிலைகுத்தி நின்றது. நெஞ்சத்திலே ஒரு துணுக்கம். அந்த இடத்தில்தானே அவன் ராமுவை இரத்தக் காடாக வீழ்த்தி விட்டு ஓடிச் சென்றான்? அவன் நிச்சயமாக இறந்திருக்க வேண்டும்!

அந்த அச்சத்தில் தானே அவன் மனைவியை விட்டு, அருமை மகனை விட்டு, வீட்டை விட்டு, ஏன், ஊரை விட்டே ஓடோடிச் சென்று விட்டான்? எங்கெங்கோ சுற்றித் திரிந்து விட்டு இப்போது திரும்புகிறான்.

சின்னஞ்சிறு வயதிலேயே அனாதையாக இலங்கையை நாடிச் சென்றவன், மாரி. கடலோரப் பகுதியில் மீன் பிடிக்கும் நிறுவனமொன்றில் உழைத்து முன்னுக்கு வந்தான். வாலிபத்தின் மறு எல்லைக் கோட்டிலே தாயகம் திரும்பி வந்தான். தனது தூரத்து உறவுப் பெண்ணான வெங்கம்மாவைக் கல்யாணம் செய்து கொண்டான். அகதியென்ற முறையிலே அரசின் உதவி பெற்று மின் சாரப் படகொன்றை வாங்கினான்.

அவன் அதிர்ஷ்டம், அந்தப் படகு அவன் குடியிருந்த உப்பங்கழி வட்டாரத்திலேயே அலைகளினூடே அதிவேகமாகப் 'பறந்து' செல்லக் கூடியதாக இருந்தது. அதனால் காலைக் கறுக்கலில் கடல் மேலே செல்லும் அவன் மாலையில் மற்றவர்களுக்கு வெகு முன்னதாகவே திரும்பி விடுவான். அக்கரைச் சீமையில் பெற்ற அனுபவம் வேறு. துணைக்கு ஓர் ஆளைமட்டும் வைத்துக் கொண்டு நல்ல ஆதாயமான தொழில் நடத்தி வந்தான். அவன் மீது பொறாமைப் பட்டுக் கொண்டிருந்தவர்களில் ராமுவும் ஒருவன்.

வெங்கம்மா எல்லா வகைகளிலுமே அவனுக்குப் பிடித்தவளாக இருந்தாள். பத்து வருடங்களுக்குப் பிறகு அவர்கள் உள்ளத்தில் பால் வார்க்கப் பிறந்தாள், கயல் கண்ணி. பேச்சிலும் செயலிலும் சூடிகையாக இருந்த அவள் தனது பெற்றோர்களின் பாசத்தைப் பெரிதும் பெற்று விட்டாள்.

அன்று காலை கரைக்குப் புறப்படுமுன்னால் கயல் கண்ணி மாரியிடம் வெகு கெஞ்சுதலாகக் கேட்டாள்:

''ஐயா, நாளை பொங்கல் பண்டிகை. தெரியும்'லே! எனக்கு ஒரு முத்துமாலை வேணும்! பக்கத்து வீட்டுப் பொண்ணு கூட போட்டிருக்கு.''

அவள் கேட்டது வெறும் செயற்கை முத்து மாலைதான். அதை வாங்கித் தரவா மாரிக்குக் கஷ்டம்?

''சரியம்மா, கண்ணு. வாங்கித்தர்றேன்.''

''நெசமா வாங்கிட்டு வரணும்? ஏமாத்திடக் கூடாது. எவ்வளவு நேரமானாலும் காத்துக்கிட்டு இருப்பேன். ஆமா... அதை எங்கண்ணாலப் பாத்தாத்தான் சாப்பிடுவேன்.''

ஆகட்டும் என்று உறுதி மொழியளித்து விட்டுக் கிளம்பின மாரி சிறிது தூரம் தான் சென்றிருப்பான். வழியிலே ராமு தென் பட்டான்.

தள்ளாடித் தள்ளாடி வந்து கொண்டிருந்தான் ராமு. விடியற்காலையிலேயே அவன் 'வெள்ளைக் குதிரை'யின் மேல் ஏறிவிட்டான்!

அவனைத் தவிர்க்க விரும்பினான், மாரி.

''டே, மாரி!...''

''மாரிக்கு என்னவாம்?'' — கேட்டுக் கொண்டே மாரி நடந்து கொண்டிருந்தான்.

''மாரிக்கு என்னவா? போய்ப் பாரு! அய்யா என்ன செய்ய முடியும்கிறதை இப்போது தெரிஞ்சுக்குவே!'' — குடிபோதையில் ராமுவின் வாயிலிருந்து வார்த்தைகள் குளறி விழுந்தன.



சீக்கிரமே கடலுக்குச் சென்று சீக்கிரமே கரை திரும்ப வேண்டும் என்ற அவசரம், மாரிக்கு. பட்டணத்துக்குச் சென்று மகளுக்கு முத்துமாலை வாங்க வேண்டாமா?

ராமுவிடம் வாதிட விரும்பவில்லை.

''நீ சூரன் தான்!'' என்று சொன்னதுடன் தனது படகு அணைந்திருந்த கரை நோக்கிச் சென்றான்.

ஆனாலும் வழியிலே அவன் உள்ளத்தில் ஓர் ஐயம் எழுந்தது. ''ராமு அப்படி என்ன தான் செய்திருப்பான்?''

இரண்டு நாட்களுக்கு முன்னர் ராமு மாரியிடம் வந்திருந்தான்.

''மாரி, நான் சொல்றதைக் கேளு! ஒரு ரொம்ப நல்ல 'பார்ட்டி' கெடைச்சிருக்கு. தொடர்ந்தாப் போலே வாடிக்கை இருக்கும். கிராக்கியான சரக்கு. கூடுதலாலே பணம் கெடைக்கும். நாளைக்கோ மறுநாளைக்கோ கடலுக்குப் போகணும். ஆனா என் படகு 'மக்கர்' செய்யுது. உன்னோட படகுலே நீயும் நானும் போவோமா? சொல்லு! இல்லே, நான் மட்டும் போறேன். ஒனக்கும் பங்கு தர்றேன். ஒரு முறை செஞ்சுபாரு. அதுக்குப் பிறகு விடமாட்டே, ஆமா!''

ராமு எத்தகையவன் என்பதை மாரி நன்கு அறிவான். கள்ளக் கடத்தல் காரர்களுக்கு உடந்தையாக இருந்து வருபவன். கொஞ்ச நாட்களாகவே அந்தப் பகுதியிலே இரவுக் காலங்களில் காவல் துறையினர் அடிக்கடி நடமாடிக் கள்ளக் கடத்தல்காரர்களின் நடவடிக்கையைக் கண்டறியத் தொடங்கி இருந்தனர்.

ராமுவின் பேச்சை மாரி புரிந்து கொண்டான்.

வருமானத்தை விடத் தன்மானத்தையே உயர்வாக எண்ணி வந்த மாரிக்கு ராமுவின் யோசனையைக் கேட்கப் பிடிக்கவில்லை.

''இதிலே எனக்கு விருப்பமில்லே'' என்று ராமுவின் முகத்தில் அறைந்தாற்போல் பட்டெனச் சொல்லி விட்டான்.

''இவரு பெரிய யோக்யெரு! வா, ஒனக்கு சரியா காட்டறேன்'' என்று கறுவியவாறு ராமு சென்று விட்டான்.

முந்திய இரவு கூட அந்தப் பகுதியில் தொடர்ந்து போலீஸ் விசிலும் நாய் குரைப்பும் கேட்டன

ராமு கடலுக்குச் சென்று திரும்பி இருக்க வேண்டும்!

அவனுக்கு முன்னரே சொல்லி வைத்தபடி அவனுடைய உதவியாள் நைலான் வலைகளைத் தூக்கிக் கொண்டு சென்று கொண்டிருந்தான்.

சற்று நேரத்தில் கரையோரத்தை அணுகி விட்டான், மாரி.

வழக்கம் போல் படகினுள்ளே தாவிக் குதித்தான்.

ஆனால் என்றுமில்லாதபடி அவன் கால்கள் பட்ட இடத்தில்...

''ஐயோ...!'' என்று குனிந்து சட்டை விரல்களைத் தடவும் போது அவன் கையில் இரத்தத்தின் ஈரம்!

இரண்டு கனத்த பெட்டிகள்... 'இவை எப்படி இங்கே வந்தன?' —

வேதனையை மறந்தவனாகப் பரபரப்புடன் திறந்து பார்க்க —

ஒன்றில் தங்கப் பாளங்கள், மற்றொன்றில் உயர் ரகக் கடிகாரங்கள்!'

அப்பெட்டிகளைக் கரையிலே இறக்கிவிட்டு, படகை எடுத்துச் செல்லலாம் என்றால்...

வெகு அருகிலே ராமு வந்து கொண்டிருந்தான். அவனுடன் வேறு சில ஆட்களும் வந்து கொண்டிருந்தனர்.

அவனுடைய நோக்கம் மாரிக்குப் புரிந்து விட்டது. பழியோரிடம் பாவமோரிடம் என்பார்களே! அதுபோல் அவன் குற்றத்தைத் தன் மீது சுமத்த என்ன நாடகம் ஆடுகிறான்! அதற்குச் சாட்சிகள் வேறு!

''சீக்கிரம் வா, இவற்றை இறக்கிப் போடு!'' எனத் தனது உதவியாளை மாரி ஏவினான்.

அதே வேளை, படகை 'ஸ்டார்ட்' செய்ய முனைந்தான், மாரி. 'உஸ், உய்ய்' என்ற ஒலி கேட்டதே தவிர எஞ்சின் இயங்க மறுத்தது. சுக்கானையும் சுழற்ற முடியவில்லை. ஏதோ எங்கோ சிக்கிக் கொண்டது போல இருந்தது. 'படகை எப்படி ஓட்டிச் செல்வது?'

கரையிலே கள்ளச் சரக்குகள், படகிலே அவன். 'அதோ! சாட்சிகளுடன் வரும் எதிரியிடம் நாம் வகையாக மாட்டிக் கொண்டோம். இனி...?'

வலையில் சிக்கிய மீனைப்போலத் தவித்தான் மாரி.

அதன் வாலைப் போல் பீதியும் குழப்பமும் அவன் உள்ளத்தில் சுற்றிச் சுழன்றடித்தன. தாமதம் ஆபத்து என்பதை அவன் உணர்ந்தான். 'எப்படியும் தப்பித்து விடவேண்டும்!' — ஓடிவிட வேண்டும் என்ற உந்தல்.

அதற்கிடையிலே அவனை ராமு நெருங்கி விட்டான்.

''டே, மாரி! இப்போ தெரிஞ்சுக்கிட்டியா. நான் யாருன்னு? ஒன் சங்கதி போலீசுக்குத் தெரிஞ்சு போச்சு! அவுங்க பின்னாலே வர்றாங்க. நீ கம்பி எண்ணப் போறே. நான் காசு எண்ணுவேன். ஹஹ்ஹா!'' — என அட்டகாசமாகச் சிரித்தான் ராமு.

''போடா போ! நீ காசு எண்ணப் போறியா கம்பிதான் எண்ணப் போறியா பார்ப்போம்'' என்று பொய்யான தைரியத்தை வரவழைத்துக் கொண்டவனாகச் சொன்ன மாரி, ஓட எத்தனித்தான்.

''தப்பிச்சுடலாம்''னு பார்க்கிறியா? அது தான் முடியாது. வாங்க, பிடியுங்கடா!'' — ராமு இடைமறித்தான்.

பொங்கியெழுந்த ஆத்திரத்திலும் கோப வெறியிலும் அவன் தனக்குத் தடையாக வந்தவனைப் பலங்கொண்ட மட்டிலும் பிடித்து அப்பால் தள்ளினான்.

''அம்மா!'' — உருண்டு போய் விழுந்த ராமு அலறித் துடித்தான். அதே நேரம் மாரியின் உடையிலேயே பீறிட்டுப் பாய்ந்தது இரத்தப் பிரவாகம்!

ஆம், அங்கு மணலில் புதைந்து கிடந்த பாறையில் ராமுவின் மண்டை பலமாக அடிபட்டு விட்டது. ''கொலை, கொலை!'' என்ற கூச்சல்.

மாரியின் மூளை அதிதமாக இயங்க, அவன் வேகமாக ஓடத் தொடங்கினான். ஒரே ஓட்டமாக ஓடினான். ஓடிக் கொண்டே இருந்தான்.

காலமும் நேரமும் தெரியாமல் சுற்றி அலைந்து விட்டு இப்போதுதான் வீடு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தான்.

அவனுடைய சிறு வீட்டில் அந்தி விளக்கு ஏற்றிய ஒளி தெரிந்தது.

மெதுவாக நடந்து வந்து சுவரிலே சாய்ந்தவனாகச் சன்னல் வழியாக மெல்ல எட்டிப் பார்த்தான்.

தேவியின் படத்தின் முன்னே தீபம் சுற்றிக் கொண்டிருந்தாள், வெங்கம்மா.

எதிர்காலச் செல்வங்கள்

நாங்கள் குடும்பத்துடன் எனது மாமியாரின் திதியின் பொருட்டு எனது கணவரின் தமையனார் வீட்டுக்குச் சென்றிருந்தோம்.

திதியின் போது சிறு சாமான் வாங்கி வர ஒரு பையனை அனுப்பியிருந்தார் கணவரின் சகோதரர். பையன் வந்து சாமானைக் கொடுத்த போது அவர், ''ரொம்ப தேங்க்ஸ்ப்பா''



என்று சொன்னார். உடனே என் மகள் ராதிகா, அந்தப் பையனைப் பார்த்து, ''அண்ணே! தேங்க்ஸைப் பத்திரமாப் பையிலே போட்டுக்கங்க. திடீர்னு போட்டுடாதீங்க!'' என்று கூறியதும் புரோகிதர் உள்பட அனைவரும் சிரித்து விட்டோம்.

ஜி. பவானி.

அவளருகே அவன் மகள் கயற்கண்ணி கையெடுத்துக் கும்பிட்டவளாகப் பவ்யமாக நின்று கொண்டிருந்தாள்.

மகளைத் தாய் எவ்வளவு ஒழுக்கமாக வளர்த்து விட்டிருந்தாள்.

''ஏன்மா இந்தப்பொங்கலுக்காவது அப்பா வருவாரா?''

''அம்பா இருளப்பயாலே அவரு நிச்சயம் வருவாரடி.''

''முத்துமாலே வாங்கிட்டு வருவாரில்லே?''

''ஒன்றென்ன, ஒம்பது வாங்கிட்டு வருவாரு, எங்கண்ணு.''

''அவரை நான் எப்போ பார்ப்பேன்? எனக்கு மாலேயும் வேணும். ஒண்ணும் வேணும். அவரு வந்தா போதும்.''

''அம்பாளை நெனச்சுக்க!'' என்று ஆதாரத்துடன் கூறியவாறு சிறுமியை அரவணைத்துக் கொண்டு அப்பால் சென்றாள், வெங்கம்மா.



''என்னங்க, உங்க ஹோட்டல் விலேப்பட்டியல்லே தோசை 30பைசான்னும் போட்டிருக்கீங்க, 40பைசான்னும் போட்டிருக்கீங்களே, எது சரி?''
''நேத்தைக்குச் சுட்டது 40 பைசா; முந்தாநாள் சுட்டது 30 பைசா''

- ஹேக் விந்தா மதார்

மாரியின் கை அவனையுமறியாமல் கண்களை நாடிச் சென்றது. அவன் விரல்களைக் கண்ணீர் நனைத்தது.

உடனே உள்ளே ஓடிச் சென்று மகளை அப்படியே வாரி அணைத்து முத்தமிட அவன் உள்ளம் துடித்தது.

'ஆனால் இந்தக் கோலத்திலா?' —

தப்பியோடி வந்த சிறைக்கைதி போல அல்லவா இருந்தான்? அவன் தோற்றம் மகளின் மலர் உள்ளத்தில் முள்ளெனக் குத்தி விடுமே!

வந்த வழியே சுவடு தெரியாமல் சென்று விடத் திரும்பினான் மாரி.

சடாரென்று அவனை ஓர் இரும்புக் கரம் பற்றியது.

ஏறெடுத்துப் பார்த்தான்.

ஏட்டு ரங்கன்! மாரியின் உடம்பெல்லாம் நடுங்கியது. வெங்கம்மாவின் சொந்த அத்தை மகன். அவளைக் கட்டிக் கொள்ள வெகு நாட்களாகக் காத்திருந்தவன். ஆனால் நேற்று வந்த மாரி எதிர்பாராமல் இடையே வந்து விட்டான். அந்தக் கல்யாணம் நடந்த நாளிலிருந்து அவனுடன் ரங்கன் பேசுவதில்லை. கண்டாலும் முகத்தைத் திருப்பிக் கொள்வான். சமயா சமயங்களில் தொழிற்துறையில் அவனிடம் அதிகாரத்தைக் காட்டி மிரட்டியும் இருக்கிறான்.

'இவனிடமா அகப்பட வேண்டும்?' —

''வா. டேசனுக்கு. !''

ரங்கனின் கைப்பிடி இறுகியது போல இருந்தது, மாரிக்கு.

கழுத்தைச் சுற்றிக் கயிறு இறுக்குவது போன்றதோர் உணர்ச்சி. 'வெங்கம்மாவின் பாடு? கயற்கண்ணியின் நிலே?' — மாரியின் இதயம் படபடத்தது.

''வெங்கம்மாவுக்காவது என்னே விட்டு விடேன்'' எனக் குழைவாகச் சொன்னான்.

''வெங்கம்மாவுக்காகத் தான் சொல்றேன். ஒன்னே விட மாட்டேன். போலீசு டேசனுக்கு வா. அப்போ தான் ராமு விஷயம் முடியும்? நானும் பரிசு வாங்கலாம்.''

அவன் எக்காளமாகச் சொல்வது போல் மாரிக்குப் பட்டது.

'ராமுவின் கொலேக்கு நாம் தண்டனை அடைய வேண்டும். அவன் பரிசு பெற வேண்டும் வெங்கம்மாவின் மீது எப்படிப் பழி தீர்க்க நினைத்து விட்டான். கல் நெஞ்சக்காரன்!'

எப்படியும் ரங்கனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும்! 'ஆனால் அவசரப்படக்கூடாது. தருணம் பார்த்துச் செய்ய வேண்டும்' — என்றுமாரி தனக்குள்ளாகவே எண்ணிக் கொண்டான்.

அதே சமயம் ரங்கனின் எச்சரிக்கையைத் தளரச் செய்வதற்கு முயன்றான்.

''ராமுவைக் கொலே செஞ்சதுக்கு நான் தண்டனை பெறணும். வெங்கம்மா வாழ் நாளெல்லாம் சிரமப் படணும். இதுதான் ஒன் விருப்பமின்னு, நல்லாப் பரிசு வாங்கு. நடக்கிறதுதானே நடக்கும்?'' என்றான் மாரி.

''ராமு கொலேயா? வெங்கம்மாவுக்குச் கஷ்டமா? என்ன ஆளப்பா! என்னேச் சரியா புரிஞ்சுக்கலேயே! ராமு ஒண்ணும் சாகலே. பிழைச்சுகிட்டான்! ஆசுபத்திரியிலேயே அவன் எல்லாத்தையும் சுகிட்டான். இத்தனை நாளா போலீசு ஒனக்காகத்தான் காத்திருக்கு. ஒன் வாக்குமூலம் கெடைச்சிட்டா, அவன் மேலே கோர்ட்டு தீர்ப்பு சொல்லும். அவனிடமிருந்து கைப்பத்தின பொருளுக்காக எனக்கும் பரிசு இருக்கு. நீயும் நிம்மதியா வீடு திரும்பலாம். இப்போ சொல்லு, வெங்கம்மா ஏன் சிரமப்படணும்?''

மாரிக்கு வாயடைத்து விட்டது. ரங்கனைப் பற்றி அவன் எவ்வளவு தவறாக நினைத்து விட்டான்!

''வா, டேசனிலே வந்து ஆஜராகிட்டுப் போ!'' என்று ரங்கன் மாரியை அழைத்தான்.

அவனுடன் பேசாமல் சென்றான், மாரி. இப்போது அவன் கால்கள் தடுமாறவில்லை.

வட்ட மேஜை



"நம்மால் தாங்க முடியாதப்பா!"

● அம்மாடியோவ்! சிறுகதைகளெல்லாம் ஓவியர்களைப் பயங்கரமாகத்தான் பாதித்துள்ளன. நம்மால் தாங்க முடியாதப்பா!?
விருத்தாசலம் பாலரிஷி.

● ராஜாஜி வாழ்க்கை வரலாற்றில், ''ஆசிரமத்தில் நோயுற்ற ஒரு கன்றினை அழித்துவிட வி. ஆர். அனுமதியளித்ததற்காகச் சிலர் கண்டனம் தெரிவித்தனர்'' என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. சபர்மதி ஆசிரமத்தில் நோயுற்ற கன்றினை அழித்துவிட அனுமதி அளித்தவர் காந்திஜி. வி. ஆர். அல்ல. அஹிம்சாக் கொள்கைக்குப் புறம்பாக மகாத்மா செயல்பட்டார் என்று சிலர் கண்டனம் தெரிவித்தனர்.
சென்னை–34 எஸ். நாகேஸ்வரன்
(தவறு மொழிபெயர்ப்பாளருடையது. வருந்துகிறேன். - வே. ரா.)

●8.4.79 இதழ் 40ம் பக்கத்தில் ஒரு சிரிப்புத் துணுக்கு கண்டு மிக்க அதிர்ச்சியும்—வேதனையும் அடைந்தோம். அது ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரின் இறைமையைக் குறைத்து மதிப்பிடுவதாக இருக்கிறது. இனி இது போன்ற அபத்தமான துணுக்குகள் வெளிவராமல் பார்த்துக் கொள்ளவும்.
கோலார் தங்கவயல் தனசேகரன் மற்றும் நண்பர்கள்

● ''காமராஜர் ஆட்சியை ஊழல் ஆட்சி என்று இராஜாஜி குறிப்பிட்டார். 'இராஜாஜி ஆட்சி என்ன பரசுராமராட்சியா?' என்று காமராஜர் குறிப்பிட்டார்.'' என்று மு. க. கூறுகிறார்.
காமராஜ் இராஜாஜியின் ஆட்சியைப் பற்றி பரசுராமர் ஆட்சியா? என்று கேட்டாரோ என்னவோ! இராஜாஜி ஒருநாளும் காமராஜ் ஆட்சி என்று குறிப்பிட்டதில்லை. அவர் குறிப்பிட்டதெல்லாம் காங்கிரஸ் ஆட்சியைத்தான். அகில இந்தியாவில் நேருஜியின் தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் ஆட்சியைத்தான் சாடி வந்தார். பார்க்கப் போனால் நாடளாவிய காங்கிரஸ் ஊழலை நோக்குகையில் தமிழகம் காமராஜரின் கீழ் தேவலை என்பது ராஜாஜியின் கருத்து. காமராஜ் ஆட்சி என்பதற்கும், காங்கிரஸ் ஆட்சி என்பதற்கும் ராஜாஜியின் நோக்கில் எவ்வளவோ வித்தியாசமுண்டு.
எஸ். வி. எஸ்.


● 1976 ஜனவரியில் தி. மு. க. ஆட்சி கலைக்கப் பட்டதின் காரணங்களைக் கூறுமல் லஞ்ச ஊழல், கோதுமை ஊழல், வீராணம் திட்டம், பூச்சி மருந்து ஊழல் இவைகளில் மக்களின் வரிப்பணத்தைப் பாழடித்தது எல்லாம் மக்களுக்குத் தெரியும். நேர்மையாக ஒழுங்காக இருந்த அரசு கலைக்கப்பட்டது போல் கலைஞர் அவர்கள் கூறியிருக்கிறார். எப்போதுமே சாமர்த்தியமாகத் தவற்றை மறைப்பதில் வல்லவரானதினாலே தங்கள் பேட்டியிலும் சமாளித்திருக்கிறார்.
திருச்சி எம். ஏ. முத்தையன்

● அண்டை மாநிலங்களில் மதுக் கடைகள் இருக்கும் பொழுது தமிழகத்தில் மட்டும் ஏன் மதுவிலக்கு? என்கிறார் கலைஞர். பம்பாயில் விபசாரத்துக்கு லைசென்ஸ் உண்டு. எங்கள் தமிழகத்திலும் அம்முறை அமுல் நடத்தப் படவேண்டும் என்று டாக்டர் கலைஞர் போராடலாமே!
மேலும், அவசர நிலையின் அந்திமக் காலத்தில் நடத்தப்பட்ட தி. மு. க. எதிர்ப்புப் பிரசாரங்கள், மக்களிடம் தி.மு.க.வினருக்கு அனுதாபத்தையே ஏற்படுத்தின என்பது திண்ணம். அவரது கணிப்பு சரியல்ல.
மதுரை ஏ. மீராமொகைதீன்.

● காஞ்சியில் சங்கராச்சாரியார் மடத்தருகே பெரியார் சிலை வைப்பது குறித்து எழுந்த விவாதத்தில் சட்டமன்றத்தில் பார்வர்டு பிளாக் உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் ஆற்றிய உரை பாராட்டும் வண்ணம் இருந்தது. கலைஞரை நோக்கி 'உங்களால் பெரியார் சிலையை ஒரு மசூதியின் அருகிலோ அல்லது மாதா கோவிலின் அருகிலோ அமைக்க முடியுமா?' என்று கேட்டது, இந்துக்களிடம் இல்லாத ஒற்றுமையையும், சகிப்புத் தன்மையையும் குறிப்பதாக அமைந்திருந்தது.
கண்டனூரார் என். நடராஜன்

● இது குழந்தைகள் ஆண்டானபடியால் குழந்தைகளுக்கென ராமருடைய வரலாறு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி சுவாமிகள் அவர்களால் சிறிய அளவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதைப் பெற விருப்பமுள்ள மாணவ – மாணவிகள் ஒரு கார்டில் ஒரு பக்கத்தில் ராம நாமாவையும், மறு பக்கத்தில் தங்களுடைய முழு விலாசத்தையும் எழுதி, 'மானேஜர், காஞ்சி சங்கராசாரியார் மடம், 1, சாலைத் தெரு, காஞ்சீபுரம் – 2 என்ற முகவரியிட்டு அனுப்பினால் அவர்களுக்கு ராமர் படமும், ராமர் வரலாறு புத்தகமும் அனுப்பி வைக்கப் படும்.
மானேஜர்
காஞ்சி ஸ்ரீமடம்.

கருணாநிதியின் செயலால் மதுவில் சிக்கிய வாலிபர்கள் அதிலிருந்து பூரணமாய் விடுபட, அவர்களைக் காப்பாற்ற, சிறைத் தண்டனை சட்டம் கொண்டு வந்த எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களை மனமார வாழ்த்துகிறேன்.
விருதுநகர். துரைராஜ் நாடார்.



CENTURY RAYON
a continuous commitment to social responsibility

The Vithoba Temple, at Kalyan is a gift to the community from Century Rayon. On Kartiki Ekadashi Day it becomes the Pandharpur of Bombay. It is frequented by millions of Pilgrims from far and near bringing harmony and happiness to the searching souls.

This popular pilgrimage centre is also a fabulous recreational spot with its scenic surroundings bringing solace and relaxation to the mind and offering a refreshing pastime.

While improving the spiritual lot of its personnel, Century is also pledged to employing modern methods in medical care and education to give the benefit to the people living in the surrounding villages.

A mobile clinic goes round bringing medical relief to the poor needy.

A fully equipped hospital, with 50 beds, provides treatment at nominal cost to those who are in need. An eye and blood donation camp is also organised for the benefit of the poor.

In the educational field, Century Rayon provides facilities of a high school and a college (4000 students) with libraries attached, thus, bringing education to the door-steps of people in and around the Century Rayon complex.

Besides these, Century has provided for its workers, the finest housing colonies, a club-house, a co-operative credit society and many other facilities.



CENTURY RAYON

Industry House, 159, Churchgate Reclamation, Bombay-400 020.

CONCEPT

ஹிந்தியைத் திணிக்காதீர்கள்! ஒற்றுமையைக் குலைக்காதீர்கள்!

முரசொலி மாறன் 4

பீகாரைப் பாருங்கள்!

பீகார் முதலமைச்சர் மீது நான் மிகுந்த மரியாதை வைத்திருப்பவன்.

அங்குள்ள அதிகாரிகள் ஆங்கிலத்தில் குறிப்பு எழுதினால் அவர்கள் தண்டிக்கப் படுவார்கள் என்று அறிவித்திருக்கிறார்.

இரண்டு நாட்களுக்கு முன்பு ஆங்கில 'டெலிபிரிண்டர்கள்' முழுவதும் ஒழித்துக் கட்டப்படும் — என்றும் அறிவித்திருக்கிறார்.

—இது எங்கு போய் நிற்கும் என்று எனக்குத் தெரியவில்லை.

பீகார் போன்ற இடங்களில் இந்தி தெரியாதவர்கள் முன்னேறவே முடியாத காலம் விரைவில் உருவாகி விடுமோ — என்று கருதுகிறேன். அப்படி ஒரு நிலை வரத்தான் போகிறது.

ஆனால் ஒன்றை மட்டும் வலியுறுத்திச் சொல்லிக் கொள்வேன் — ஆங்கிலத்தை வெளியேற்றியபிறகு, அந்தச் சூன்யத்தை நிரப்புவதற்கு இந்தி தானாக அந்த இடத்தைப் பிடித்து விடும் — என்று யாராவது கருதுவார்களேயானால் அவர்கள் நிச்சயம் ஏமாந்து போவார்கள்!

அந்த மாதிரி எண்ணத்தை யாரும் வளர்த்துக் கொள்ள வேண்டாம்; அது நடக்கவே நடக்காது.

காரணம் சாதாரணமானது: ஆங்கிலத்தின் இடத்தை நிரப்பும் சக்தி இந்திக்குக் கிடையவே கிடையாது.

அப்படி ஏதாவது நடந்து விட்டால் விரைவில் 'இந்தி தெரிந்த இந்தியா' — 'ஆங்கிலம் தெரிந்த இந்தியா' — என இரண்டு இந்தியாக்கள் உருவாகிவிடும். அதனால் இந்திய ஒற்றுமைக்கு எத்தகைய ஆபத்து ஏற்படும் என்பதை நான் சொல்லத் தேவையில்லை.

அதனால்தான் எனது தீர்மானத்தில் மத்திய அரசு தனது மொழிக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் — என்று கேட்டிருக்கிறேன்.

இந்தி பேசாத பிரதிநிதிகள் ஞாபக மறதியாக இருந்த சமயம் இந்தி ஆட்சிமொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது. அந்த விவரங்களை நான் விளக்க நேரமில்லை.

1965—ல் மொழிப் பிரச்னையை நீங்கள் மறுபரிசீலனை செய்தீர்கள்.

அதுபோல இன்னொரு பரிசீலனை செய்வதற்கு நேரம் வந்துவிட்டது; ஏனெனில் எங்கும் மொழியைப் பற்றிய விழிப்புணர்ச்சி இப்போது ஏற்பட்டிருக்கிறது.

பெரும்பாலான மக்களால் இந்தி பேசப்படுவதாகச் சொல்லப்படுகிறது. நமது பிரதமர் போகுமிடங்களிலெல்லாம் 50 சதவிகித மக்களுக்கு இந்தி தெரியும் — என்று சொல்லிக் கொண்டு வருகிறார்.

—ஆனால் இது உண்மையல்ல.

1951—இல் எடுக்கப்பட்ட 'சென்சஸ்' கணக்குப் படி இந்தி பேசக்கூடியவர்கள் 42 சதவிகிதம்தான்!

ஆனால் அப்போது ஒரு தந்திரம் செய்தார்கள்.

இந்துஸ்தானி, பஞ்சாபி, ராஜஸ்தானி, பீகாரி — முதலிய மொழிகள் பேசினோரையும் இந்தி பேசுவோராகக் கூட்டி 42 சதவிகிதம் என்று ஒரு புள்ளி விவரத்தை உருவாக்கினார்கள்.

மீண்டும் பத்தாண்டுகள் கழித்து 1961-இல் இன்னொரு 'சென்சஸ்' எடுக்கப்பட்டது.

இந்தப் பத்தாண்டுகளில் மக்கள் தொகை 22 சதவிகிதம் உயர்ந்தது.

1951—இல் அவர்கள் காட்டிய கணக்கு உண்மை என்றால் 1961—இல் இந்தி பேசுவோர் உயர்ந்திருக்க வேண்டுமல்லவா?

இந்தி பேசுவோர் தொகை குறைகிறது!


ஆனால் என்ன நடந்தது?

இந்தி பேசுவோர் தொகை 32.38 சதவிகிதமாகக் குறைந்தது.

42 சதவிகிதம் 32.38 சதவிகிதமாகக் குறைவானேன்?

காரணம் இதுதான்: இதே இடைக்காலத்தில் இந்தி வட்டாரத்தில் ஒரு சின்ன மொழிப் புரட்சி ஏற்பட்டது.

உதாரணமாக ராஜஸ்தான் மாநிலத்தில் 5 தாய்மொழிகள் தோற்றமெடுத்தன. பலர் 'மார்வாரி' தான் தங்கள் தாய்மொழி என்று உணர்ந்தனர். பலர் 'ராஜஸ்தானி' தான் தங்கள் தாய்மொழி, இந்தி அல்ல என்று கூறிக் கொள்வதில் பெருமைப்பட்டனர்.




எதிர்காலச் செல்வங்கள்

சென்ற பொங்கலுக்கு மறுநாள் மாலை எங்கள் வீட்டில் எல்லோரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம்.

அப்போது என்னுடைய கடைசித் தம்பியான ஒன்பது வயது பட்டாபிராமன் அழுது கொண்டே வெளியில் இருந்து வீட்டுக்குள் வந்தான்.

எனது நாம்ஞ, "ஏண்டா அழுதுக்கிட்டே வர்றே?.." என்று கேட்க எனது தம்பி பட்டாபிராமன் "நீங்க எனக்கு மிட்டாய் வாங்கித் திங்க கொடுத்த ஐந்து பைசாவை நான் வாயிலே போட்டுக்கிட்டு, தாத்தா கடைக்குப் போனப்ப, அந்தக் காசை நான் முழுங் கிட்டேன்" என்று சொன்னான்.

அவன் சொன்னதைக் கேட்டவுடன் என் அப்பா பதறியபடி என் அம்மாவிடம், "பட்டாபி காசை முழுங்கிட்டான். சீக்கிரமா நம்ம வீட்டிலிருக்கிற வாழைப் பழங்களை எடுத்து அவனுக்கு நிறைய தின்னக் கொடு. பூவம் பழத்தை நிறைய தின்னுட்டான்னா காசு, மலம் கழிக்கும் போது வெளியே வந்துடும்" என்று சொன்னார். உடனே என் அம்மா அடுக்குப் பானையில் வைத்திருந்த ஒரு சீப்பு வாழைப் பழங்களைக் கொண்டு வந்து என்



தம்பியை வற்புறுத்தி தின்னச் சொல்ல அவனும் ஆறு பழங்களைத் தின்று விட்டான். மீதியுள்ள பழங்களைக் கையிலே வைத்துக்கொண்டு, எல்லோரையும் பார்த்து, "உங்களை எல்லாம் நல்லா ஏமாத்திட்டேனே!" என்று உரக்கச் சிரித்தபடி சொன்னான்.

ஒன்றும் புரியாதவர்களாய் நாங்கள் எல்லோரும், "என்னடா சொல்றே?" என்று கோரஸாகக் கேட்டோம். அவன், "நான் காசை முழுங்கலே; காசை முழுங்கின மாதிரி சொன்னா எனக்கு வாழைப் பழம் கிடைக்கும்னுதான் அப்படிச் சொன்னேன்" என்றவாறு தன் ட்ரவுசர் பையிலிருந்து ஐந்து பைசாவை வெளியில் எடுத்து எல்லோருக்கும் காட்டினான்.

அதிர்ச்சியடைந்திருந்த நாங்கள் ஆச்சரியப்பட்டுப் போனோம். அவன் பொய் சொன்னதைக் கண்டித்து என் நாம்ஞ அதட்ட உடனே அவன், "அம்மா மட்டும் அடுக்குப் பானையில் வாழைப் பழங்களை வச்சிக்கிட்டு, "வாழைப் பழமெல்லாம் தீர்ந்து போச்சுன்னு பொய் சொல்லலாமா?" என்று கேட்டான். எல்லோரும் அவன் செயலைப் பார்த்து வியந்து போனோம்.

[illegible]

அதுபோலவேதான் பீகாரிலும்! அங்குள்ள மக்கள் தங்கள் தாய்மொழி இந்தி அல்ல. போஜ்புரி அல்லது மைதிலி அல்லது மகதி அல்லது கோர்த்தா என்று உணர்ந்தனர்.

மத்திய பிரதேசத்திலும் இதே நிலைமை தான்! பலர் தங்கள் தாய்மொழி 'சட்டிஸ் கர்ஹி' என்று உணர்ந்தனர்.

—இதைத் தாய்மொழி விழிப்புணர்ச்சி அல்லது மொழிப்புரட்சி என்றுதான் சொல்ல வேண்டும்!

—இவர்கள் அத்தனைபேரும் 1951—இல் தங்கள் தாய்மொழி இந்தி என்று கூறியவர்கள்!

அதனால்தான் 1961—இல் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தொகை குறைந்துவிட்டது.

அடுத்த பத்தாண்டுகள் கழித்து – 1971—இல் இன்னொரு 'சென்சஸ்' எடுக்கப்பட்டது.

ஆனால், தாய்மொழிகளைப் பற்றிய இறுதிப் புள்ளி விவரம் மட்டும் இன்னும் தரப்படவில்லை.

1981— வந்தால் அடுத்த 'சென்ஸஸ்' எடுக்கப்பட்டாக வேண்டும்.

எல்லாப் புள்ளி விவரங்களையும் வெளியிட்டவர்கள் இந்தப் புள்ளி விவரங்களை மட்டும் இன்னும் வெளியிடவில்லை!

—இப்போதும் அவர்கள் ராஜஸ்தானி, போஜ்புரி போன்ற மொழிகளைப் பேசுவோர் கணக்கைக் கூட்டி இந்தி பேசுவோர் எண்ணிக்கையை உயர்த்தும் தந்திரத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள்!

அப்படிக் கூட்டி இந்தி பேசுவோர் எண்ணிக்கை 38.04 சதவிகிதம் என்று இடைக் காலப் புள்ளி விவரம் அளித்திருக்கிறார்கள்.

பிறமொழிக் காரர்களைக் கழித்து விட்டால் இந்தி பேசுவோர் எண்ணிக்கை 29.67 சதவிகிதம்தான் வரும்!

எதற்காக இந்த அரசு இறுதி 'சென்சஸ்' கணக்கை வெளியிடாமல் மறைக்க வேண்டும்? புள்ளி விவரங்களில் தந்திரங்கள் செய்து இதர மொழிக்காரர்களையும் சேர்த்து இந்தி பேசுவோர் எண்ணிக்கையை உயர்த்தும் முயற்சி நடக்கிறதா?

இந்த அரசு அப்படி ஒரு தந்திரம் செய்து கொண்டிருக்கிறது; அதனால்தான் இறுதிப் புள்ளி விவரத்தை வெளியிடவில்லை என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

இல்லையென்றால் உடனடியாக அந்தப் புள்ளி விவரங்களை வெளியிடட்டும்!

இந்தியை மட்டும் நீங்கள் ஆட்சி மொழியாக்கினால் அது அந்த மொழிக்கு ஒரு தனி அந்தஸ்தை – அரசியலில், சமுதாயத்தில், கல்வியில், பொருளாதாரத்தில், கலாசாரத்தில் அந்த மொழிக்குத் தனி அனுகூலத்தை அளிக்கிறது. அது மட்டுமின்றி அது அதிகார மொழியாகவும் (language of power) ஆகி விடுகிறது.

அந்த மொழிக்கு மட்டுமல்ல, அந்த மொழியைப் பேசுகிறவர்களுக்கும் நாங்கள் அடிமைகளாக ஆகி விடுகிறோம்! இதை எப்படி எங்களால் சகித்துக்கொண்டிருக்க முடியும்?



உதவபடியான உறவுகள்

O சுமித்ரா

“என்னுடைய முதல் படம்தான் எனக்குப் பிடித்த படம்'' என்று ஆரம்பித்தார் டைரக்டர் துரை.


''காரணம் என்னுடன் உழைத்த என் சக தொழில்நுட்பக் கலைஞர்கள் எல்லாருக்குமே இந்தப் படம் ஒரு மனநிறைவைத் தந்தது.''

'' 'அவளும் பெண்தானே' என்ற தலைப்பில் விபசார வாழ்க்கை நடத்தும் ஒரு பெண்ணின் கதையை நீங்கள் படமாக்க நினைத்தது ஏன்?''

''நான் உதவி இயக்குனராக இருந்த பொழுது மைசூரில் ஒரு படப்பிடிப்பு நடந்தது. நாங்கள் எல்லாருமே ஹோட்டலில் அறை எடுத்துத் தங்காமல் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டிருந்தோம். காலையில் வெளிப்புறப் படப்பிடிப்புக்காகச் சென்றால் மாலையில்தான் திரும்புவோம். ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் எதிர் வீட்டில் வசிக்கும் சில பெண்கள் வாசலிலேயே நின்று எங்களைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். நான் நண்பர் ஒருவரிடம் கேட்டேன், 'இவர்கள் யார்?' என்று. 'இவர்கள் சிவப்பு விளக்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள். நாம்



துரை பேட்டி



என்ன இது? அந்தப் பெண்மணி மீது எலெக்ட்ரிக் ஷேவரையா பயன்படுத்துகிறார்?

இல்லே! இல்லே! உடலின் உள் உறுப்புகளில் உள்ள கோளாறுகளைக் கண்டறிய ஒரு புதுக் கருவி அது. அவ்வளவுதான்!

உடலைக் கிழித்துப் பார்த்து திசு சாம்பிள் எடுத்து ஆராய வேண்டாம்; எக்ஸ்ரே எடுத்துப் பார்க்க வேண்டாம்.

அதிவேக ஒலி அலை எழுப்பும் இச்சாதனம் (Ultra Sound) மார்பு, ரத்த நாளங்கள், வேறுபல உறுப்புகளில் உள்ள கோளாறுகளை அறிய உதவுகிறது. டெலிவிஷன் திரையில் உள் உறுப்புகளில் உருவங்கள் தெரிகிறது. குறைபாடுகள் டாக்டருக்குப் புரிகிறது — அமெரிக்காவில் பயோ டைனமிக்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பு.

எடுக்கும் படத்தில் ஏதாவது சிறு வேடம் கிடைக்குமா என்ற நப்பாசையில் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்' என்றார் அவர். எனக்கு அவர்கள் மேல் அனுதாபம் பிறந்தது. எனக்கு முதன் முறையாக ஒரு படத்தை இயக்கும் சந்தர்ப்பம் கிடைத்த பொழுது சிவப்பு விளக்குப் பகுதியைச் சேர்ந்த ஒரு பெண்ணின் கதையாகத் தேர்ந்தெடுத்தேன்.''

''நீங்கள் இந்தப் படத்தில் சங்கேதக் குறிகளை உருவகங்களை அதிகம் உபயோகப் படுத்தியிருக்கிறீர்கள் இல்லையா?''

''என் படத்தில் கதையோடு பாத்திரங்களின் தன்மையோடு இந்த வகையான காட்சிகள் இணைந்து வருகின்றனவே தவிர வேண்டுமென்றே Symbolism திணிக்கப் படவில்லை. உதாரணமாக, சிவப்பு விளக்கு வீட்டுக்குக் கதாநாயகி வருகிறாள். வாடகை வண்டியை விட்டு இறங்கியவுடன் வண்டியோட்டி பணத்தை வாங்கிக்கொண்டு மீட்டரை மேலே திருப்புகிறார். For Hire என்று அதில் எழுதப் பட்டிருக்கிறது. இது கதாநாயகி சிவப்பு விளக்கு வீட்டில் நுழைகிறாள் என்பதை இயல்பாகக் காட்டுகிறதே யொழிய திணிக்கப்படவில்லை.''

''இந்தப் படத்தின் க்ளைமாக்ஸ் காட்சி பற்றி உங்களுக்குள்ளேயே கருத்து வேற்றுமைகள் இருந்ததாமே உண்மையா?''

''ஆமாம். இதன் முடிவு காமெடியாகத் தான் இருக்க வேண்டுமென்று நான் நினைத்தேன். ஆனால் படம் பார்த்த விநியோகஸ்தர்கள் என் முடிவை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் கதாநாயகி திரும்பவும் திருமணம் புரிந்து கொண்டு புதிய வாழ்க்கையைத் தொடங்குகிறாள் என்றால் மக்கள் ஏற்க மாட்டார்கள் என்று பயந்தார்கள். வாதாடிப் பார்த்தேன். கடைசியில் அவர்களின் விருப்பப்படியே விட்டு விட்டேன். கன்னடத்திலும், தமிழிலும் துன்பியலாகத்தான் முடிகிறது என்றாலும் இதே படத்தை நான் தெலுங்கில் தயாரிக்க இருக்கிறேன். அதில் மகிழ்ச்சியான முடிவுதான் கொடுக்கப் போகிறேன்.''

''இதே படத்தை வேறு மாதிரி எடுத்திருக்கலாம் என்ற எண்ணம் ஏற்பட்டதா?''

''ஏற்பட்டது. இதில் வரும் பாத்திரங்கள் சிலவற்றை வேறு மாதிரி இடங்களில் எடுக்க விரும்பினேன். ஆனால் பல காரணங்களால் முடியவில்லை.''

''இந்தப் படத்தைப் பற்றிய விமர்சனங்களில் கூறியுள்ள குறைகள் என்ன?''

''நான் இதற்குப் பின் பல படங்கள் எடுத்தாலும் இந்தப் படத்தின் விமர்சனங்களை மட்டும்தான் அழகாகத் தொகுத்து வைத்திருக்கிறேன். 64 விமரிசனங்கள் இப்படத்தைப் பற்றி எழுதப்பட்டுள்ளன. அவை எல்லாமே என்னை ஊக்குவிப்பதாக இருக்கின்றனவே யொழிய பெரிய தவறுகளாருமே எதையும் சுட்டிக் காட்டவில்லை. அந்த அளவில் நான் அதிருஷ்டசாலிதான்.'' பேட்டி : 'சலன்

கன்ஸுமர் கவுன்ஸில் ஆஃப் இந்தியா
வின் மகத்தான கண்டுபிடிப்பு:

மூலிகைச் செடிகளின் உதவியால்
மட்டுமே உங்கள் பற்களை நோய்
களிலிருந்து காப்பாற்ற முடியும்

ஒரே நீம் டூத்பேஸ்ட்

இதில் மட்டும் தான் நீம் விதையின் குணமும் மணமும் அமைந்துள்ளது

பல் டாக்டர்களின் சர்வேயின் படி பார்த்ததில் புகழ்பெற்ற டூத் பேஸ்ட்டுகள் யாவுமே பற்களை வெண்மையாக மட்டும் வைத்துக் கொள்கிறது. பல் நோய்கள் வராமல் இது காப்பதில்லை. நோய் வராமல் தடுக்கவல்ல மூலிகையின் குணம் இப்பொழுது வரும் டூத் பேஸ்டுகளில் இல்லாதது தான் இதன் காரணம். ஆனால் நீம் டூத் பேஸ்ட் இயற்கையின் குணம் கொண்டிருக்கிறது நீம் டூத் பேஸ்ட் நீம் விதையின் எண்ணை கொண்டு தயாரிக்கப்படுவதால் இது பற்களை வெண்மையாக வைத்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல் நோய்கள் உங்கள் பற்களை நெருங்க விடாமல் பாதுகாக்கிறது.



வேண்டுகோளின் பேரில்
இதர விபரம்


பற்களை வெண்மையாக
வும் ஆரோக்கியத்துடனும்
வைத்துக் கொள்ள தவ
றாமல் உபயோகியுங்கள்—
நீம் டூத் பேஸ்ட்

IDL/NTN 2T

கல்கத்தா கெமிக்கலின் ஒரு தயாரிப்பு

நீங்கள் நிம்மதியாக உறங்க வேண்டுமென்பதற்காக நாங்கள் உறங்காத இரவுகள் பல.

ஏர்-பிரேக் ஆக்சுவேஷன் சாதனங்களின் முன்னோடிகளான சுந்தரம்-கிளேட்டனுக்கு பாதுகாப்பு என்பது ஒரு அர்த்தமற்ற உறுதிமொழி அல்ல. எங்கள் சாதனங்கள் முழுமையான பாதுகாப்பிற்கு உறுதியளிப்பதற்கேற்ப உருவாக்கப்பட்டவை.



ஆம், இன்று இந்நாடு முழுவதிலும் இலட்சக்கணக்கானவர்கள் தங்கள் அன்புக்குரியவர்களான ஆயிரக்கணக்கான பஸ்/லாரி ஓட்டுபவர்கள், பயணிகள் தங்களிடம் பத்திரமாகத் திரும்பி வந்து விடுவர் என அமைதியுடன் நம்பிக்கையோடு உறங்குகின்றனர். சுந்தரம்-கிளேட்டனில், மிகவும் தனித்தன்மை வாய்ந்த இத் துறையில் முன்னோடிகளான நாங்கள், இந்த நம்பிக்கையை அளிக்கின்றோம் (அதிலிருந்து சாலைப் பாதுகாப்பின் புதியதோர் முறை உருவாகிவிட்டது.)

இன்று, இந்தியாவிலுள்ள ஒவ்வொரு ஹெவி-ட்யூடி வண்டியிலும் எங்களுடைய காற்றுத் தடை உபகரணங்கள் அசல் உறுப்புகளாகப் பொருத்தப்பட்டுள்ளன. இத்துடன் நாங்கள் இருந்துவிடமாட்டோம். உங்களது பாதுகாப்பு எங்களுக்கு மிகப் பெரியதொரு பொறுப்பு. (அதற்காக நாங்கள் பல இரவுகள் உறக்கமின்றி உழைக்கத் தயாராக உள்ளோம்).

உங்கள் பாதுகாப்பிற்கு எங்கள் உத்திரவாதம்

இன்றைய தொழில் நுணுக்க முன்னேற்றம், ஆராய்ச்சி, தரக்கட்டுப்பாடு, தரச்சிறப்புச் சோதனைகள் (உதாரணமாக ஒரு பிரேக்சேம்பர் டயாஃப்ரம் பல லட்சக்கணக்கான தடவைகளுக்குமேல் சோதிக்கப்படுகின்றது) — இது போன்ற தொடர்ச்சியான சில வழி முறைகள் மூலம் நாங்கள் பிரேக் சாதனத்தை மட்டும் அளிக்கவில்லை, உங்கள் முழுமையான பாதுகாப்பிற்கு உறுதியளிக்கும் ஒரு சிறந்த சாதனத்தையே அளிக்கின்றோம்.

நாங்கள் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றோம்— அதனைப் பாதுகாக்கவும்

CD TVS அளிக்கும் முழுமையான காற்று மற்றும் காற்று-உதவி கொண்ட பிரேக் சாதனங்களின் உறுதியான பாதுகாப்பு எப்பொழுதும் உங்களுக்குக் கிடைப்பதற்கு உங்கள் சாதனத்தை முறையாகப் பராமரியுங்கள். மற்றும் எப்பொழுதும் அசல் CD-TVS உறுப்புகளையே வாங்கி உபயோகியுங்கள். இதனை அலட்சியம் செய்யவேண்டாம். உங்கள் நன்மைக்காகத்தான் சொல்கின்றோம்.

சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்

பாடி, சென்னை 600 050

உங்கள் பாதுகாப்பு எங்கள் தொழில்

CD TVS

SAA SCL 2587

ராஜாஜி வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி

மோதிலால் நேரு திட்டத்துக்கு முஸ்லிம்களின் எதிர்ப்பு லக்னோ மகாநாட்டுக்குப் பிறகு அதிகரித்து வந்தது. கல்கத்தா மகாநாட்டின் போது காந்தி உதவ வேண்டுமென்று மோதிலால் வற்புறுத்தினார். காந்தி யின்றிப் போராட்டத்தை ஆரம்பித்து நடத்த முடியாதவர்களாக அரசியல் வாதிகள், மறுபடியும் தலைமை ஏற்குமாறு மகாத்மாவைக் கோரி வந்தனர். மகாத்மா ஸி. ஆருக்கு அழைப்பு விடுத்தார்.

கல்கத்தா செல்லும் வழியில், வார்தாவில், காந்தியுடன் சேர்ந்து கொள்ளு முன்னர், ஸி. ஆர்., அன்னிபெஸண்ட்டைச் சந்தித்தார். சட்ட மறுப்பு இயக்கம் இப்போது ஆரம்பமாகி நடக்கும் போல் தோன்றியது. அதற்கு பெஸண்ட் அம்மையாரின் ஒத்துழைப்பை ஸி. ஆர். பெற முயன்றார். மகாத்மாவின் போராட்டப் பாணியை ஸ்ரீமதி பெஸண்ட் விரும்பவில்லை. ஆனால் அதில் தமக்கிருந்த அருவருப்பை அவர் வெற்றி கொள்வார் என்று ஒரு கணம் தோன்றியது. சட்டமறுப்பு இயக்கத்தில், பயிற்சி பெற்ற தொண்டர்கள் மட்டுமே ஈடுபட அனுமதிப்பதன் மூலம் வன்முறை ஏதும் நிகழாமல் கவனித்துக் கொள்ளலாம் என்று ஸி. ஆர். அவருக்கு உறுதியளித்தார். ஆனால் இறுதியில் ஸ்ரீமதி பெஸண்ட் தாம் இயக்கத்தில் சேர விரும்பவில்லை என்றே தெரிவித்து விட்டார்.

கல்கத்தாவில் ஸி. ஆரும் காந்தியும் சேர்ந்து தங்கியிருந்தனர். சுபாஷ் போஸ், ஜவாஹர்லால் ஆகியோர் தலைமையில் ஒரு யுவர்கள் கோஷ்டி, 'பிரிட்டனின் மேலாதிக்கத்துக்கு உட்பட்ட சுயாட்சியை ஏற்கலாம், சகித்துக் கொள்ளலாம்' என்கிற மோதிலால் நேரு அறிக்கையை வன்மையாக எதிர்த்தது.

காந்தி ஒரு சமரசத் திட்டத்தை வகுத்தார். அதன்படி லண்டன் ஒன்றரை ஆண்டுகளுக்குள், பிரிட்டிஷ் மேலாதிக்கத்துடன் கூடிய இந்திய சுயாட்சியை ஒப்புக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யவில்லை என்றால் காங்கிரஸ் பூரண சுயராஜ்யம் கோரிப் போராடும். கமிட்டி கூட்டத்தில் இந்தச் சமரசத் திட்டத்தை ஏற்ற ஜவாஹர்லாலும் சுபாஷ்போஸும் பொதுக் கூட்டத்தில் இதனை எதிர்த்தனர்.

இந்தக் குட்டிக் கரணம் மகாத்மாவிடமிருந்து அப்பட்டமான கண்டனத்தைப் பெற்றது:

''சுதந்திரம் என்று வாயளவில் பேசிக் கொண்டிருந்தால் போதாது. அதன் பின்னணியில் கண்ணியம் இல்லையெனில் உங்கள் முணுமுணுப்பெல்லாம் வெற்று சூத்திரங்கள் தாம். உங்களுடைய வாக்குப்படி நீங்களே நடக்கத் தவறினால் சுதந்திர இந்தியா எந்த நிலையில் இருக்கும்? சுதந்திரம் என்பது கடுமையான சுய கட்டுப்பாடுகளுடன் கூடியது.''

''பிரிட்டிஷ் மேலாதிக்கத்துடன் கூடிய சுயாட்சியா அல்லது பூரண சுயராஜ்யமா என்பதை யாருமே நிஜமான ஒரு பிரச்னையாக எடுத்துக் கொள்ள முடியாது'' என்பது ஸி. ஆரின் கருத்தாக இருந்தது. வீராவேசமான பேச்சுக்கு மேலாக ஏதாகிலும் செய்தாகவேண்டும் என்ற நிலையைக் காந்திஜி பின்வருமாறு வர்ணித்தார்: ''சங்கிலியால் பிணைப்புண்டிருக்கும் கைதி நுரை தள்ள வீராவேச சபதங்கள் செய்தானேயானால், அவனைச் சிறை வைத்தவர்கள் பரிகசித்துச் சிரிப்பதற்கு வாய்ப்பளித்தவனாகிறான்.''

செப்டம்பரிலேயே காந்தி கூறியிருந்தார்: ''நமக்குச் சுதந்திரம் கிடைப்பது உறுதியானால் அது பிரிட்டிஷ் மேலாதிக்கத்துடன் கூடிய சுயாட்சியா அல்லது பூரண சுதந்திரமா என்பது பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை.

''சுதந்திரத்தைவிட மேலாதிக்கத்துடன் கூடிய சுயாட்சி அதிகப் பயன் தருவதாக இருக்கலாம் — அது கிடைக்கும் என்ற அதிகார பூர்வமான உறுதி மொழி முதலில் நமக்குத் தரப்படுமேயானால். இதற்கு மாறாக, பூரண சுதந்திரம் என்பது வெறும் கேலிக் கூத்தாகி விடும் — அது கிடைக்கும் என்ற அதிகார பூர்வமான உறுதி மொழி இல்லை என்றால். சுதந்திரத்தை என்ன பெயரிட்டு அழைத்தால் என்ன? யதார்த்த நிலைதான் முக்கியம். ரோஜாவை என்ன பெயரிட்டு அழைத்தாலும் அது இனிய வாசனையுடையதாகத்தான் இருக்கும்.''

கல்கத்தா காங்கிரஸின் முக்கிய தீர்மானம், பிரிட்டன் இந்தியாவின் கோரிக்கையை ஏற்றுலொழிய சாத்துவிகச் சட்ட மறுப்பு 1929 இறுதியில் மறுபடியும் ஆரம்பமாகும் என்பதுதான். சுதந்திரம் என்ற சட்ட பூர்வமான வெகுமதியைப் பெறும் அளவுக்கு ஓராண்டு காலத்துக்குள் முன்னேறி விட முடியுமா? காங்கிரஸ் நிர்மாணப் பணிகளைத் தீவிரமாக்குவதன் மூலம் தன் அறப் போர்ப்படைகளுக்கு ஆட்களைப் புதிதாகச் சேர்த்துக் கொண்டு பயிற்சி அளிக்க முற்பட்டது.

நிர்மாணப் பணிகளில் முக்கியமானது மதுவிலக்கு என்று கருதப்பட்டது. காரியக்

ஜவாஹர்லால்



சுபாஷ் போஸ்



கமிட்டி இதை ஒரு தீர்மானத்தின் மூலம் ஸி. ஆரின் பொறுப்பில் விட்டது.

மகாத்மா தேசிய நடவடிக்கைகளின் மையத்துக்குத் திரும்பி விட்டார் என்றதும் சென்னை, ஸி. ஆரின் தலைமையைக் கோரியது. ராஜதானி மகாநாடு செப்டம்பர் முதல் வாரத்தில் வேதாரண்யத்தில் கூடிய போது அவரைத்தான் எல்லோரும் நம்பிக் கொண்டிருப்பது போல் தோன்றியது.

வேதாரண்யத்துக்கு பட்டேல் வரவேண்டும் என்று விரும்பிய ஸி. ஆர்., காந்திக்குத் தந்தி கொடுத்தார்: ''வல்லபாய் தலைமை வகிப்பது நீங்களே வந்து விட்டது போலாகும். தார்மீக உணர்வை ஏற்படுத்த அவரது வருகை அத்தியாவசியமானது.'' காந்தி சென்று வருமாறு பட்டேலுக்கு அறிவுறுத்தினார்.

போராட்டத்தில் இறங்க வேண்டும் என்ற ஆர்வம் வேதாரண்யம் மகாநாட்டின் போது காணப்பட்டது. விவசாயிகள் சங்கம் ஒன்று அமைந்தது. நிலவரி சம்பந்தமாக பார்டோலி போலவே ஒரு போராட்டம் நடத்தலாம் என்று சிலர் யோசித்தார்கள். வேறு ஒரு பகுதியினர் பூரண சுயராஜ்யம் கோரினார்கள். ஆனால் ஸி. ஆரும் வல்லபாயும் மகாநாட்டுக்குப் பிறகு இருவார காலம் தென் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்த போது அந்த ஆண்டு இறுதி வரை பொறுமையாக இருக்குமாறு ஆலோசனை வழங்கினார்கள்.

30. மது அரக்கனுடன் போர்

1928ல் இருந்ததை விட 29ல் ஸி. ஆரின் மனம் உற்சாகமடைந்திருந்தது. பிப்ரவரியில் மகாத்மாவுக்கு அவர் எழுதிய ஒரு கடிதம் கட்டுக்கடங்காத மகிழ்ச்சி பற்றித் தெரிவிக்கிறது.

ஐம்பது வயதாகி விட்டாலும் வாழ்க்கையில் அவர் சாதிக்க வேண்டியதன் பெரும்பகுதி இனிதான் நிறைவேற வேண்டும். 1929ல் மதுவிலக்குப் பிரசாரத்தில் அவர் தீவிரமாக ஈடுபட்டார். இரு மேடைகளை அவர் இதற்காகப் பயன்படுத்தினார். இந்திய மதுவிலக்குச் சங்கத்தின் கௌரவப் பொதுக் காரியதரிசியானார். ஸி. ஆர். இந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று வற்புறுத்துமாறு மகாத்மாவைத் தொழிலதிபர் ஜி. டி. பிர்லா கேட்டுக் கொண்டார். சிரமமான இந்தப் பணியை மேற்கொள்ளும் அளவுக்கு ஸி. ஆருக்கு உடல் ஆரோக்கியம் இருக்கிறதா என்று ஐயுற்றார் காந்தி. எனினும் ஸி. ஆருக்கு எழுதுவதாக வாக்களித்தார்.

ஸி. ஆர். இந்த நியமனத்தை ஏற்றார். தவிர, மதுவிலக்குப் பிரசாரப் பொறுப்பை காங்கிரஸும் அவரிடமே விட்டிருந்தது. இது இரண்டாவது பிரசார மேடை.

பூரண மதுவிலக்கை அமல் படுத்துவதற்கு சட்டசபையிலும் அதற்கு வெளியேயும் எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப் பட வேண்டும் என்று கல்கத்தா காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. மேலும் அத்தீர்மானம், எங்கெல்லாம் சாத்தியமோ, விரும்பத் தக்கதோ அங்கெல்லாம் மதுக்கடை மறியலுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கூறியது.

மதுவிலக்குக்காக ஸி. ஆர். தயாரித்த ஒரு தேசியத் திட்டம் ஏப்ரல் மாத வாக்கில் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியினால் அங்கீகரிக்கப்பட்டது. அத்திட்டத்தை அமல் படுத்த டாக்டர் அன்ஸாரி, வல்லபாய், ராஜேந்திர பிரசாத் ஸி. ஆர். ஆகியோர் உள்ளடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டது.


ஸி. ஆரின் திட்டப்படி ஒவ்வொரு ராஜதானியிலும், ராஜதானி காங்கிரஸ் கமிட்டியுடன் இணைந்ததாக ஒரு மதுவிலக்குக் குழு இருக்கும். ஒவ்வொரு தாலுக்காவிலும் மதுவிலக்கு நிர்வாகி ஒருவர் இருப்பார். இவர் நகரங்களிலும் கிராமங்களிலும் மதுவிலக்கு சபைகள் அமைக்கப் பாடுபட வேண்டும். இச்சபைகள் கள்ளுக்கடை மறியல் செய்யலாம், மதுக்கடை லைசென்ஸுகள் ஏலம் விடப்படும் போது ஏலத்தில் பங்கு கொள்ள வேண்டாம் என்று கடைக்காரர்களைத் தடுத்து நிறுத்தலாம். மக்கள் மதுக்கடைகளுக்குச் செல்லாமலிருக்க ஆரோக்கியமான கேளிக்கைகளை நடத்தி அவர்கள் கவனத்தைத் திருப்பலாம். (தொடரும்)

தமிழாக்கம்: இ. ராஜேந்திரன்

எதிர்காலச் செல்வங்கள்

எங்கள் பக்கத்து வீட்டுப் பையன் சரவணன் படு சுட்டி. நான்கு வயதாகிறது. அவன் பிறந்ததிலிருந்தே நாளொரு டாக்டரும் பொழுதொரு மருந்துமாக வளர்ந்தவன். அவனுக்கு நடையும் பேச்சும் சரிவர வராமல் இருந்தது. அவன் தாய் அவனுக்காகப் பட்ட சிரமங்களின் பலன் இப்போது நன்கு நடக்கவும் பேசவும் வருகிறது. அவனை அருகிலிருக்கும் பள்ளியில் சேர்த்தோம். டீச்சர் அவனைச் சிறிய a b c dயும் கேபிடல் லெட்டரும் எழுதச் சொன்னாள். இவன் பெரிய A B C D எழுதி விட்டான். சிறியது சரியாக எழுத வராது. அதை டீச்சரிடம் சொல்லவும் வெட்கம். டீச்சர் இவன் அருகில் வந்து 'ஏன் ஸ்மால் லெட்டர் எழுதவில்லை?' என்று கேட்ட போது இவன் டக்கென்று ''இதற்கு மேல் எழுதினால் என் பலப்பம் ரொம்பத் தேய்ந்து விடும் டீச்சர்! நாளைக்கு எழுதுகிறேன்'' என்றான். டீச்சர் வாய் விட்டுச் சிரித்து விட்டாள். நாங்களும் பேச்சே சரியாக வராமலிருந்தவன் இவ்வளவு அழகாகச் சமயோசிதமாகப் பேசியது கேட்டு மகிழ்ச்சித் திகைப்பில் ஆழ்ந்து போனோம். மறுநாள் கட்டுப் பலப்பத்துடன் பள்ளிக்குப் போனான்.

- ர. வஸந்தி



ஆசைக்கு வயதில்லை

பட விமர்சனம்

கௌரவமும் கண்ணியமுமாக வாழ்ந்த ஒரு டாக்டர் நாற்பது வயதுக்கு மேலே 'சபலிஸ்டாகி' ஒரு பாடகியிடம் மையல் கொள்ளுவதும் அதனால் குடும்பத்தில் ஏற்படும் குளறுபடிகளும்தான் இந்த வயசில்லாக் கதை. வேறொரு தலைப்பில் இக்கதையை 'சோ' பல வருஷங்களுக்கு முன்பு மேடையிலே நடித்து வந்தார். இது இப்போது திரைப்படமாகியுள்ளது. பேச்சு, பேச்சு பேச்சு. ஏகமாக வசனம். அதுவும் சோ, மகேந்திரன், அசோகன், மனோரமா இருக்கும் போது எப்படி இருக்கும்?

மதராஸ் பாஷையை மருக்கொழுந்து (மனோரமா) பேசுவதும் அதற்கு சோ விளக்கம் தருவதும் நல்ல தமாஷ். சென்னைப் பாஷையிலேயே மனோரமா தம் சொந்தக் குரலில் ஒரு பாட்டும் பாடி 'மஜாய்க்கிறார்.'

கம்பவுண்டர் கந்தசாமியாக மகேந்திரனும், டாக்டரின் மைத்துனனாக சோவும், மருக்கொழுந்தாக மனோரமாவும் கொட்டகையை இரண்டு பண்ணுகிறார்கள். நாற்பதுக்கு மேலே மோகவலையில் சிக்கும் டாக்டர் ஐம்புலிங்கமாக முத்துராமன் வருகிறார். உழைத்து நடித்திருக்கிறார். உத்தம மனைவி சீதாவாக கே. ஆர். விஜயா தோன்றுவது நிறைவைத் தருகிறது.

நம்மை மறந்து சிரித்துக் கொண்டிருக்க வேண்டுமானால், அந்த ஆசையைத் தீர்த்துக் கொள்ள வயதை மறந்து இந்தப் படத்துக்குப் போகலாம்.



குன்றாத இளமையும் வலிமையும் பெற்று வாழ வேண்டுமென்ற பேராசையில் கரியமூர்த்தி என்ற துர்த் தேவதையைப் பூஜித்துத் தன் ரத்தத்தையே அதற்கு அர்ப்பணித்து வரம் பெறுகிறான் ஒருவன். அவன் ஆசை ஈடேற ஏழு கன்னிப் பெண்களைத் தனக்குப் பலியாக கேட்கிறது கரியமூர்த்தி. உடலால் தொண்டுகிழமானாலும் உருவத்தில் வாலிபனாகப் பல பெண்களை மயக்கிப் பலி கொடுக்கிறான். ஒரு பெண்ணிடம் உள்ளம் பறி கொடுத்து வாக்குத் தவறவே துர்த் தேவதை அவனையே பலி கொண்டு விடுகிறது. மலையாள நாடோடிக் கதை. தமிழில் டப் செய்யப் பட்டுள்ளது. கன்னிகளைக் கவரும் காளையாகப் பல வேஷங்களில் கமலஹாஸன் வருகிறார். லதா, ஷோபா, மீரா, குட்டி பத்மினி எல்லோரும் இருக்கிறார்கள். 'ஸ்பெல் பவுண்ட்' என்பார்கள் ஆங்கிலத்தில். அதை இந்தப் படத்தில் காண முடிகிறது. மேல் நாட்டுத் திகில் படங்களுக்கு இணையாகக் கதையைக் கொண்டு போயிருக்கிறார்கள். கலரும் காமிராவும் கச்சிதமாக உள்ளன. டைரக்ஷன், வின்செண்ட் — காமிரா அவர் மகன் ஜெயன் வின்செண்ட். தரத்துக்கு கேட்பானேன்?

ஸ்பரிச உணர்வைக் கொண்டே தன்னை முன்பு தீண்டியவர் யார் என்பதைப் பார்க்காமலேயே சொல்லிவிடக் கூடிய சக்தி ஒருவருக்கு இருக்குமானால்? இப்படி ஒரு சக்தி ஒருபெண்ணுக்கு ஏற்பட முடியுமா? இதென்ன கேள்வி? அது மாம்பழத்து வண்டு சினிமாவுக்குத் தேவைப்படுகிறது. எனவே அப்படி ஒரு சக்தி இருந்துதான் ஆகவேண்டும்! தேயிலைத் தோட்டத்து எஸ்டேட்டிலே தொழிலாளர் தலைவரின் செல்ல மகளான மேரி (சத்யப் பிரியா) உல்லாசமாக நீராடும்போது ஒளிந்து ஒளிந்து புகைப்படங்களாக 'கிளிக்' கிட்டுக் கொண்டு போகிறார்கள் மூன்று வாலிபர்கள் (மகேந்திரா, சரத்பாபு, ஜெய் கணேஷ்). இது மேரியின் அப்பா கொலை செய்யப்படுமுன். அவர் கொலையுண்ட போது மலைக் காட்டுக்கு விஜயம்செய்த அந்த மூன்றுபேர் மீதுதான் மேரிக்குச் சந்தேகம் வருகிறது. தன் ஸ்பரிச உணர்வுத் தத்துவத்தைக் கொண்டு அம்மூன்று வாலிபர்களிடமும் தன்னைத் தழுவுதற்கும் தடவுதற்கும் உட்படுத்திக் கொண்டு குற்றவாளியை இனங் காண முயல்கிறார். கவர்ச்சிக் காட்சிகளுக்கு வசதியாகக்கை கொடுக்கிறது மேரியின் இந்தத் திறமை.

போட்டோகிராபராக வரும் மகேந்திரன் ரொம்ப 'கிளாஸா'கச் செய்திருக்கிறார். 'எத்தனையோ பெண்களை





இனிக்கும் இளமை

படவிமரிசனம்

ஒரு படத்துக்கு 'A' முத்திரை குத்தி விட்டால் எதை வேண்டுமானாலும் காண்பிக்கலாமா? ஆபாசக் காட்சிகளால் கண்கூசச் செய்வது போதாதென்று, கொச்சையும் பச்சையுமான வசனங்களால் காதையும் கருத்தையுமே கூச வைத்திருக்கிறார்கள்.

இனிக்கும் இளமையின் கதை என்ன? கதையாவது கண்றாவி.

'ரயில்' — ராதிகாவையும் சுதாகரையும்வைத்து இப்படியொரு படம் எடுத்திருக்கவேண்டாம். டைரக்டர் காஜா தமிழ் திரைப்படத் துறையில் ரொம்ப கால அனுபவமுடையவராம். அந்த அனுபவம் அவருக்கு இப்படியொரு துணிச்சலைக் கொடுத்ததற்காக வேதனைப்படுகிறோம்.

பிராமணச் சமூகக் கிண்டல் இதில் ஒருபடி மேலேறிப் போய்விட்டது. மாதவய்யரின் (உசிலைமணி) உச்சிக்குடுமி நிஜமா, டோப்பாவா என்ற சவாலில் அவர் குடுமியைப் பாண்டு (பகோடா காதர்) பிடித்து ஆட்டுவதும் ஐயரின் மனைவிக்கு அவர் மீது ஆசை உண்டாகச் செய்ய அவன் ஆலோசனை கூறுவதும் ஹாஸ்யங்களாம். அந்த ஹாஸ்யத்தின் தலையில் இடிவிழ!

இனிக்கும் இளமை, கசப்பையும், ஏராளமான கலர் ஃபிலிம் வீணாகி இருக்கிறதே என்ற வேதனையையும் தான் ஏற்படுத்துகிறது.

மாம்பழத்து வண்டு

படவிமரிசனம்



எப்படி யெப்படியெல்லாமோ படமெடுத்திருக்கேன். ஆனால் உங்களைப் பார்த்ததும்தான்'' என்று மேரியிடம் அவர் தடுமாறுவதும் அவர் உடலைத் தடவும் போது காட்டப்படும் கூச்ச பாவங்களும் ரொம்பப் பிரமாதம்.

நைட் கிளப் பாடகராக வரும் சரத்பாபு கச்சிதமாக — மனத்துக்கு நிறைவாக நடித்திருக்கிறார். ஜெய் கணேஷ் கௌரவ நடிகர் போல இரண்டொரு காட்சிகளில் தோன்றுகிறார்.

சங்கர் கணேஷின் இசை இனிக்கும்படியிருக்கிறது. 'கோடாலிக் கொண்டை போட்டு கொர நாட்டுச் சேலை கட்டி' என்ற பாடலும் 'ஹலோ மீனு கண்கள் கடல் மீனு' என்னும் பாடலும் காதில் ஒலிக்கின்றன. ஆர். எம். வீரப்பனின் வித்தியாசமான இந்தக் கதைக்கு இருசூரான் வசனமெழுதியிருக்கிறார். ஆர். சி. சக்தியின் டைரக்ஷன் பரவாயில்லை. என்றாலும் உண்மைக் குற்றவாளி யார் என்பது படத்தைக் கவனமாகப் பார்ப்பவர்களுக்கு முன் கூட்டியே புரிந்து போகிறதே!

— கௌசிகன்


கேரளத்தில் தெற்கே கோடியிலுள்ள திருவாங்கூர் ராஜ்யம் வெள்ளையர் வருவதற்கு முன் 'வேணாடு' என்ற பெயரில் ஒரு சிறிய நாடாகவே இருந்தது. அதன் மன்னரை இன்னொரு பெரிய நாட்டு மன்னர் ஒருநாள் விருந்துக்காக அழைத்திருந்தார்.

சமையல்காரர்களுக்குக் கையாளாக இருந்த ஒரு சிறுவன், விருந்து நடந்து கொண்டிருந்த பொழுது குத்துவிளக்கின் சுடர்களில் ஒன்று சிறிது மங்கத் தொடங்கியதைக் கவனித்து ஒளியின் ஏற்ற இறக்கம் தெரியாமல், சுடர் தட்டிய கரியநாற்றம் வராமல், எண்ணெய் கீழே கொட்டவோ தன் கைகளில் படவோ செய்யாமல் திரி மாற்றினான். அவன் திறமை கண்ட மன்னர் மறுநாள் விடை பெறும்பொழுது, சிற்றரசரிடம் அந்தச் சிறுவனைத் தம்முடன் அனுப்ப முடியுமா? என்று கேட்டுப் பெற்று அழைத்துச் சென்றுவிட்டார். மன்னருக்கு அவனிடம் இருந்த பற்று அரண்மனையில் ஏற்கெனவே இருக்கும் அலுவலர்களுக்கு அவன் மீது ஒரு பொறாமையையும், பகையுணர்வையும் ஏற்படுத்தி விட்டன. அவனை, மன்னர் இல்லாத நேரங்களில் பலவாறு தொல்லைப் படுத்தினார்கள். அவனுக்கு மன்னரிடம் சென்று புகார் செய்யவும் விருப்பமில்லை. தலைமைச் சமையல்காரர் அவனைத் தேங்காய் அரைக்கச் செய்வார். எவ்வளவு அரைத்தாலும், போதாது இன்னும் வெண்ணெயாக அரை என்பார். ஒருநாள் அவன் கொஞ்சம் சுத்தமான வெண்ணெயையே எடுத்துக் கொண்டு போய், அந்தத் தலைமைச் சமையல்காரரிடம் காட்டி, ''போதுமா?'' என்றான். அவர் அதைத்தொட்டுப் பார்த்துவிட்டு, ''போதாது! இன்னும் நல்லா வெண்ணெய் போல் அரை'' என்றார். ஆத்திரம் வந்தவனாக அந்தச் சமையல்காரர முகத்தில் கையிலிருந்த வெண்ணெயை வீசி அடித்துவிட்டு அங்கிருந்து போய்விட்டான்.

அரண்மனை தலைமைச் சமையல்காரரை அவமானப் படுத்திவிட்டான் என்று மன்னரிடம் புகார் சென்றது. அவர் கட்டளைப்படி அரண்மனைச் சேவகர்கள் பல இடங்களிலும் தேடி அவனைக் கண்டுபிடித்து மன்னர் முன்னால் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அவன், அவர் காலில் விழுந்து விட்டான். நடந்த விவரங்களை அவருக்குச் சொன்னான். மன்னருக்குத் தலைமைச் சமையல்காரர் மீது ஆத்திரம் வந்தது. அவரைத் தலைமைச் சமையல்காரர் பதவியிலிருந்து தாழ்த்தி மாவரைக்கும் வேலை கொடுத்தார்! சிறுவனுக்கு நல்ல காலம் ஏற்பட்டது. மன்னருடைய சொந்த அலுவல்களைத் தவிர வேறு எந்த அலுவலையும் அவன் கவனிக்கவேண்டாம் என்று உத்தரவு பிறந்தது. சிறுவன் பெயர் ராமன். அவன் பிற்காலத்தில் அந்த மன்னரின் அமைச்சராகவும் தளபதியாகவும் இருந்து, 'வேணாடை' அடுத்திருந்த பலநாட்டு மன்னர்களையும் வென்று திருவிதாங்கூர் இராஜ்யமாக அதை மாற்றியமைத்தான். ஆட்சிமுறைகளில் எண்ணற்ற சீர்திருத்தங்களைச் செய்து சரித்திரப் புகழ் கொண்டான் தளவாய் ராமையன்.

— பரந்தாமன்

வெண்ணெயாகவும் — கரைந்தான், உறுதியாகவும் நின்றான்!



Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Guindy, Madras-600032. Editor: K. Rajendran



CHAITRA-G 97-TAM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசியக் காசு

கல்கி

KALKI 22-4-79
75 காசு



நெடுஞ்செழியன் பதில்கள்